311

311

# காவேரி

சர்வஜித் – ஆடி




8/ அணா

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

## கம்பெனி லிமிடெட்

( இந்தியாவில் ஸ்தாபிதம் 1933 )

தலைமை ஆபீஸ்: மதுரை

*

சிறந்த சேவை செய்து வருகிறது

**நெருப்பு, மோட்டார், விபத்து**

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000

*

கிளைகள் : பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, ராவல்பிண்டி.

*

பிரதம ஏஜண்டுகள்:

**ஏ. & எப். ஹார்வி லிமிடெட்**

மதுரை Etc.




# ஒவ்வொரு துறையிலும்

மனித சமூகம் விஞ்ஞான முன்னேற்றத்திற்கு, முக்கியமாக ரஸாயன, மருந்து ஆராய்ச்சிகளுக்கு, வெகுவாக கடமைப் பட்டுள்ளது. ரஸாயனம், மருந்து வகை ஆராய்ச்சிகள் மூலம் இன்று வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் மக்கள் ஆரோக்கியமிக்க சௌகர்ய வாழ்க்கையை அனுபவிக்கின்றனர் வாழ்க்கையின் அமைப்பையே மாற்ற வல்ல கணக்கற்ற புதிய வஸ்துக்களை ரஸாயன ஆராய்ச்சிகள் நமக்கு அளித்துள்ளன. இவற்றுள் நவீன தொழிலுற்பத்திகளுக்கு அவசியமானவை சில மூல ரஸாயனங்கள். நம இந்தியாவின் தொழிலுற்பத்திக்குத் தேவையான ரஸாயனப் பொருள்கள் உற்பத்தியில் மேட்டூர் கெமிகல் அண்ட் இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் தனக்கென ஒரு சிறந்த ஸ்தானத்தை ஏற்கனவே வகித்து வருகின்றனர்.

'காவேரி பிராண்ட்' சிறந்த மேட்டூர் கெமிகல்ஸின் சின்னம்.

வெளியிடுவோர்:

**மேட்டூர் கெமிகல் அண்ட் இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்**

மானேஜிங் ஏஜென்ட்ஸ்:

**சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சினாப்பள்ளி**

---

பூரண விற்பனை ஏஜெண்டுகள்:

**அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்,**

**120, அரமனைக்கார வீதி, மதராஸ் 1.**

கிளை ஆபீஸ்கள்:

பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கோயம்புத்தூர், ஹைதராபாத், கும்பகோணம், மேட்டூர் அணை, திருச்சினாப்பள்ளி, திருவனந்தபுரம்

சென்னை-600 008



# உங்கள் குழந்தை

குழந்தைகளின் வளர்ச்சிக்கு நிம்மதியான தூக்கம் மிகவும் அவசியம். குழந்தை தூங்காமலும், அடிக்கடி அழுதுகொண்டும் இருந்தால் உடம்பில் ஏதோ கோளாறு இருக்கிறதென்றே அர்த்தம்.

குழந்தைக்கு காய்ச்சலோ, மலச்சிக்கலோ அல்லது ஏதாவது வலியோ இருக்கிறதென்று தெரிந்தால் உடனே 'க்ரைப் கால்' கொடுங்கள். உடனே கண்டிப்பாய் குணமாகிவிடும். குழந்தை சுகப்படும், நன்ருகத் தூங்கும். நீங்கள் பெருமகிழ்ச்சியடையும் முறையில் குழந்தையைக் காண்பீர்கள்.

எப்பொழுதும் க்ரைப்-கால் பாட்டல் ஒன்று கைவசம் வைத்துக்கொள்ளுங்கள். பல்முளைக்கும் சமயத்தில் மிகவும் அவசியம்.

Meclec

# க்ரைப்-கால்



எல்லா குழந்தைகளின் நோய்களுக்கும்

தி மெக்லெக் நியூட்ரிமென்ட்ஸ் அன் பார்மஸூடிகல்ஸ் லிட்.

99, எ, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. மதராஸ்

அடுத்த விளையாட்டுப்
பந்தயத்தில்



அம்ருதா
ரத்த சுத்தி
திராவகம்..



கலக்கம், ஆயாச மில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

கேசரி குடீரம் லிட், மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு

ஏஜண்டுகள்:-

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பேர் ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.


## "காவேரி" ஏஜண்டுகள்:

**பம்பாய்:**

M/s. சரோஜினி ஸ்டோர்ஸ்,
ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்,
பீம்டிவாலா பில்டிங்ஸ்,
மட்டுங்கா. (G. I. P.)

**நியூ டெல்லி:**

K. P. அனந்தன்,
19-E, மிண்டோ ரோட் வெஸ்ட்,
நியூ டெல்லி.

**திருநெல்வேலி:**

M/s. K. G. செல்லையா & பிரதர்,
ஆனந்தவிகடன் & காவேரி ஏஜண்டு,
திருநெல்வேலி ஜங்ஷன்.

**திருக்காட்டுப்பள்ளி:**

T. S. அப்துல் கபூர்,
நியூஸ் ஏஜண்ட்,
திருக்காட்டுப்பள்ளி.

**மதுரை:**

S. மாரியப்ப கோன்,
"மதுரை நியூஸ் ஏஜன்ஸி,"
42, வடக்கு சித்திரை வீதி,
மதுரை.

# BITA CAFFIN

## பிடாகாபின்

(தலைவலி மாத்திரைகள்)




தலைவலி, பல்வலி, கால்களிலும் மூட்டுகளிலும் வலி, சூதகத்தின் போதுள்ள வலி முதலிய சகல வலிகளையும் நீக்கும். தூக்கமின்மை, மலேரியாசுரம் இவைகளையும் கண்டிக்கும். இருதயத்துக்கோ, குடலுக்கோ எவ்வித தீங்கும் செய்யாது.

**எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்**

**மூன்று மாத்திரைகள் கொண்ட பாக்கெட் அணா 1**

# BITA LAX

## பிடாலாக்ஸ்

(இனிப்பான சாக்லெட் சுகபேதி)

இலேசாகவும், சுகமாகவும், மலச்சிக்கலை போக்க வல்ல குணமுள்ளது.

**எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்**




*Stockist:—*

**M/s DADHA & Co., P. T. Madras**

Manufactured by:—

BOMBAY TABLET MANUFACTURING COMPANY,
Post Box 2092, 176, Zaveri Bazaar, BOMBAY 2

---

★  ★


**உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்**

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

# மார்கோ சோப்

டாய்லட் & மெடிஸினல்

**கல்கத்தா கெமிகல்**

**CALCUTTA CHEMICAL**




# பொருளடக்கம்

சர்வஜித்து மலர் 6 | ஆடி இதழ் 12

ஐக்கிய இந்தியா 7

மாறுதல் வேண்டும் 10
பண்டித ஜவாஹர்லால் நேரு

கதம்பம் 15

ஐயரின் குருகுலம் 17
யோகி சுத்தானந்த பாரதியார்

ஓரிளைஞனுக்குக் கடிதம் 25
வே. சாரநாதன்

மருத்துவனுக்கப்பால் 30
ரா. ஸ்ரீ. தேசிகன்

ஜெபுன்னிஸாவின் தோல்வி 33
எஸ். என். ராஜலக்ஷ்மி

சித்ரா 37
கே. சுந்தரம்மாள்

கடல் 49
ஆர். கே. விசுவநாதன்

பரிசு 53
சுகாதி

மனமே ராஜ்யம்! 63
உமா ஸ்ரீனிவாஸன்

சுதாவின் பிறந்தநாள் 65
"மானஸிகன்"

அரண்மனைப் பாலம் 73
எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்

வானவில்லின் வண்ணங்கள் 78
நா. கி. நாகராசன்

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

19884



மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.




# WOODWARD'S
## GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

**Agent:—T. T. KRISHNAMACHARI & Co.**

**12A Lingha Chetty Street** — **G. T. MADRAS.**

# காவேரி

சர்வஜித்து மலர் 6 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | ஆடி இதழ் 12


## ஐக்கிய இந்தியா

ஆகஸ்ட் 15உ இந்தியா விடுதலை பெறுகிறது. அன்று பிரிட்டிஷ் அதிகாரம் இந்தியாவில் ஓய்ந்துவிடுகிறது. இதைக் குறித்து நாம் மகிழ்ச்சி அடைய வேண்டியதே.

இத்தகைய பெரிய நிகழ்ச்சியை மக்கள் வெகு குதூகலத்துடன் கொண்டாட வேண்டும். என்று கிடைக்கும் சுதந்திரம் என்று ஏங்கி நின்ற நமக்கு அது எளிதில் கிடைத்துவிட்டதென்றால் கங்கு கரை யற்ற சந்தோஷம் இருக்கவேண்டு மல்லவா ?

ஆனல் நாட்டில் நாம் காண்பதென்ன ? மக்களிடையே ஓர் ஏக்கம்; ஓர் ஏமாற் றம். பாகிஸ்தான் ஏற்பட்டது ஒரு பெரிய துர்ப்பாக்கியம்; அது பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் சூழ்ச்சியின் பயனால் ஏற் பட்டது என்று மக்கள் நம்புகிறார்கள். விடுதலை பெற்றும் அங்க ஹீனமாய் விட்டால் வருத்தம் இருக்கத்தானே செய்யும்!

நிகழ்ந்தது நிகழ்ந்து விட்டது. இனியா வது இந்தியாவில் ஐக்கிய உணர்ச்சி ஏற்படும்படி சட்ட திட்டங்கள் செய்து கொள்வது மேல். சுதேச மன்னர்களையும் மிரட்டி உருட்டாமல் நல் வார்த்தைகளா லும் ராஜ தந்திரத்தாலும் நம் பக்கம் இழுத்துக் கொள்வதுதான் மேல். அப் படியே ஓரிரண்டு ஸமஸ்தானங்கள் தனித்து நிற்பினும் அதை உடனே அடக்க முயற்சிக்காமல், காலக்கிரமத்தில் அதை நம் வசப்படுத்த முயல்வதுதான் நல்ல முறையாகும்.

ஐக்கிய இந்தியா இனி வெற்றிகரமாகத் தலை எடுக்க வேண்டுமென்றால் மத்திய அரசாங்கம் மிகவும் பலம்பொருந்திய தாகவும், தீர்க்கதரிசிகளைக் கொண்ட தாகவும் இருக்கவேண்டும். பாஷாவாரி யாக மாகாணங்கள் அமைக்கப்படினும், பாஷையின் பேரில் புதிய ஜாதிகள் சிருஷ்டிக்கப்பட்டு, ஒருவருக் கொருவர் போட்டியோ பகைமையோ ஏற்படா வண்ணம் காக்கவேண்டும். பொது விஷ யங்களில் ஜாதி மதம் பாஷை இவை களால் ஏற்படும் பிரிவினைகளை எடுத் துக் காட்டாதபடி சட்டதிட்டங்கள் அமைக்கப் படவேண்டும். இந்தியா விலுள்ள முஸல்மான்களைப் பாகிஸ் தானத்தைச் சார்ந்தவர்கள் என்ற எண்ணத்துடனேயே நடத்தி வர வேண்டும். பாகிஸ்தானுக்கும் இந்தியா வுக்கும் நாளை சச்சரவு ஏற்பட்டால் இவர்கள் எவ்வகையில் நடந்து கொள் வார்கள் என்பது நாம் புதிதாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷய மல்ல. அவர்களை நாம் ஒதுக்க வேண்டு மென்று கூறவரவில்லை. அவர்களும் நம்முடன் சமமாகப் பழகட்டும். ஆனல் வருங்காலத்தில் நமக்கே கோடரிக் காம்புகளாக அமையக்கூடும் என்பதை மனதில் இருத்திக்கொண்டு அவர்களை நாம் கவனித்து வரவேண்டும். ஜின்னா சொல்லியபடி முஸல்மான்கள் வேறு தேசத்தினர் என்பதை நாம் மறக்க லாகாது.

பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளி யேறி விடுவார்கள் என்பது உண்மையா யிருக்கலாம். ஆனல் அவர்களது சூழ்ச்சி அற்றுவிடும் என்று நினைப்பது தவறு. பாகிஸ்தானத்தில் அவர்களுக்குப்பெருத்த சலுகைகள் கிடைக்கும். அங்கிருந்து கொண்டு ஐக்கிய இந்தியாவிலுள்ள வித்யாசங்களைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கலாம். பாகிஸ்தான் பிரதேச மும் நாடாசை அற்று இருந்துவிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. முன்ன மேயே 'காரிடார்' கேட்டிருக்கிறார் ஜின்னா.

எனவே ஐக்கிய இந்தியாவிலுள்ள மக்களை ஒன்று திரட்டி, திட மனப் பான்மையுடன் ஆள்வதுதான் இன்று நாம் கவனிக்க வேண்டிய விஷயம். கலகங் களுக்கோ வேற்றுமை மனப்பான்மை களுக்கோ இனி இடங்கொடுக்கக் கூடாது. கொஞ்சம் தளர்ந்தால் எதிரி புகுந்து கொள்வான்.

நமது தலைவர்களின் பொறுப்பு இனி மேல்தான் அதிகம். பொது மக்கள் அவர் களுக்குப் போதிய பலத்தை அளிப்பார் களாக!

**BMB** மிஷீன் கலப்பைகளின் வெளிப்படையான உண்மைகள்

1. ஒரு நாளைக்கு சுமார் 2 ஏக்கரா பூமியை ஏர் உழும் 10 ஏக்கராவை பரம்படிக்கும்.
2 களைவெட்டுதல், பயிரிடுதல் விதை விதைத்தல், உரமிடுதல் முதலிய வேலைகளைச் செய்யவும்.
3. சுமை இழுக்கவும், பெல்டினுல் ஓட்டப்படும் யந்திரங்களை உபயோகிக்கவும் உதவும்
4. மிகக் குறைந்தசெலவிலும், அதிக கவனிப்பில்லாமலும், எல்லாவித கால நிலைகளிலும் எவ்வித தொந்தரவும் கொடுக்காமல் உழைக்கும்



1. குதிரை ஓட்டம் (HP.)
3. குதிரை ஓட்டம் (HP.)
6. குதிரை ஓட்டம் (HP )

முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

**ஸிம்ஸன் & கம்பெனி லிமிடெட்.**

மவுண்ட்ரோட். மதராஸ்.

கிளைகள்: பங்களூர், உதகமண்டலம், திருச்சிஙுப்பள்ளி, ஹைதராபாத் (Dn).

# இந்திய சுதந்திர காவேரி மலர்

ஆகஸ்ட் 15உ யன்று இந்தியமக்கள் தாங்கள் இழந்த சுதந் திரத்தை மீட்டுக்கொள்ளுகிருர்கள். 1941-ல் அதே தேதியில் உதயமான **காவேரி** சுதந்திரம் பெற்ற மக்களுக்கு **இந்திய சுதந்திர மலர்** ஒன்றைச் சமர்ப்பிப்பாள்.

மலரினின்று மணம் கமழ்வது இயல்பு. ஆனல் இப்பணியில் பெரிய தலைவர்களின் ஈடுபாடுமிருந்தால் கேட்பானேன். தலைவர் களின் போட்டோக்களும், கட்டுரைகளும், சித்திரக்காரர்களின் வர்ண ஓவியங்களும், கண்ணைப்பறிக்கும் நடன நக்ஷத்திரங்களின் காட்சிகளும் மலரை வசீகரப்படுத்துகின்றன.

இம்மலர் வாடாமலராக, சுதந்திர நினைவு மலராக, என்றும் இருக்கும்படி அமைக்க முயன்றுவருகிறோம். எனவே எல்லோரும் இதை வாங்கி அனுபவிக்கும்படி அதன் விலையை நிர்ணயித் துள்ளோம்.

பல இன்னல்களின் காரணமாக, கொஞ்ச பிரதிகளே அச்சிட முடிகிறது. எனவே பிரதி வேண்டுவோர் முன்னதாகவே உங்க ளூர் ஏஜண்டிடமோ அல்லது நம் காரியாலயத்திலோ முன் பணம் கட்டிப் பதிவு செய்துகொள்ளவும்.

**மலரின் விலை ரூ. 2/-**

# மாறுதல் வேண்டும்

பண்டித ஜவாஹர்லால் நேரு

பழமையென்பதற்காக அதனிடம் குருட்டுத்தனமாகப் பக்தி விசுவாசம் கொள்வது தவறு; அதை அருவருப்புடன் ஒதுக்கித் தள்ளுவதும் சரியல்ல. இவ்விரண்டுவித மனோபாவங்களினாலும் எதிர்கால வாழ்வை நிர்மாணிக்க முடியாது. நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்த காலத்திலிருந்தே தான் கிளைத்தெழுகின்றன. இதை நாம் மறந்து விடுவது தேசிய வாழ்வின் ஆணி வேரையே வெட்டி விடுவதாகும். மக்கள் மனதைத் திருப்பும் ஒரு மகத்தான சக்தியை அலட்சியம் செய்வதாகும். தேசியம் என்பது நமது பழம் பெருமைகள், அனுபவங்கள், சாதனைகள், முதலியவைகளில் ஊறிய நினைவேதான். ஒருவித கதம்ப உணர்ச்சி. எந்தக் காலத்தையும்விட அதிகமாக, இன்று தேசிய உணர்ச்சி பலம் பொருந்தியதாகவே இருக்கிறது.—தேசியத்தின் காலம் மாறிவிட்டது; செழித்து வளர்ந்து வரும் சர்வ—தேசியத்திற்கு அது தன் ஸ்தானத்தை இழக்க வேண்டியதுதான்—என்று பலர் கருதினர். வர்க்கப் பிரச்னைகளிலேயே ஊறிக் கிடக்கும் சமதர்மவாதிகள்—தேசியமரபு, பண்பாடு என்பதெல்லாம் அழிந்துவரும் மத்ய வகுப்பாரின் அளப்புகள்—என்று ஏசினர். முதலாளித்துவமோ—தேசிய எல்லைகளை மீறி, கூட்டுக் கம்பெனி, கார்ட்டெல், முதலியவைகளின் வளர்ச்சியால் வர வர, சர்வதேசியமயமாகிவிட்டது. கைத்தொழில் வியாபார அபிவிருத்தி, துரிதமான போக்குவரத்து, ரேடியோ, சினிமா, இவையெல்லாம் சேர்ந்து சர்வ தேசிய மனோபாவத்தை மேலும் மேலும் வளர்த்ததோடு, தேசியத்திற்கு அந்திம காலம் நெருங்கிவிட்டது என்ற மயக்க நினைவையும் தோற்றுவித்தது.

எனினும், ஏதாவது நெருக்கடி ஏற்பட்டால், தேசியம் வீறுகொண்டெழுந்து தனக்குரிய ஸ்தானத்தை ஆக்கிரமித்துக்கொள்ளுகிறது. மீண்டும், மக்கள் தமது பழம் பெருமைகளிலும், தேசிய பாரம்பரியங்களிலும் கிளர்ந்த உணர்ச்சிகளிலுமே தெம்பும், ஆதரவும் பெறுகின்றனர். நாட்டின் வளத்தையும், பழம் பெருமைகளையும் புதுக் கண்ணோட்டத்தில் காண்பது நவயுகத்தின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். மேற்கண்ட முறையில், பண்டைச் சிறப்புகளில் மீண்டும் கவனம் செலுத்த முன் வந்தவர்கள்—சர்வ தேசிய ஆக்க வேலைகளில் ஆர்வங்கொண்டு முன்னணி வீரர்கள் என்று கருதப்பட்ட தொழிலாளி. உழைப்பாளி வர்க்கத்தினர்கள்தான்! யுத்தமும், அதுபோன்ற பிற நெருக்கடிகளும் அவர்களுடைய சர்வதேசியத்தை அழித்துவிடுகிறது. அவர்களும் மற்றவர்களைப்போல, மற்றவர்களைவிட அதிகமாக, தேசிய விருப்பு, வெறுப்புகளுக்கு ஆளாகின்றனர். சோவியத் யூனியனின் சமீபகால சம்பவங்களே இதற்குப் போதிய சான்றாகும். அதன் சமூகப் பொருளாதார அமைப்பின் சிறப்பியல்புகளை எந்த விதத்திலும் விட்டுக்கொடுக்காமல், அதன் தேசிய மனோபாவம் வளர்ந்துவிட்டது. சர்வதேச உழைப்பாளிகளிடமுள்ள உற்சாகத்தைவிட, தந்தையர் நாட்டுப்பாசம் வலுவடைந்து விட்டது. சரித்திரப் பிரசித்திபெற்ற பழங்காலப் பெரியோர்களின் பெயர்கள் முன்னணிக்கு வந்து, சோவியத் மக்களுக்கு வீர திலகங்களாக விளங்குகின்றன.

இந்த யுத்தத்தில், சோவியத் மக்கள் மகத்தான பலமும் ஒற்றுமையும் பெற்று ஒரு உன்னத ஸ்தானத்தை வகித்தனர். இதன் விளைவாக—சமூக நலனில் பெருவாரியான முன்னேற்றம், திட்டமிட்டுப் பொருளுற்பத்தி செய்து விநியோகிக்கும் சாதனங்களின் சிறப்பு, விஞ்ஞான அறிவு வளர்ச்சி, ஆக்க வேலைகளில் அதைப் பயன்படுத்தும் முறைகளில் அபிவிருத்தி, எல்லாவற்றிற்கும் மேலாக, புத்துணர்வோடு சாதுர்யமாகத் தலைமை தாங்கும் திறமை—முதலியவை ஏராளமாக வெளிப்பட்டன. இவைகளெல்லாம் அவர்களுடைய சமூகப் பொருளாதார அமைப்பு முறையாலும், ஒப்பற்ற தலைமையினாலுமேதான் என்பதில் சந்தேகமில்லை. எனினும் தேசிய நினைவுகளும், பண்டைப் பெருமைகளைப் புதுக் கண்ணோட்டத்தில் கண்டுணர்ந்து அந்தப் பாரம்பரியமே இன்றும் தொடர்ந்து வருகிறது என்ற உணர்ச்சியும் ஒரு அளவிற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் ரஷியா இன்று பழங்காலத்துத் தேசியத்திற்கே திரும்பிவிட்டது என்று நினைப்பது தவறு. ரஷியப் புரட்சியைப் பற்றிய மகத்தான

அனுபவங்களையும், அதன் பின்கால விளைவு களையும் லேசில் மறந்துவிடமுடியாது. சமூக அமைப்பிலும், மக்களின் மனோபாவத் திலும் ஏற்பட்ட மாறுதல்களும் அப்படியே இருக்கத்தான் இருக்கும். அந்தச் சமூக அமைப்பு நாளா வட்டத்தில், ஒருவித சர்வ தேசியத்திற்கே வழிகாட்டும். இருந்தாலும், புதிய சூழ்நிலைக்கு ஏற்ப, மக்களுக்கு மகத் தான பலத்தை வழங்கும் விதத்தில் தேசியம் இன்றுபுத்துயிர் பெற்று உலவுகிறது.

சோவியத் குடியரசின் வளர்ச்சியையும், பிற நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சி களின் பலதரப்பட்ட நிலைமையையும் ஒப் பிட்டுப் பார்ப்பது நல்லது. சோவியத் புரட்சி ஏற்பட்ட உடனே மற்றெல்லா நாடுகளிலும், பெருவாரியான மக்களிடை யே—சிறப்பாக உழைப்பாளிகளிடையே—மகத்தான உற்சாகம் பீரிட்டுக் கிளர்ந் தெழுந்தது. இதிலிருந்துதான் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவாயின. பிறகு இவைகளுக் கும் தேசியத் தொழிற் கட்சிகளுக்கு மிடையே எதிர்ப்பு மூண்டது. சோவியத் ஐந்து வருஷத் திட்டங்கள் உருவானபோது மீண்டும் எங்கும் ஆர்வமும் உற்சாகமும் தழைத்தன. எனினும் இது தொழிலாளி களைவிட, படித்த மத்தியதர வகுப்பாரையே அதிகமாகக் கவர்ந்தது. ஆனால் சோவியத் குடியரசில் எதிரிகளை ஒழித்துக் கட்டும் முறைகள் உலகெங்கும் எதிர்ப்புணர்ச்சியை மேலோங்கச் செய்தது. சில நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒடுக்கப்பட்டன. மற்ற நாடுகளில் சிராக வளர்ந்தன. ஆனால் எல்லா நாடுகளிலுமே சாதாரண தேசியத் தொழிலாளர்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கு மிடையே பகைமையும் துவேஷமும் மூண்டன. இது ஒரு அளவுக்குத் தொழிலா ளர்களுடைய குறுகிய மனப்பான்மையா யிருக்கலாம். எனினும், கம்யூனிஸ்டுகள் ஒரு அயல்நாட்டுக் கட்சியின் பிரதிநிதிகள். அவர்களுடைய கொள்கைகளும் நடவடிக் கைகளும் ருஷியாவினாலேயே உருவாக்கப் படுகிறது என்ற எண்ணத்தினாலேயே பெரும்பாலும் எதிர்ப்பு வளர்ந்தது. தொழி லாளர்கள் தாமும் பொதுவுடைமைக்கொள் கையில் பற்றுக்கொண்டிருந்தாலும், கம்யூ னிஸ்டுகளுடைய ஒத்துழைப்பை ஏற்றுக் கொள்ள முடியாதபடி, அவர்களுடைய தீவிர தேசிய மனோபாவம் முட்டுக்கட்டை யாக விருக்கிறது. சோவியத் கொள்கையில் ஏற்பட்டமாறுதல்களை ரஷியாவின் நிலைமை யை யொட்டிக் கவனித்தால் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. என்றாலும் அவைகளையே பிறநாடுகளிலுள்ள கம்யூ னிஸ்டுகள் ஆதரிக்க முற்படும்போது அதைக் கொஞ்சங்கூடப் புரிந்துகொள்ளு வதற்கில்லை. ருஷியாவுக்கு எவை எவை நன்மையளிக்கிறதோ அவையெல்லாம் உலகத்திற்கும் நன்மை யளிப்பதாக இருக் கத்தான் வேண்டும்—என்ற அடிப்படையில் வேண்டுமானால் அதைப் புரிந்துகொள்ள லாம். இது போன்ற கம்யூனிஸ்டுக் கட்சிகள் அறிவும், ஆற்றலுமுள்ள சிறந்த (ஆண், பெண்) நபர்களைக் கொண்டிருப்பினும், மக்களுடைய தேசிய மனோபாவத்துடன் தொடர்பற்று விட்டதால் வலுவிழந்து விட்டது. சோவியத் குடியரசு தனது தேசிய பாரம்பரியத்துடன் புதுவிதத் தொடர்புகள் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், மற்ற நாடுகளிலுள்ள கம்யூ னிஸ்டுகள் தேசியத்தைவிட்டு நாளுக்குநாள் விலகிக்கொண்டே செல்லுகின்றனர்.

பிற இடங்களில் என்ன நடந்தது என்ப தைப்பற்றி அனுபவ பூர்வமாக எடுத்துச் சொல்ல என்னால் இயலாது. எனினும் இந்தியாவைப்பற்றி நானறிவேன். இங்கே கம்யூனிஸ்டுக் கட்சி, மக்கள் இதயத்தில் நிறைந்திருக்கும் தேசிய மரபுகளையும் அபி லாஷைகளையும் சிறிதுகூட அறிந்துகொள்ள வில்லை. முழுக்க முழுக்க, அதைவிட்டு விலகியே இருக்கின்றது. கம்யூனிஸம் என்றால் பழமையை (கடந்த காலத்தை)க் கட்டாயம் வெறுத்து ஒதுக்கித் தள்ளத்தான் வேண்டும் என்று அது நம்புகிறது. அது சம்பந்தப்பட்ட வரையில் 1917-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில்தான் உலக சரித்திரமே ஆரம்பமாகிறது. அதற்குமுன்பு நடந்தவை களெல்லாம் அதற்கு ஆயத்தம் செய்து வழி வகுப்பதற்காகவேதான் என்பதே அவர்கள் நினைப்பு. பெருவாரியான மக்கள் பட்டினி யும் பசியுமாக அவதியுற்று, பொருளாதார அமைப்பே சீர்குலைந்து கிடக்கும் இந்தியா போன்ற நாட்டில், சாதாரணமாக, பொது வுடைமைக் கொள்கை பெரும்பாலோரு டைய கவனத்தையும் கவர்வது இயல்பே. அதுபோன்ற உணர்ச்சி ஒருஅளவுக்கு இருக் கிறது. ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சி அதை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளமுடியாது. ஏனெனில் மக்கள் உள்ளத்தில் ஊற்றெடுத் துப் பெருகும் தேசிய உணர்ச்சிகளினின்றும் தம்மை வெட்டிக் கொண்டுபோய், தனித்து நின்று, பொது மக்களுக்குப் புரியாத ஒரு மொழியில் பேசுகிறது. அது மக்கள் மன தில் பதிவதில்லை. அவர் இதயத்தில் எதிரொலிப்பதில்லை. திறனிருந்தும், ஒரு சிறு கூட்டமாகவே இருந்து வருகிறது, வேரோடாத செடியைப்போல.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மட்டுந் தான் இப்படி வழி தவறிவிட்டதென்ப

தில்லை. இன்னும் அநேகர் இருக்கின்றனர். நவயுகத்தைப் பற்றியும், நவயுக சம்பிரதாயங்களைப்பற்றியும் சமத்காரமாகப் பேசுவார்கள். ஆனால் நவயுக எழுச்சிக்கே அடிப்படையான உணர்ச்சியையோ, மேற்கத்திய கலாசாரத்தின் முக்கிய அம்சங்களையோ, சரியாகச் சீர் தூக்கிக் காணும் திறனற்றவர்கள். அத்துடன் தமது தாயகத்தின் கலாசாரம், பண்பாடுகள்கூடத் தெரியாமலிருக்கின்றனர். கம்யூனிஸ்டுகளுக்கிருப்பது போல அவர்களை இயக்கும் லட்சியமும் ஒன்றுங் கிடையாது. முற்போக்குப் பாதையில் உந்தித் தள்ளும் இதர சக்திகளும் எதுவுமில்லை. மேனாட்டு வெளி வேஷத்தையும், அதன் ஆடம்பரத்தையும் கண்டு, அதனுடைய விரும்பத்தகாத அம்சங்களிலே மதிமயங்கி—முற்போக்கில் வழி வகுத்துச் செல்லும் நாகரிகப் பாதையின் முன்னணியிலேயே தாம் இருப்பதாக எண்ணி, அகமகிழ்கிறார்கள். இந்தப் பேதைகள், தங்கள் ஆழமற்ற மடமைக் குட்டையிலேயே அமிழ்ந்து கிடந்து, சிற்சில பெரிய நகரங்களில் மட்டுமே தமது வாழ்க்கையைக் கழிக்கிறார்கள். அந்தச் செயற்கை வாழ்வில் மேனாட்டுக் கலாசாரத் தொடர்போ கிழக்கத்திய பண்பாட்டில் ஒன்றிய வாழ்வோ எள்ளளவும் இருக்காது.

ஆகவே பழைய வாழ்விலேயே மீண்டும் வாழ்வதினாலோ, அல்லது பழமையையே தவிர்த்து விடுவதினாலோ மட்டும் தேசிய முன்னேற்றம் ஏற்பட்டுவிடாது. நமது தேவைக்குத் தக்கபடி புது வார்ப்படங்களை அமைத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் அவை பழமையுடன் இணைந்தும் இருக்க வேண்டும். சில சமயங்களில் புதிய அச்சு பழசைவிட மாறுபட்டிருப்பினும் பழைய வார்ப்படங்களின் சாயலாகவே இருக்கிறது. இதன்மூலம் ஆதிநாள்முதல் ஒருவித இடைவிடாத வளர்ச்சியே இருந்துவருகின்ற உணர்ச்சியைத் தோற்றுவித்து, மனித இனத்தின் சரித்திரமென்ற மாபெரும் சங்கிலித் தொடரில் இதுவும் ஒரு கரணை என்ற எண்ணத்தை எழுப்புகிறது. காலத்தை யனுசரித்து, பழைய கொள்கைகளை மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொண்டு, இடைவிடாத வளர்ச்சியில் ஈடுபட்டிருப்பதற்கு இந்திய சரித்திரமே சிறந்த உதாரணமாகும். இதனாலேயே மஹேஞ்சோதாரோ காலத்திற்கும் நமது காலத்திற்குமிடையே எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுங்கூட, கலாசாரத்தில் இடை வெளியிருப்பது போன்ற உணர்ச்சியே தோன்றவில்லை. ஒருபுறம் பழமைக்கும், பரம்பரை வெளித் தோற்றங்களுக்கும் விசுவாசம் இருந்தபோதிலும், அறிவு சுதந்தரமும், வளைந்து கொடுக்கும் மனோபாவமும் சகிப்புணர்ச்சியும் கலந்தபடியே இருந்திருக்கிறது. ஆகவே புறத்தோற்றத்தில் பழசாக இருந்தாலும் உள்ளுணர்வு மட்டும் மாறிக்கொண்டே இருந்தது. அப்படியில்லாவிட்டால், வேறு எந்த விதத்திலும், ஆயிரக்கணக்கான வருஷங்களாகச் சமூகம் அழிந்து ஒழிந்து சிதைந்து விடாமல், ஜீவனுடன் வாழ்ந்திருக்க முடியாது. உயிர்த் துடிப்பும், வளர்ச்சியும் ஒருங்கேயமைந்த மனசால்தான் பரம்பரைக் கட்டுப்பாடுகளை மீற முடியும். அது போன்ற புறத்தோற்றந்தான் (வாழ்க்கைக்கு) தொடர்ச்சியையும், நிரந்தரத் தன்மையையும் அளிக்க முடியும். எனினும் இவைகளுக்கிடையே யுள்ள சமநிலை குறைந்தால் ஒன்று மற்றதை மறைத்து அமுக்கி விடலாம். இந்தியாவில் சமூக நடவடிக்கைகளில் சில கட்டுப்பாடுகளும், அத்துடன் தனிமனித சிந்தனைக்கு எல்லையற்ற சுதந்தரமும் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் நாளா வட்டத்தில் இந்த வெளிச் சம்பிரதாயங்களே முக்யத்துவம் பெற்று, நடைமுறையில் (சாஸ்திர சம்மதமில்லாவிட்டாலும்) சிந்தனைச் சுதந்தரத்தைப் பறித்து, அதற்கு எல்லை வகுத்துக் கட்டுப்பாட்டுக்குள்ளாக்கி விட்டது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சிந்தனைச் சுதந்தரம் அறவே கிடையாது. சமூக நடவடிக்கைகளிலும் இவ்வளவு கடுமையான கட்டுத்திட்டங்கள் கிடையாது. ஆகவே ஐரோப்பா சிந்தனைச் சுதந்தரத்திற்காகத் தொடர்ந்து போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதன் பலனாக, சமூக அமைப்பு முறையும் மாறிக் கொண்டே வந்தது.

சீனர்களுக்குப் பழைய சம்பிரதாயங்களில் மிகுந்த பாசமிருந்தபோதிலும், இந்தியாவைவிடச் அதிகமாகச் சீனாவில் எண்ணச் சுதந்தரம், சகிப்புணர்ச்சி, காலத்திற்கேற்ப வளைந்து கொடுக்கும் இயல்பு முதலியவை நிறைவுபெற்றிருந்தன. சில சமயம் சம்பிரதாயங்கள் மாறுதலைத் தாமதப்படுத்தின. எனினும் அவர்கள் பழைய 'ஆசுகளையே' ஏற்றுக் கொண்டாலும், மாறுதலுக்காகப் பயப்பட்டதில்லை. இந்தியாவைவிட சீன சமூகம், ஒருவித சமநிலை ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றதனால்தான் ஆயிரக்கணக்கான வருஷங்களாகத் தொடர்ந்து வாழ முடிந்தது. மதக்கோட்பாடுகள், குறுகிய மனோபாவங்களினின்றும் விடுதலை பெற்று, பகுத்தறிவையே துணைகொண்டு சென்றதனாலேயே சீனர்கள் அந்தச் சம நிலையை யடைவது சாத்தியமா

யிற்று. மனித வாழ்வின் பல்வேறு தன்மைகளையும் ஆராய்ந்தறிந்து சமூக வாழ்க்கையியல்களுக்கு, மதக்கோட்பாடுகளைவிட ஒழுக்கத்தையே அடிப்படை அம்சமாக அமைத்துக் கொண்ட பெருமை, மற்றெந்த நாட்டையும்விடச் சீன மக்களையே சாரும்.

இந்தியாவில் எண்ணச் சுதந்தரம் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டபடியால் (நடைமுறையில் அதிகமாகக் கடைப்பிடிக்காவிட்டாலும்) புது எண்ணங்களை வேலி போட்டுத் தடுத்து விடுவதில்லை. மற்ற நாடுகளைப் போலல்லாமல் புதுக்கருத்துக்களை அவ்வப்போது ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொள்வது சாத்தியமே. இந்திய கலாசாரத்தின் அடிப்படைக் கொள்கைகள் மிகப்பரந்த அஸ்திவாரத்தின்மீது எழுப்பப்பட்டிருக்கிறபடியால், அவைகளை எந்தச் சூழ்நிலைக்கும் ஏற்றபடி திருத்தியமைத்துக் கொள்ள முடியும். ஐரோப்பாவில் 19-ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானத்திற்கும் மதத்திற்குமிடையே எழுந்த பலத்த போராட்டத்தைப் போல இந்தியாவில் எழுவது சாத்தியமே யல்ல. மேலும் விஞ்ஞானத்தைத் துணைகொண்டு ஏற்படுத்தப்பட்ட மாறுதல்களும் அந்தக் கொள்கைகளுக்கு முரண்படா. அதைப் போன்றவைகள் இந்தியாவின் சிந்தனையை நிச்சயமாகக் கிளறிவிடும், இன்று நடப்பதைப்போல. ஆனால் அவைகளை எதிர்த்துப் போராடி, அழித்து, ஒதுக்கி விடாமல், தன் பகுத்தறிவைத் துணைகொண்டு, தனது லட்சியக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து, தனக்கே இயல்பான வார்ப்படத்திற்குள் அதைப் பொருந்த வைத்துவிடும். இதைப்போல நேர்ந்தால் காலப் போக்கில், பழைய முறைகளில் முக்யமான பல புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டுவிடலாம். ஆனால் அவை வெளியாருடைய கட்டாயத்தினால் திணிக்கப்பட்டதாக இருக்காது. மக்களுடைய பண்பாட்டில் இயல்பாகவே முளைத்து வளர்வதாகவே தோற்றமளிக்கும். நெடுநாளாகவே வளர்ச்சி தடைப்படுத்தப்பட்டு இன்று வளங் குன்றியிருப்பதாலும், வெகு ஜரூராகப் பிரம்மாண்டமான அளவில் அவசியமான வளர்ச்சி ஏற்பட வேண்டியிருப்பதாலும், இன்றைய நிலைமை அதிகக் கஷ்டமாகத்தானிருக்கிறது.

நமது அடிப்படைக் கொள்கைகளைச் சுற்றி வளர்ந்துள்ள அரண்கள் நம்மைப் பயமுறுத்தலாம். எனினும் அவைகளில் அநேகம் அபத்தமானவை. கால உணர்ச்சிக்கு மாறுபட்டவை; ஆகவே அவைகளெல்லாம் அழிந்து ஒழிந்துபோக வேண்டியவையே. அவைகளை அழியாமல் பாதுகாக்க விரும்புகிறவர்கள் இந்திய மக்களுக்கும், கலாசாரத்திற்கும் தீங்கிழைத்தவராவார்கள். ஏனெனில் அவர்கள் நல்லதையும் தீயதையும் கலப்பதன் மூலம் தீமையையே வளர்க்கின்றனர். இவையிரண்டையும் பிரித்து வைத்து, தத்துவ ரீதியில் எல்லைக்கோடு வகுப்பது சாத்தியமல்ல, அவசியமுமல்ல; அதைப்பற்றி அபிப்பிராய பேதமும் வலுவாகவிருக்கும். மாறி மாறி வளர்ந்து வரும் வாழ்க்கைத் தத்துவமும், காலத்தின் போக்கும், நாளடைவில் எல்லைக் கோட்டை நிர்ணயித்துவிடும். இயந்தரக்கலையோ, தத்துவ ஆராய்ச்சியோ வளம்பெற்று வளர்ச்சியடைய வேண்டுமானால் அது வாழ்க்கையுடன் ஒன்றியுறைதல் வேண்டும். சமூகத்தின் தேவையை யுணர வேண்டும். உலகத்தில் ஜீவசக்தியுடன் விளங்கும் இயக்கங்களுடன் தொடர்பேற்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஓட்ட மற்ற குட்டையைப்போல, ஜீவசக்தியையும் சிருஷ்டி சக்தியையும் இழந்துவிடும். ஆனால் மேற்கண்ட தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு காலத்திற்கேற்ற கருத்துக்களையும் வரவேற்றால் நமது கலாசாரத்தின் அடிப்படை அம்சங்களை இழந்து விடாமலேயே வாழ்க்கையின் உயர்வுதாழ்வுகளுக்கேற்ப நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளலாம்.

கடந்த காலத்தில் இந்தியாவின் எல்லைக்குட்பட்ட பிரச்னைகள் மட்டுமே நமது கவனத்தைக் கவர்ந்தன. இனி நாம் பரந்த நோக்குடன் விரிந்த உலகம் முழுவதையுமே நமது ஆராய்ச்சிக்களமாக்க வேண்டும். வளர்ச்சி யடைய விரும்பும் ஒவ்வொரு நாடும் அதன் மக்களும் தமது பழைய சுவட்டைவிட்டு விலகி, விரிந்த கண்ணோட்டத்தை வளர்க்க வேண்டும். விஞ்ஞான வளர்ச்சியும், சாதனங்களும் இதைச் சாத்தியமாக்கிவிட்டதென்றாலும் புது அறிவின் பெருக்கத்தால் சிரமங்களும் பெருகிவிட்டன. யந்திரத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளி தன் ஆயுள் முழுவதும் ஏதோ ஒரு குறிப்பிட்ட வஸ்துவின் சிறு பாகத்தையே செய்து செய்து அவன் வாழ்க்கையும், தனித்துவமும் தேய்ந்து விடுகிறது. கைத்தொழிலிலும் அறிவாராய்ச்சியிலும் குறிப்பிட்ட ஒரே காரியத்திலேயே ஈடுபட்டிருப்பது இனியும் நடக்க வேண்டியதுதான். எனினும் அத்துடன் மனிதனுடைய வாழ்க்கைப் பாதையையும், எண்ணற்ற காலமாக அவன் நடத்தும் போராட்டங்களையும் அகலக்கண்

கொண்டு பார்த்து, இன்று நேற்று என்ற பேதமின்றி, சகல நாடுகளிடத்தும், மக்களிடத்தும் கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலம் நமது தேசிய கலாசாரப் பண்பாட்டுடன் பிற நாட்டவரையும், அவர்களுடைய மரபுகளையும் அறிந்து கொண்டு அவர்களுடன் ஒத்துழைத்து உறவாடி வாழ்வது சாத்தியமாகும். இதன் மூலம் இன்றைய தாழ்நிலை மாறி மனித வர்க்கத்தின் சிரேஷ்டர்களைச் சிருஷ்டிக்கும் பாக்கியம் பெற்றவர்களாவோம். மனித சமுதாயம் சேகரித்து வைத்திருக்கும் செல்வத்தை நாம் அனுபவிப்பதோடு, நாமும் எதிர்காலத்தின் தேவைக்காகச் சேமித்து உதவி, ப்ளாட்டோ சொல்வது போல—சதாகாலமும், சர்வ ஜனங்களையும் காண்போர்களாக—ஆகவேண்டும்.

விஞ்ஞான வளர்ச்சியும் சர்வ தேசியத்தைப் பற்றிய பேச்சும் மலிந்துள்ள இன்றுங்கூட, சரித்திரத்திலேயே என்றுங் கண்டிராத அளவிற்கு, ஜாதி இன வேற்றுமைகளும் பிளவுகளும் தலை விரித்தாடுகின்றன. ஆகவே நாம் எதை முன்னேற்றம் என்று கருதுகிறோமோ அதற்கு — நாடுகளுக்கிடையே ஒற்றுமையையும் மக்களிடையே நல்லுணர்வையும் ஏற்படுத்தக்கூடிய சக்தியில்லை. மக்கள் இனத்தின் பண்டைய அனுபவங்களுக்குக் கொஞ்சம் கௌரவம் கொடுத்து விரிந்த மனதுடன் விஷயங்களைக் கவனித்தால் புதுக்கண்ணோட்டமும் ஐக்யபாவமும் வளரும். தமது பண்டைப் பெருமைகளைக் கவனித்தால் இன்று ஜ்வரவேகத்தில் வாழ்க்கையை நடத்தி வரும் சமூகத்தினருக்கு இது மிகவும் அவசியம். ஆனால் இந்தியாவின் தேவை அதற்கு மாறானது. நமக்குப் பண்டைச் சிறப்புகளின் நினைவே அதிகம். நிகழ் காலத்தையே மறந்து விட்டோம். குறுகிய மதக்கோட்பாடுகள், மனித அற்புதங்கள் மந்திரதந்திரங்கள் முதலியவைகளில் நாட்டம். இவை நம்மையும் உலகத்தையும் நாம் அறிந்து கொள்வதற்குத் தடையாக இருக்கின்றன. இவைகளை யெல்லாம் அறவே ஒழித்துவிட வேண்டும். சில ஹிந்துக்கள் நாம் வேதகாலத்திற்குப் போய்விட வேண்டுமென்கின்றனர். சில முஸ்லிம்கள் இஸ்லாமிய (மத) சாம்ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கக் கனவு காண்கின்றனர். இவைகளெல்லாம் வெறும் அசட்டுக் கனவுகள். ஏனெனில் காம் மீண்டும் பண்டைக் கால வாழ்விற்கே திரும்பிவிட முடியாது. அது விரும்பத்தக்கதாக இருப்பினுங்கூட திரும்பிப் போகிறது என்பதே சாத்தியமல்ல. காலம் என்ற பாதையில் ஒரே திசையில் தான் செல்ல முடியும்.

ஆகவே இந்தியா, தன்னுடைய மதவுணர்ச்சிகளைக் குறைத்துக்கொண்டு, விஞ்ஞானத்தில் கவனம் செலுத்த வேண்டும். சமூக வாழ்க்கை முறைகளையும். அதைப் பற்றிய சிந்தனைகளையும் குறுகிய எல்லைக்குட்படுத்திக்கொண்ட படியால் இந்தியாவை அது சிறைப்படுத்தி, வளர்ச்சியையும் தடுத்து விட்டது. தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம் என்பது போன்ற ஆசார நியமங்கள் மக்கள் தாராளமாகக் கலந்து உறவாடுவதைப் பாதித்து, சமூகத்தையே சீர் குலைத்து விட்டன. வைதிக ஹிந்துவின் நித்திய கர்மானுஷ்டானங்கள் எல்லாம்—எதைச் சாப்பிடலாம், எதை சாப்பிடக்கூடாது; யாருடன் சாப்பிடலாம்; யாரை ஒதுக்கிவைக்கலாம் — என்பது போன்ற விவகாரங்களிலேயே அடங்கிவிட்டதே யொழிய ஆத்மீக நலன்களைப் பற்றி அதிக அக்கரைப்படவில்லை. சமையலறையின் சட்டதிட்டங்களே அவன் சமூக வாழ்வையும் நிர்ணயித்தது. அதிருஷ்டவசமாக முஸ்லிம்களிடையே இது போன்ற கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது எனினும் அவர்களுக்குள்ளும் சில சம்பிரதாயச் சடங்குகள் இருக்கின்றன. இதை எள்ளளவும் பிசகாமல் அனுஷ்டித்துக் கொண்டு அவர்களுடைய மதம் போதித்த சகோதரத்துவத்தையே மறந்து விடுகின்றனர். வாழ்க்கையைப்பற்றி முஸ்லிமுடைய கண்ணோட்டம் ஹிந்துவைவிட (தற்காலத்து சராசரி ஹிந்துவை உதாரணமாகச்சொல்ல முடியாவிட்டாலும்) குறுகியதாகவும், மலடு தட்டியதாகவுமே இருக்கிறது. ஏனெனில் பாரம்பரியமாகக் கையாளப்பட்டு வந்த சிந்தனைச் சுதந்தரத்தையும், பல விதத்திலும் வாழ்வை வளம்படுத்தும் பிறவற்றையும் மறந்து விட்டான்.

(Discovery of India என்னும் நூலிலிருந்து. க. கணபதியால் மொழி பெயர்க்கப் பெற்றது)

# கதம்பம்

## வெட்கக்கேடு!

ஹிந்துக்கள் எவரும் ஜாதி வித்யாசமின்றி ஆண்டவனது திருக்கோவில்களுள் புகுந்து புனிதமடையலாம் என்று சட்டமியற்றத் துடி துடித்த சர்க்கார், கலைக் கோவில்களாக விளங்கும் கல்லூரிகளில் ஜாதி வித்யாசங்களைப் புகுத்தி மக்களுக்குச் சொல்லவொண்ணுத துயர்களை உண்டாக்குவது நேர்மையன்று.

நமது மந்திரிகளைச் சட்டசபைக்குத்தேர்ந்தெடுத்த பிரகஸ்பதிகள் ஒரு குறிப்பிட்ட ஜாதியை மட்டும் சேர்ந்தவர்களல்ல! தவிர இன்ன ஜாதியில் இவ்வளவுபேர்கள் தான் படிக்கலாம் என்று சொல்ல, பொது ஜன சேவகர்களாய் உள்ள நமது மந்திரிகளுக்கு உரிமையில்லை. அப்படி அசம்பாவிதமாக உரிமை கொண்டாடுவது ஜனநாயக அரசியல் முறைக்கும், கொள்கைக்கும் புறம்பானது என்பதை நமது மதியூக மந்திரிகளுக்கு ஞாபகப் படுத்த விரும்புகின்றோம். பள்ளிகளில் இடமில்லை, கல்லூரிகளில் இடமில்லை, இடங்கள் உள்ளதை எல்லா ஜாதியார்களுக்கும் விகிதித்துத் தானே கொடுக்கப்படுகிறது என்ற வாதம் சரியானதல்ல. மக்களுக்குக் கல்வி கற்க வசதியளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அந்தக்கடமையைநிறைவேற்ற அரசாங்கத்தாரால் முடியவில்லை என்ருல் வெட்கக்கேடு!

திறமை, யோக்யதை இவைகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியதில்லை என்பதாக அசட்டுத்தனமாக வாதிக்கப்படுகிறது. பரீட்சை பின் எதற்கு?.

இப்பொழுதுள்ள காங்கிரஸ் மந்திரிசபையில் பசுத்தோல் போர்த்த புலிகள் சிலர் உள்ளனர் என்ற எண்ணம் பரவி வருகிறது. பிரகாசம் மந்திரிசபையில் கல்விமந்திரியாகப் பதவி வகித்தவர்தான் இப்பொழுதும் கல்விமந்திரியாக விளங்குகிருர். அப்பொழுது இந்தப் பேர்வழி கையாண்ட கொள்கையென்ன? 20 சதம் யோக்கியதாம்சத்தை உத்தேசித்துக் கல்லூரிகளில்இடம் ஒதுக்கப்பட்டது. திடீரென்று இப்பொழுது கொள்கையில் மாறுதல் ஏன்? புதிய ஞானேதயம் கல்விமந்திரி அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டதா? அல்லது யோக்யதை என்பது தேவையில்லை எதற்கும் என்பது புலனுகி விட்டதா?

மந்திரிபதவிகள் போன்ற பெரியபதவிகளை வகிக்க இந்திய அரசியல் சட்டதிட்டத்தின்படி யோக்யதாம்சம் அவசியமில்லாமலிருக்கலாம். வயிற்றுப் பிழைப்புக்கு யோக்யதாம்சம் எந்தத் தொழிலிலும் அவசியமானதாகவே அனுபவத்தில் அறிகிறோம்!

பள்ளிகளிலோ, கலாசாலைகளிலோ இடநெருக்கடி இன்று நேற்று ஏற்பட்டதல்ல. நெருக்கடி தீர உருப்படியாகச் செய்துள்ளது யாது? நாட்டின் தொழில்வளர்ச்சிக்கான கல்வி போதிக்கப்பட உள்ள ஸ்தாபனங்கள் குறைவாக இருப்பானேன்? வாழ்க்கைக்கு உதவியளிக்கக் கூடியவாறு கல்விமுறை மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்ற கிளர்ச்சிக்கு நல்ல திட்டமுண்டா?

சுகமாக ஊர்கள் சுற்றத் தெரியும், வாயில் வந்ததைப் பேசத்தெரியும், புதிய வரிகளை மக்கள்பால் சுமத்தத் தெரியும்—இவ்வளவுதான் தெரியும் என்று நமது மந்திரிகள் காட்டிக்கொள்ளாமல், எல்லா மக்களும் எவ்வித பட்சபாதமின்றி, கல்வி கற்க வேண்டும், அதற்குப் பொதுஜன அரசாங்கம் உடனடியாக முன் யோசனையுடன் நல்ல திட்டம் வகுத்து நடத்த வேண்டும் என்பதை உணர்ந்து கடமையைச் செய்தால் நன்ருயிருக்கும்.

## ஹூவா ஹூவா!

ஹூவா ஹூவா டான்ஸ் ஆடும் பெண்களைப் பார்த்திருக்கிறீர்களா? ரொம்பவும் வசீகர தோற்ற முடையவர்கள்; எப்பொழுதும் குதூகலமாகப் பொழுது போக்க விருப்ப முடையவர்கள்; கள்ளம் கபடு அறியாதவர்கள்; பசிபிக் மகாசமுத்திரத்தில் உள்ள ஹவாய் தீவுகளில் வசிப்பவர்கள். அத்தீவுகளின் இயற்கை அமைப்பும் காட்சிகளும் அமெரிக்க சுக

வாசிகளைக் கவர்ந்துள்ளதில் ஆச்சரிய மில்லை.

அத்தீவுகளை 49 ஆவதுமாகாணமாக ஐக்ய அமெரிக்காவுடன் சேர்த்துக் கொண்டுவிட அமெரிக்க அரசாங்கம் முனைந்துள்ளது. அதற்காக அவசர அவசரமாக ஒரு மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

ஹவாய் தீவுகளைப் பற்றி அமெரிக்கர்கள் அக்கரை கொண்டுள்ள காரணம் என்ன? ஹுவா ஹுவா பெண்களின் அழகைக் கண்டு மயங்கியா! அதுவும் இருக்கலாம். முக்கிய காரணம் அத்தீவுகள் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கு மிடையே கேந்திர ஸ்தானமாக அமைந்திருப்பது தான்.

ஹவாய் தீவுகளை இப்படிச் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்ப்பு இல்லாமலில்லை. வெள்ளையரல்லாத 'சிவப்பு இந்தியர்கள்' (Red Indians) என்ற வேற்று ஜாதியார்கள் அத்தீவுகளில் உள்ளனர். அந்த ஜாதியார்கள் நாகரிக மடைந்து பெருகி விட்டால்? குடிகெட்டுவிடுமே!

உலகிலுள்ள கேந்திர ஸ்தானங்களை இப்படி அமெரிக்கா மட்டும் ஸ்வீகரித்துக் கொள்வதை மற்ற வல்லரசுகள் ஆதரிக்குமா? இப்படிப் பட்ட பிரச்னை எழுப்பப் படுமுன்பே பிரசாரம் ஆரம்பித்தாய் விட்டது. இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், அயர்லாந்து இவைகளைக் கூட ஐக்ய அமெரிக்காவின் அங்கங்களாகச் சேர்த்து கொண்டு விடலாம். அதில் தவறில்லை என்றுகூட ஒரு அமெரிக்கத் தலைவர் கூறத் தலைப்பட்டு விட்டார்!

ஹவாய் தீவுகளில் பிரசித்தி பெற்ற ஹானலூலு நகரம் உலகிலுள்ள யாத்திரிகர்கள் பலரால் கொண்டாடப் பட்டுள்ளது. அத்தகைய அழகிய நகரத்தில் அமெரிக்கர்கள் அதிகம் புகுந்து நகரத்தையும் நகரப் பெண்மணிகளையும் கெடுத்து, மற்றத் தேசயாத்ரிகர்கள் அங்குக் குதூகலமாகப் பொழுது போக்குவதைத் தடை செய்வார்களோவென அஞ்சப்படுகிறது.

## வேண்டாம் ஸ்வாமி!

நாட்டைப் பிரிவினை செய்யவேண்டுமென்று தீர்மானமாகிவிட்டது. அத்துடன் எல்லாவற்றையும் பிரிக்கவும் அவசியம் ஏற்பட்டுவிட்டது. ராணுவம், நிதி. ரயில்வே இவைகள் பிரிக்கப்படுவதை ஆட்சேபிக்க வில்லை. ஆனால் இந்தியாவின் சரித்திர சம்பந்தமான தஸ்தாவேஜிகளையும் கிழித்து, பங்கு போட்டுக்குள்ள முயற்சிகளும் கிளர்ச்சிகளும் நடத்துவது முட்டாள்தனம்!

இந்திய நாட்டின் பிற்கால க்ஷேமத்தில் கருத்துடையவர்கள், விவேகிகள் இத்தகைய விஷமப்பிரிவினையை எதிர்த்தே தீருவார்கள்.

புராதன பெருமைவாய்ந்த இந்திய நாட்டின் நாகரிகம், கலைப்பண்பு, ராஜரீக முறை முதலிய முக்கியவிஷயங்கள் அடங்கிய தஸ்தாவேஜிகள் பாகிஸ்தானத்துக்கோ, இந்திய யூனியனுக்கோ ஏகதேச சம்பந்தப் பட்டவையல்ல. ஆகவே ஒரு பகுதிக்குச் சம்பந்தப்பட்ட விஷயமெனச் சொல்லி, தஸ்தாவேஜிகளையும் பிரிப்பது சாத்யமல்ல. இந்திய நாட்டின் பொக்கிஷமாகக் காப்பாற்றப் படக்கூடிய விலைமதிப்பற்ற அந்தத் தஸ்தாவேஜிகளைப் பிரிப்பது அழிப்பதுபோல் ஆகும். இப்படி விபரீதச் செய்கையில் இறங்குவதினால் பாகிஸ்தான் காணும்பலன்தான் என்ன!

அப்படியே அந்தப் பழைய தஸ்தாவேஜிகளைப் பிரிக்க மனம் துணிந்தாலும் அசல் தஸ்தாவேஜிகள் அப்படியே காப்பாற்றப்படவேண்டும். அவைகளுக்குச் சரியான நகல்கள் வேண்டுமானால் எடுத்துக் கொள்ளட்டும்.

விலைமதிப்பற்ற அந்தத் தஸ்தாவேஜிகள் யாருக்கும் தனிப்பட்ட சொந்தமில்லாது, யாவருக்கும் பயன்படக்கூடிய முறையில் காப்பாற்றப்பட வேண்டியது அவசியம்.

இப்படி விபரீதயோசனை வேண்டாம் என்று பாகிஸ்தான் பக்தர்களை வேண்டிக் கொள்கிறோம்.

அடுத்த
ஆவணி இதழில்
புதிய தொடர் கதை
ஆரம்பமாகிறது

# ஐயரின் குருகுலம்

**யோகி சுத்தானந்த பாரதியார்**

[வீரவிளக்கு வா. வே. சு. ஐயர் கண்ணெனப் போற்றிய ஸ்தாபனம் தமிழ்க் குருகுலம். அதன் அருமை பெருமைகளைத் தமிழர் இன்று நினைக்க வேண்டியே இக்கட்டுரையை, "காவேரி"க்கு நிவேதிக்கிறேன்.]

## சேரமாதேவி குருகுல அமைப்பு

சேரமாதேவி குருகுல வளர்ச்சி, ஒரு தனிச் சரிதையாகும். புக்கர் வாஷிங்டன் துஸ்கிகி கலாசாலையை அமைத்ததுபோலவே, தன்முயற்சியால் குருகுலம் அமைந்தது. குருகுல நிலத்தில் கிழக்கே சில ஏக்கரா நஞ்சைநிலம், நெல் சாகுபடியாகும். தெற்கே பெரியநிலம் புஞ்சைப்பயிருக்குதவும், செவ்வல்மணல், துவரை போடலாம். வடக்கேயுள்ள பகுதியில் சில தென்னைமரங்களும், மாமரங்களும், கூந்தற்பனைகளும் உண்டு. ரஸ்தா ஓரத்தில் நெடுக ஆலமரங்கள் உண்டு. அவற்றையொட்டி முள்வேலி போட்டிருந்தது. தோட்டத்தின் கிழக்கே வயலோரத்தில் ஒரு பெரிய நடைகிணறுண்டு. நிலத்தின் தென்புறமும் ஒரு பெரிய நடைகிணறுண்டு. இக்கிணற்று நீர் பாய்ந்துதான் விவசாயம் நடக்க வேண்டும். அதுவே குடிக்க, குளிக்க, சமைக்க உதவும் நீர்த்தடாகமுமாகும். குருகுலத்தின் வாசலில் இருந்த அடைப்பைத் திறந்தால், ஒரு கூரைக் குடில் காணும். அது சுமார் பத்தடி அகலம், பதினைந்தடி நீளம் இருக்கும். அதுவே முதன்முதலில் அமைந்த கட்டிடம். அப்போது குருகுலம் எங்கும் புல் முளைத்துப் புதர்மேவியிருந்தது. மரங்களெல்லாம் கவனிப்பாரின்றி வாடிக் கொண்டிருந்தன. இங்குமங்கும்பாம்புகள் தாராளமாக உலாவும். மழைக்காலத்தில் தேள்களும் ஜலமண்டலிகளும் பூரான்களும் சடு குடு பாயும். இரவில் நாங்கள் பஜனை செய்து படுக்க வேண்டியதுதான்; நரிக்கூட்டங்கள் சற்றுத் தூரத்தில் "ஊள் ஊள்" என்று பஜனை பண்ணத் தொடங்கும். ஆசிரமமரங்களில் ஏராளமான புட்கள் 'கிசு,கிசு' யென்று காலையும் மாலையும் பள்ளிக் கூடம் நடத்தும். அது ஆறுதலாயிருக்கும். முதலில் ஒரு சிறுகுடிலே இருந்தது. அதிலேதான் ஐயர் ராயசவேலை எல்லாம் நடத்திவந்தார். பிரமசாரிகள் புத்தகம் வேஷ்டி துணிகளெல்லாம் அங்கேதான். ஆசிரியரும் அங்கேதான். இப்படிப் பதினைந்தடிக்குடிலில் சில நாட்கள் சென்றன. மற்றொரு பெரிய ஓலைவீடு அமைந்தது. அதில் மாணவர் வசித்தனர். இதனிடையே முதலில் குருகுலத் தரையைச் செப்பனிட்டு மணல் கொண்டுவந்து கொட்டினோம். காலை ஐந்து மணிக்கெல்லாம் ரஸ்தாவுக்கு மேற்கேயுள்ள வாய்க்கால் மண்ணைச் சட்டி சட்டியாக அள்ளிவந்து தென்னை மரங்களுக்குப் போடுவோம். வகுப்பு நடக்கும் இடம், விளையாடும் இடம் இவற்றில் பரப்புவோம். சாப்பிடும் இடத்தைச் சாணம்போட்டு மெழுகிச் சுத்தம்செய்வோம். நடமாடும் இடங்களையெல்லாம் புல்செதுக்கிப் புதர்நீக்கி உழவாரப்பணி செய்வோம். இவையே குருகுலத்தில் ஒவ்வொருநாளும் முதல் வேலை. சிலநாட்களுக்குப்பிறகு கிணற்றருகே மூங்கில் வரிச்சுக்களாலும் மலைப்புற்களாலும் ஆன ஒரு குடில் எழுந்தது. அக்குடிலில் ஒரு இல்லற உபாத்தியாயர் இருந்தார். அவரே மாணவர் துணை கொண்டு குடில் வாயிலில் கரியடுப்பு வைத்து, குக்கரில் சமைத்துப் போட்டார். கிணற்றோரத்தில் மரத்தடியிலேதான் எல்லோரும் அமர்ந்துண்போம். திருஷ்டி தோஷம் பார்ப்பதில்லை. சமபந்திதான். அதன் பிறகு ஐயரின் முதல் கவலை புத்தகங்களைப்பற்றித்தான். தமக்குக்கட்டிடம்

கட்டுவதற்கு முன்பே ஐயர் தமது புத்தகங்களுக்குக் கட்டிடம் எழுப்பினர். ஆசிரம வேலியோரம் புத்தகசாலை யெழுந்தது. அஸ்திவாரம் கெட்டிச் செங்கல், மேல் வரிசையெல்லாம் மூங்கில் பிளாச்சிகள், சுவர் கிடையாது. மேலே கள்ளிக்கோட்டை ஓடுகள் போட்ட புத்தகசாலை அமைந்தது. அது மூன்று அறைகளாக வகுக்கப் பெற்றது. வட கோடி அறையில் மூங்கிலாற் செய்த பரண் அலமாரியில் சுமார் 3000 புத்தகங்கள் அடுக்கப்பெற்றன. அந்த அறையில் உட்காரமட்டுந்தான் இடமுண்டு. அதற்கு வெளியே ஓர் அறை உண்டு. அதிலேதான் மாணவர் உட்கார்ந்து படிப்பர். ஐயர் எழுதுவார். அங்கேயே ஒரு பீரோவில் கம்பநிலையம் புத்தகசாலையிருக்கும். விற்பனை நடக்கும். அந்த அறைக்கடுத்து, தென்புறம் காரியஸ்தர் அறையிருக்கும். அதிலேதான் நான் அமர்ந்து பாலபாரதிக் கணக்குகளைப் பார்ப்பது, ஆசிரமத்திற்கு வரும் கடிதங்களையும் மணியார்டர்களையும் வாங்கிவைப்பது, மற்ற எழுத்து வேலைகளைச் செய்வது. இந்தக் கட்டிடத்தைச் சுற்றிலும் காரைத்திண்ணை நாற்புறமும் உண்டு. அதிலேயும் மரத்தடிகளிலுமே வகுப்புகள் நடந்தன. இக்கட்டிடம் முடிந்தபிறகு, புதிதாகச் சமையலறை கட்டினர். கிழக்கே ஒரு பெரிய இடத்தில் ஒரு நீளமான உள், வெளியே சாப்பிடத்திண்ணை, தட்டி மறைவு. இவ்வளவுதான் சமையலறை. அது முடிந்தபிறகு ஐயருக்கென்று அதன் மேல்தளத்திலேயே ஒரு மாடி அமைந்தது. அந்த மாடியிலேதான் ஐயர் வசித்தார். அங்கே ஒருசிறிய சதுரஅறையில் ஐயர் ஓர் ஆசனப்பலகையில் கிழக்குச்சுவரோரம் முன்னே ஒரு கைப்பெட்டி வைத்து, பத்மாசனத்தில் அமர்ந்து காலை எட்டுமணிமுதல் பன்னிரண்டு மணி வரையில் எழுதிக் கொண்டிருப்பார். அந்த அறைக்கு முன்னே மூங்கில் தட்டியடைத்த தாழ்வாரம். அதிலேதான் ஐயர் பாடம் சொல்லுவார். பனிக்காலத்தில் படுப்பார். அதற்கு வெளியே நாற்புறமும் குறடுகட்டிய நிலா முற்றம். வேனிற்காலத்தில் அங்கேதான் இரவில் கதை, தேத்திரம், கம்பராமாயணம் எல்லாம் நடக்கும். அத்திறந்த வெளியிலேதான் ஐயர் மெத்தைவிரித்துப் படுப்பார். அதினின்று படிகளில் இறங்கினால் கீழே ஒரு சிறிய அறையிருக்கும். ஆசிரமத்திற்கும் அச்சகத்திற்கும் வேண்டிய சாமான்களெல்லாம் சேகரித்து வைப்பார். மேஜை நாற்காலியே ஆசிரமத்திற் கிடையாது. ஆசனப்பலகையும் ராயஸப்பலகையுந்தாம் (டெஸ்க்) உண்டு. மேற்சொன்ன ஆசாரியார் கட்டிடம் எழுந்தபிறகே அச்சகத்திற்கு அதன் முன்னே ஓர் ஓட்டுக்கட்டிடம் அமைந்தது. அக்கட்டிடத்திலேதான் ஒருபழைய ஈகிள் அச்சு யந்திரம், ஒரு டிரெடில், அச்சுவரிசைகள், பைண்டிங் சாமான்கள், பாலபாரதிக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் ஒழுங்காக வைக்கப்பெற்றிருக்கும். இக்கட்டிடங்களெல்லாம் எழுந்து சிலமாதங்களுக்குப் பிறகு ஆசிரமத்தின் தென் பக்கம் உயரமான பரண்வைத்த ஒரு கூரைக்கட்டிடம் எழுந்தது. அதில் சில பெரியமாணவர் இருந்தனர். அதற்குமுன் பெரிய மைதானம். அதைத்தாண்டி இன்னும் இரண்டொருமாதங்களுக்குப் பிறகு மாணவர் படிக்கவைக்க இருக்க, தனியாகவே ஒரு நீளமான மண்சுவர்க்கட்டிடம் ஓலைக் கூரையுடன் எழுந்தது. அதுதான் குருகுலப்பள்ளிக்கூடமானது. அக்கட்டிடத்திற்குக் கிழக்கே ஒரு கிணறுண்டு. அதற்குத் தெற்கே மற்றொரு கூரைக் குடில் எழுந்தது. அதிலேதான் இரண்டு தறிகள் நாட்டிக் கதர்நெசவு நடந்தது. அதனருகே மற்றொரு கட்டிடம் எழுந்தது. அதில் ஆசிரமத்திற்கு வரும் விருந்தாளிகள் தங்கினர், மாணவரும் இருந்தனர். இந்தக் கட்டிடங்களெல்லாம் எழுந்தபோதே கிணற்றடியில் இருந்த பழைய பர்ணசாலையைப் புதுப்பித்து ஐயர் எனது தவத்திற்காக அளித்தார். அதிலேயே நான் இருந்து வந்தேன். மாணவரெல்லாம் அங்கேதான் மணிப்படி வந்துசெல்வர். ஒரு ஊதல் ஊதினால் புருப் வரும் போகும். ஆசிரமத்தின் வடகோடியில் தன்னந்தனியே ஒரு கூரை வீடமைந்திருந்தது. அதிலே ஒரு உபாத்தியாயர் வசித்தார். இவ்வளவுதான் ஆசிரம அமைப்பு. இக்கட்டிடங்களுக்கு வேண்டிய செங்கல்களெல்லாம் ஆசிரமவாசிகளே அறுத்துச் சூளை வைத்தனர். சுண்ணாம்புக்காளவாயும் ஆசிரமத்திற்குத் தெற்கே போடப்பெற்றது. இக்

கட்டிடங்கள் அமைக்க ஆசிரமம் அனந்த கிருஷ்ண ஐயரும் உள்ளூர் ஓவர்ஸியர் இராமகிருஷ்ண ஐயரும் தேகப்பிர யாசைப் பட்டனர். அச்சுக்கூடத்திற்கும் புத்தகசாலைக்கும் இடையே உள்ள மணல் வெளியிலேதான் பொதுக்கூட்டங்களும், பஜனைகளும் ஆடல்பாடல்களும் நடந்தன. என் கட்டிடத்தின் கிழக்கே கிணறும் நெல் வயலும். மற்றப்பக்கமெல்லாம் மாமரங் களும். தென்னைமரங்களும் இருந்தன. மற்றக்கட்டிடங்களின் முன்பும் இரண் டொருமரங்கள் இருந்தன. எப்போதும் பறவைப் பாட்டு எனக்குச் செவிவிருந்த ளித்தது.

## குருகுல நோக்கம்

தமிழர்களைக் கால்ஸா சீக்கியர் போலச் சிங்கவீரராக்கவே ஐயர்குருகுலங் கண்டார். அவர் நாளைக்குப் பத்துத் தடவையாவது "தீரனாகவேண்டும்" என்னும் வார்த்தை சொல்லாமல் இருக்க மாட்டார். "தீரமே" அவர் ஜபம். "அடிமை வாழ்வும் அன்னியக்கல்வியும் பாரததருமத்தைக் குலைத்தன; நமது நாட்டிற்குரிய ஆசார அனுஷ்டானங் களையெல்லாம் கெடுத்தன; அறத்தைச் சிதைத்தன; தேஜஸும் ஓஜஸும் நிறைந்த, எழில்பெற்ற, ஆத்மவீரர் நாட் டில் அரியராயினர், சுதர்மம் பாழ்பட்டது. பரதருமம் புல்லுருவிபோலடர்ந்து நமது பலத்தை உறிஞ்சியது. பாரதஜாதி தாழ்வுற்று, வீழ்வுற்றது. நாட்டிற்கும் வாழ்விற்கும் சம்பந்தமில்லாத அன்னியக் குப்பைகளையெல்லாம் மூளையில் வாரி யடைத்துப் பரீட்சைக்காகிதத்தில் கொட் டித் தீர்த்துப் பட்டம் பெற்று, பட்டாக் களைத் தூக்கிக்கொண்டு அடிமைவேலைக்கு அலைவதே நம்மவர் தலையெழுத்தானது. அந்த அரைகுறைக்கல்வியும் நூற்றுக்குப் பத்துப்பேருக்குமேல் கற்பாரில்லை. நாடு வறுமை, மடமை அடிமையிருளில் ஆழ்ந்து கிடந்தது. நாட்டிற்குரிய கலைகளெல்லாம் நாளுக்குநாள் தேடுவாரற்று நலிந்தன.

"நாட்டிற்குரிய கல்வி செழிக்க வேண்டும். நாட்டுக்கலைகள் நல்ல வளர்ச்சி பெறவேண்டும். நமக்குரிய அத்யாத்மக் கலையுடன் மேனாடு பெருமைகொள்ளும் இயற்கலையிலும் நாம் தேர்ச்சிபெற்று, பண்டைநலமும் புதுநலமும் ஒருங்கே வாய்ந்து உலகில் தலைநிமிரவேண்டும். காவியம், ஓவியம், இலக்கியம், தத்துவம், மருத்துவம், பௌதிகம், ரசாயனம், தாவரம், சரித்திரம், பூகோளம், யந்திரக் கலை, கைத்தொழில் முதலிய அனைத்திலும் தேர்ந்து, நாட்டைக் காக்கத் தக்க வீரப் பயிற்சியும் பெற்ற நிபுணரைப்படைக்க வேண்டும். அவர்கள் கச்சேரிவாசலில் மனுச்செய்து தொங்காமல், உலகில் சுயேச்சையாக ஒரு தொழிலோ, வாணிபமோசெய்து மானமாகப்பிழைத்து, தேசத்திற்கும் பணிபுரியவேண்டும். குருகோவிந்தன் சிவாஜி போன்ற வீர மணிகள், கம்பர் காளிதாஸன் வியாஸர் வாமீல்கி துளஸிதாசர் போன்ற மகா கவிகள், தியாகையர் தீக்ஷிதர் போன்ற சங்கீதரத்தினங்கள், ரவிவர்மா மைமேல் ஆஞ்சலு போன்ற சைத்திரிகர், நார்த் கிளிப் ராக்பெல்லர் ஹென்ரிபோர்டு போன்ற கோடீசுவரர்கள், கொலம்பஸ் வாஸ்கோடிகாமா காப்டன்குக் போன்ற உலகயாத்திரிகள், மஜினி திலகர் போன்ற தேசாபிமானிகள், எதிஸன் போஸ், ராமன் போன்ற விஞ்ஞானிகள்—நமது தமிழகத்தில் எழுந்து விளங்கவேண்டும். இதுவே எனது கனவு" என்பார் ஐயர். இதைப்பற்றி முன்பே ஒரு கடிதத்தில் குறித்திருந்தார். கலை, வீரம், சுதந்திரம் இவையே ஐயர் பல்லவியாம். "அபிநவ நாளந்த தக்ஷசீலம் ஸ்தாபிக்கவேண்டும். தேசியக்கலைகளுக்குப் புனருத்தாரணம் தரவேண்டும். நிபுணர்களை உண்டாக்க நமது கொள்கைக்கேற்றபடி ஒரு நல்ல மாஸிகை நடத்தவேண்டும்" என்பதே ஐயர் என்னிடம் முதன்முதல் சொன்ன வார்த்தைகள்.

## பாரத்வாஜ சங்கமும், தொண்டரும்

இந்த நோக்கங்களை நிறைவேற்றவே ஐயர் தமது கோத்திரப் பெயரால் "பாரத்வாஜ சங்கம்" ஏற்படுத்தினர். ஐயர் "தங்கள் கோத்திரம் என்ன?" என்றார். "ஸகோத்திரந்தான், பாரத்வாஜந்தான்" என்றேன். "சரியாய்ப்போயிற்று, தாயும் காமாக்ஷி, கோத்திரமும் பாரத்வாஜம், பெற்றோர் இட்ட பெயர்களும் ஒன்று. நாம் ஒன்று சேருவோம்...ஸகோதரர்" என் றார். பாரத்வாஜ ஆசிரமத்தில் சுமார் எட் டுப்பேர்கள் சேர்ந்தனர், அதில் முதன்மை




லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

LIVER CURE Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.

யானவர்கள், தி. ரா. மஹாதேவ ஐயர், நான், அனந்தகிருஷ்ண ஐயர், சுப்பையர், கிருஷ்ணமூர்த்தி ஐயர், கும்பலிங்கம் பிள்ளை, நாராயண ஐயர் முதலியோர். "இச்சங்கத்தின் சார்பில் எல்லாமாணவருக்குமே உபநயந ஸம்ஸ்காரம் செய்து ஜாதிவேற்றுமையை விட்டுவிடுவது. எல்லாரும் பிறகு ஒரு குலமாகவே இருப்பது" என்று ஐயர் முடிவுகட்டினார். இதில் சேர்ந்தவர்கள் எல்லாருமே ஐயருக்கு அரிய பணிசெய்தனர்; குருகுலத்திற்கு வஞ்சமில்லாமல் உழைத்தனர்.

(1) ஸ்ரீ தி. ரா. மஹாதேவ ஐயர் பெரிய தியாகி. (2) சிதம்பரம் பிள்ளை காலம் முதல் தேசத்தொண்டில் ஈடுபட்டவர். முதலில் போலீஸ் இன்ஸ்பெக்டராயிருந்து, பிறகு வக்கில்தொழிலில் நல்ல சம்பாத்தியம் பெற்றவர். மஹாத்மாவின் ஒத்துழையா இயக்கத்தில் குடும்பத்துடன் ஈடுபட்டவர். மஹாதேவ ஐயர் பத்னி விசாலாக்ஷியம்மாள் கல்லிடை டாக்டர் சங்கரய்யர்பத்தினி இலக்குமி அம்மாளுக்கு நெருங்கிய உறவு. இருவரும் நாட்டுப்பணியிற் சிறந்துவிளங்கினர். விசாலாக்ஷியம்மாள் அடிக்கடி குருகுலத்திற்கு வந்து மாணவருக்கு அன்புடன் தொண்டுசெய்வாள். மஹாதேவ ஐயர் புதல்வர் இராமானந்தன், சத்யானந்தன் என்னும் இருவரும் குருகுலத்தில் தலைமாணுக்கராக விளங்கினர். மாணவமணியான இராமானந்தன் எப்போதும் ஐயருடனேயே இருந்துவந்தான். குருகுலக்கல்வியை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டவரில் இராமானந்தனை முதன்மையாகச் சொல்லவேண்டும். மஹாதேவ ஐயர் இவ்வாறு குடும்பத்துடன் குருகுலத்திற்குப் பணிசெய்தது டன், செட்டிநாடுகளுக்கும், மலேயாவுக்கும் சென்று பணம் வசூலித்தார். குருகுலக் கணக்குகளையெல்லாம் இம்மி பிசகாமல் அவரே வைத்துவந்தார். அவர் செய்த உதவியை எந்நாளும் மறக்கக் கூடாது. ஐயருக்கு மஹாதேவர்மீது அத்யந்த பிரியம், மதிப்பு, மரியாதையுண்டு.

(3) அனந்தகிருஷ்ணஐயர்: ஐயருடன் நெடுநாள் இருந்தவீரர். தமது மனைவியுடனே அவர் ஆசிரமத்தில் வசித்தார். தமிழ் நன்றாக எழுதுவார். ஓயாமல் உடலை

வளைத்துப் பாடுபடுவார். பயிர்வேலை, கட்டிடமராமத்து, செங்கல் சுண்ணும்பு சூளைவைத்தல், சந்தைக்குச் செல்லல், முதலிய வேலைகளெல்லாம் அவர்கையில் இருந்தன. சுப்பையர் பள்ளிக்கூட உபாத்தியாயராயிருந்து குருகுலத்திற்சேர்ந்தவர். மாணவருக்குக் கல்விபுகட்டும் வேலையை அவர் கவனித்தார். அவர் பார்யையும் மகனும் குழந்தையும் குருகுலத்திலேயே இருந்தனர். அவர்களுக்குத் தனிக் கட்டிடம் அமைந்திருந்தது.

(4) கிருஷ்ணமூர்த்தி: சிவாவின் சீடர். ஆவேச தேசபக்தர், ஹனுமான்போலே எந்த வேலைக்கும் சலியாமல் உழைப்பார். அவர் சமையல், அச்சகக்காரியம், சுற்று வேலைகள் அனைத்தையும் கவனித்து வந்தார். அவர் தாமே அச்சுக்கோக்கவும் அச்சடிக்கவும் கற்றுக்கொண்டு பலநாள் பழகிய நிபுணன்போல வேலைசெய்து வந்தார்.

(5) குப்பலிங்கம்பிள்ளை: நாஞ்சைநாட்டு மலையாளி. குருகுலத்திற்கு வந்தே தமிழ் கற்ருர், ஆங்கிலத்தில் நல்ல மேதாவி. திருக்குலத்தாரிடம் மிகவும் அன்பு கொண்டவர். அவரே குருகுலத்திற்கு நாஞ்சைநாட்டுமாணவர் நால்வரையும், ஒரு திருக்குலப்பையனையும் அழைத்து வந்தார். அவர் உண்மையான கல்வித் தொண்டர். அஞ்சாநெஞ்சு படைத்த சமரஸவாதி. நல்ல நண்பர். (6) ஜி. ராமச்சந்திர ஐயர் என்பார் குருகுலத்திற்கு அரிய தொண்டு செய்தவர்.

(7) நாராயண ஐயர் கடைசிமாதங்களில் வந்தார். மிக அருமையான குணமுள்ளவர்; அடையாற்றில் படித்து, பி. டி. பட்டம் பெற்றவர்; வஞ்சமற்ற உழைப்பாளி; மகாசாந்தசீலர்; மாணவரை உயிர்போல் நேசிப்பவர், அவர் பள்ளிக்கூடப் பொறுப்பு முழுதும் வகித்தார்.

இவர்களைத்தவிர (8) முத்தையர் என்னும் தமிழ்வித்வானும், சமஸ்கிருதத்திற்கு (9) வேங்கடாசல சாஸ்திரிகளும் இருந்தனர். முத்தையர் சங்கப்பரீட்சை தேறினவர்; பிடில் வித்துவான். அவர் தமிழும் சங்கீதமும் பிடிலும் சொல்லிக் கொடுத்தார். சாஸ்திரிகள் சமஸ்கிருதம் மட்டும் எல்லோருக்கும் சொல்லிக் கொடுத்தார்.

கள்ளாபிரான் என்னும் அன்பர் எல்லாருக்கும் இந்தி சொல்லிக்கொடுத்தார். இடையிடையே சிலர் வந்து கணக்கு, சரித்திரம் முதலிய பாடங்கள் கற்பிப்பதுண்டு. முதலில் தமிழ், ஆங்கிலம், ஸயன்ஸ் சாரணப்பயிற்சி, உடற்பயிற்சி, பாலபாரதிவேலை, இலக்கியத் தொண்டு—இவையே என் பங்கிற்கு அமைந்தபணிகளாம். எந்தச்சமயம் எந்த வேலை ஏற்பட்டாலும் மகிழ்வுடன் செய்வதுண்டு. மாணவரை நான்குமாதத்திற்கொருதரம் சுமார் 100 மைல் கால் நடையாக அழைத்துச்சென்று நடைப் பள்ளிக்கூடம் நடத்துவது எனது பொறுப்பாயிருந்தது.

குருகுலத்தில் குடியிருந்த பெண்மணிகளும் மாணவருக்குத் தாய்மார்போலே அன்புடன் பணிபுரிந்தனர்.

இவ்வாறு குருகுலவேலையில் ஈடுபட்டவர்களெல்லாரும் அதையே தமது சுதர்மமாகச் செய்தனர். குருகுலப்பணி மட்டுமன்று; நாட்டுப்பணியும் இவர்கள் ஏராளமாகச் செய்தனர்.

குருகுலத்தில் சேர்ந்த மாணவரும் மிகவும் கருத்துடனே கற்று, குணமுடன் நடந்தனர். வேதாரண்யம் நடராஜன், இராஜபாளையம் இராஜு, ராமானந்தன், சததியானந்தன், ஐயர் மகன் கிருஷ்ணமூர்த்தி, கல்லிடைக் குறிச்சி கோமதி சங்கரதீக்ஷிதர் மகன் கோ. மஹாதேவன், சுப்பையர் மகன், மன்னார்குடி சுப்பிரமணியன், வைத்தியநாதன, மேலூர் ராமசாமி, நாஞ்சைநாட்டிலிருந்து வந்த ஐந்து மாணவர், முத்துக்குமாரசாமி, ராமநாதன், மலையாளம் ராகவன், பர்மா மாணவர் இருவர், தைப்பிங் மாணவன் ஒருவன், இலங்கையிலிருந்து ஒருவன் ஈரோடிலிருந்து ஒரு சேடபையன், இவ்வாறு பலதிசைமாணவர் குருகுலத்திற் சேர்ந்து பயின்றனர். ஐயர்மகள் சுபத்திரா, கே. ஜி. சேஷய்யர் பேத்தி சங்கரி இந்த இருவரே ஆசிரம மாணவிகள். ஐயர் மகன் கிருஷ்ணமூர்த்தி, நடராஜன், சங்கரன், மஹாதேவன் இந்நான்குபேரும் பெரும்பாலும் என்னுடனேயே இருப்பர்

## குருகுல வரவுசெலவு

பள்ளிக்கூடம், அச்சுக்கூடம், பால பாரதி, நெசவுச்சாலை, விவசாயம், முதலிய எல்லாவேலைகளிலும் மாணவர் ஆசிரியர் அனைவரும் ஈடுபடுவர். இவற்றிற்கெல்லாம் பொருள் வேண்டுமே? நாங்கள் பொருளாதாரத்திற்குப் பட்ட பாடு, தெய்வமே அறியும். குருகுலத்திற்கு ரயில்வே உண்டியல் வசூலிக்கச் சில அன்பர் முன் வந்தனர். வெங்குவையர், ராமச்சந்திர ஐயர், பெருமாள் இம்மூவரும் அவருள் முதன்மையானவர்கள். இவர்கள் காலை உணவருந்தி ரயிலில் ஏறி, காசுகாசாக வசூலித்து வருவர். நாளைக்குச் சுமார் மூன்று ரூபாய்வரும். ஐந்திற்கு மேற்போகாது. நான்குமாதங்களுக் கொருமுறை நான் பிரமசாரிகளைக் கால்நடையாகவே ஊர் ஊராக அழைத்துச் செல்வேன். அப்போது தெருத்தெருவாகத் தேசிய கீதங்களைப் பாடிக்கொண்டு, பணம் வசூலிப்போம். நாளைக்கு இருபது முப்பது வசூலாகும், அவ்வாறு வசூலித்த தொகை சுமார் ரூ800 ஆகும். ஐம்பது சேர்ந்ததும் ஐயர்பேருக்கு மணியார்டர் அனுப்புவேன். மற்றும் சில நகரத்தாரிடமும் பணம் வசூலித்ததுண்டு. டாக்டர் ராஜன் போன்ற நண்பர், ஐயருக்கு மாதா மாதம் ஏதாவது அனுப்புவார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் ரூ 5000ம் கொடுத்துதவியது. அதை ஐயர் அப்படியே பாங்கில் போட்டிருந்தார். "தேசீயப்பணத்தைத் தீராதபக்ஷத்திலே தான் தொடுவது" என்று சொன்னார்.

எஸ். சீனிவாச ஐயங்கார் நிரம்பவாக் களித்துக் கொஞ்சம் பணம் தந்தார். குருகுலம் நீடித்திருந்தால், அவர் அதிகம் கொடுத்திருப்பார். நான் இராமேசுவரம் மஹாநாட்டிற் கலந்து கொண்டபோது, சீனிவாச ஐயங்கார் குருகுலத்தைப்பற்றி மிகவும் பாராட்டிப் பேசி, "ஐயர் ரிஷிக் குட்டிகளைத் தயாரிக்கிறார்" என்றார். குருகுலத்தை ஆதரித்து ஒரு தீர்மானமும் நிறைவேறியது. மலாயாவிலிருந்து சுங்கை சிப்புட் வீராசாமி என்பவர் அடிக்கடி பணம் அனுப்புவார்; கோயம்புத்தூர் கிருஷ்ணய்யர், வாவெள்ளா ராமசாமி சாஸ்திரியார், மலயா நண்பர்சிலர் ஐயருக்குத் தம்மால் இயன்றதை அனுப்புவார்கள். சிலர்புத்தகங்கள் அனுப்புவார்கள். சிலர் பிரமசாரிகளுக்கு ஆடைகள் அனுப்புவர். சிலர் நெல் அனுப்புவர். இந்தமாதிரி நாலாபக்கமும் இருந்துவரும் பணத்தைக்கொண்டுதான் குருகுலத்தை ஐயர் நிர்வகித்தார். ஐயர் மிகவும் செட்டாகவே வாழ்ந்தார். தமது குடும்பத்திற்கு இருபது ரூபாய்தான் அவர் அனுப்பிவந்தார். அதுபோதாமல் திருச்சியில் பாக்கியலக்ஷ்மி அம்மாளும் சுபத்திரையும் கவர்கள் செய்து கொஞ்சம் மேல்வரும்படி சம்பாதித்துக்கொண்டனர். ஆசிரியர்களுக்கு எக்குறையும் இல்லாமல் அவர் தேவையானதெல்லாம் உதவிவந்தார். ஆசிரமத்தில் அனந்தகிருஷ்ண ஐயரும், சுப்பையரும், நாராயண ஐயரும் குடும்பத்துடனே இருந்தனர். இவர்களுக்கு வேண்டியதையெல்லாம் தட்டில்லாமல் ஐயர் தாராளமாகத் தந்தார். மாணவரை ஒரு தகப்பனாரைவிட அதிக அன்புடன் பாதுகாத்து வந்தார். மாணவர் மாதம் பன்னிரண்டுமுதல் பதினாறு ரூபாய்வரையில் கொடுத்து வந்தனர். நாலைந்து பேர் இனாமாகவே படித்து வந்தனர். பணமுடை ஏற்பட்ட போதெல்லாம் ஐயர் சென்னைக்குச் செல்வார். நண்பரிடம் கேட்டு ஒரு பெருந்தொகை கொண்டுவருவார், ஐயர் எப்போது வெளியேசென்று வந்தாலும் இரண்டு தோள்களிலும் பெரியபெரிய பைகள் சுமந்து வருவார். ஒருபை நிரம்பப் புத்தகங்கள் அவசியம் இருக்கும். யாராவது அரிச்சுவடி கொடுத்தாற்கூட ஐயர் சந்தோஷமாக வாங்கிவருவார். சிறந்த இலக்கியங்கள் கிடைத்தால் ஒரு பர்லாங்கில் வரும்போதே புன்னகைத்து, அருகேவந்ததும் "குலிஸ்தான் கொண்டு வந்திருக்கிறேன்!" என்று மூட்டையை இறக்குவார். மற்றொரு பையில் கனிகள், சில்லறைச் சாமான்கள், மாணவருக்கு வேண்டிய சாமான்கள் இருக்கும். பணம் எப்போதும் ஒரு நீளமான பையில் கட்டி இடுப்பைச் சுற்றி ஓசைப்படாமல் கட்டி இருக்கும். ஒரு பெரிய குடும்பத்திற்குப் பாடுபடுவது போலவே ஐயர், குருகுலத்திற்கு அல்லும் பகலும் கருத்துடன் பாடுபட்டார். ஒரு நாள் இரவு சுமார் எட்டுமணிக்குக் கொளுந்திமலையை நோக்கிச் சென்று உலாவி வந்தோம். அப்போது மாணவர் பாடிக்கொண்டிருந்

தனர். குருகுலத்தில் அங்குமிங்கும் ஹரிகேன் விளக்குகள் எரிந்தன. "குருகுலம் ரம்யமான காட்சியளிக்கிறது. நாடு இப்படித்தான் இரவாயிருக்கிறது. தாங்கள் இன்று ஒரு இடத்தில் விளக்கெரியச் செய்தீர்கள். எங்கும் விளக்கெரிந்து நாட்டில் இருளே இல்லாமல் ஓட்டவேண்டும்" என்றேன்.

"செய்யவேண்டும். குருகுலம் பார்க்கப் பார்க்க நன்ருயிருக்கிறது. இந்த இடத்தில் ஒரு தக்ஷசிலத்தைக் காணவேண்டும்; ஐரோப்பியர் பெருமைபேசும் யந்திரத் தொழில்களை யெல்லாம் நாம் இங்கே செய்யவேண்டும். இப்போது பாட்டொலி கேட்பதேபோல இன்னும் மூன்ருண்டுகளில் அல்லும் பகலும் பல தொழிலோசை கேட்கவேண்டும். கல்வியும் தொழிலும் ஆத்மதருமத்துடன் ஐக்கியமாகி நாட்டிற்குப் புதிய சக்தியை அளிக்க வேண்டும்" என்ருர்.

## குருகுல உணவு

"முதலில் உழைப்பு, பிறகே உணவு. உடல் வியர்க்க உழைத்து, நல்ல பசி வந்து சாப்பிடவேண்டும். செல்வத் தொந்தி கூடாது. நாக்கை அடக்கவேண்டும். எளிய உணவே நல்லது. அதிலும் இயற்கையுணவே மேலானது" என்பது ஐயர் கொள்கை. அவர் "சஹனசக்தியும் ஜீரணசக்தியும்" அதிகம் வேண்டுமென்பார். இந்த நோக்கத்தைக் கொண்டே ஐயர் ஆசிரம உணவை வகுத்தார். ஆசிரமத்தில் கொஞ்சநாள் இயற்கை வைத்தியர் கே. இலக்ஷ்மணசர்மா, தமது குடும்பத்துடனே வந்திருந்து எல்லாருக்கும் இயற்கைச்சிகிச்சை கற்பித்தார். அநேகமாக அவர் சொன்ன உணவு முறையே ஆசிரமத்தில் அனுஷ்டானத்திற்குவந்தது. என் உணவு பெரும்பாலும் நிலக்கடலை, வாழைப்பழம் இரண்டேயாம். ஐயர் அவற்றுடன் தயிர் சாப்பிடுவார்; இரவில்


வேலை செய்யும்
ஒவ்வொரு மணி
நேரத்துக்கும்

# லக்ஷ்மி

தன் பாலிஸிதார்களுக்கும், நலனடைவோருக்கும் 1946-ல் செலுத்தியது

**ரூ. 1000-க்கு அதிகம்**

**லக்ஷ்மி பாலிஸிகள்**

என்ருலே பாலிஸித் தொகையை உடனுக்குடன் பைசல் செய்வது

**லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

தலைமை ஆபிஸ்: லாகூர் — கிளைகள் இந்தியா முழுவதும்

| சென்னை: | கோயமுத்தூர்: | ஹைதராபாத்: |
|---|---|---|
| 4/105. அரமனைக்கார தெரு, ஜி. டி. | 5/11-B, இம்பீரியல் பாங்க் ரோடு | (டெக்கான்) அபித் ரோடு |

கனிகள் சாப்பிடுவார்; சில நாட்கள் கேப்பை அடை தட்டிச்சாப்பிடுவதுண்டு. ஆசிரியர் சிலர், கேப்பை பருப்புக்கீரை இரண்டையே சாப்பிட்டனர். காலையில் மாணவருக்கு வாழைப்பழமும், கடலையும், மோரும் தருவர். சுமார் பதினோரு மணிக்குக் கேப்பைக்களி, பருப்பும் காய்கறிகளும்போட்டுப் பொரித்தகூட்டு,மோர் இம் மூன்றும் உண்பர்; அரிசிச் சாதமும் உண்டு. சாயங்காலம் ஆறு மணிக்குச் சில நாட்கள், சமையல் உண்டு; சில நாட்கள் தண்ணீர் கொட்டிய சாதமும் மோரும், தொட்டுக்கொள்ள ஒரு கூட்டுமாகச் சாப்பிடுவர். ஆனால் வீட்டில் பல தின்பண்டங்களும் சாம்பாரும் ரஸமும் வைத்துத் தீட்டிய மாணவருக்கு இந்த எளியவுணவு முதலில் பிடிக்கவில்லை; நாக்கைப் பழக்குவது எளிதாயில்லை. புளி, மிளகாய், வெங்காயம் இம் மூன்றும் ஆசிரமத்திற்குள்ளே வரக்கூடாது. சில சிறுவர் ஏங்கிப் போயினர். தோத்திரம் நடக்கும்போது "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியான கடவுளே, எங்களுக்கு நல்ல அறிவும், பலமும், திருவும், வீரமும் பெருக அருள்புரி" என்று நாங்கள் கடவுளை வாயாரத் தொழுவோம். ஒரு பையன், "கடவுளே எனக்கொரு மிளகாய்ப்பழம் அருள்புரி" என்று மனத்திலேயே தொழுது, ஒரு நாள் பளிச்சென்று வாய் விட்டுச் சொல்லியும் விட்டான். நைப்பாசை விடவில்லை.

கேப்பைக்களி சில மாணவருக்குப் பிடிக்கவில்லை. தீபாவளியன்று கேப்பையில் வெல்லம் போட்டுக் கிண்டி மாணவருக்கு அளித்தனர். எல்லாரும் சாப்பிட்டனர். சில மாணவர் ஜாடையாகக் கேப்பைக் களியைத் தாழ்வாகப் பேசினர். ஒரு மாணவன்,

"அன்றும் இன்றும் கேப்பைக்களி
அடைமழைக்கும் கேப்பைக்களி
தீராத கேப்பைக்களி
தீவாளிக்கும் கேப்பைக்களி''

என்று தெம்மாங்கு பாடிவிட்டான். அந்தத் தெம்மாங்கைப் பாடிப் பாடிச் சிறுவர் சமையலைக் கேலிசெய்து வந்தனர். ஒரு நாள் இரண்டுமாணவர் சேர்ந்து கேப்பைக்களித் தெம்மாங்கை உரத்துப் பாடிச் சென்றனர். ஐயர் கவனித்தார். "ஹூம்! ஹ!! ஹ!!!" என்று சினமும் சிரிப்பும் கொண்டார். அன்று இரவு சாப்பிட்டதும் உணவைப் பற்றிப் பேசினார். "நமது நாட்டிலே இந்தக் கேப்பைக்கூழ் கிடைக்காமல் கோடானுகோடி ஜனங்கள் பட்டினி யிருக்கிறார்கள். இந்தக் கேப்பையைச் சாப்பிட்டு அரோக திடகாத்திரத்துடன் வயல் வரப்புகளில் பகலெல்லாம் வேலைசெய்யும் ஏழைகளைப் பாருங்கள். நல்ல பசியிருந்தால் எதைப் போட்டாலும் செறிக்கும். கல்லைக்கூட ஜீரணிக்கும் வயதில், நீங்கள் கேப்பையைச் சாப்பிடமுடியவில்லை யென்பது அதியாச்சரியமாயிருக்கிறது" என்றார். ஆனால் சில நாட்களில் உணவு மாறியது. சமையலுக்கு ஒரு நல்ல ஆள் அமர்த்தினார் ஐயர். சாதம், கூட்டு, மோர்க் குழம்பு சகிதம் இரண்டுவேளை சுடச்சுட உணவும், காலையில் பழையதும் மாணவருக்குத் தந்தனர். "பழையது சாப்பிட்டுத்தான் நாங்களெல்லாம் திடமாயிருந்தோம்; அது நல்ல பழக்கம்" என்பார் ஐயர். பிற்காலம் பணம் வரவரச் சாப்பாடும் மிகவும் நயமாயிருந்தது. யாதொரு குறையும் சொல்ல முடியாது. யாத்திரை செல்லும்போதும் பிரமசாரிகள் குருகுல ஒழுங்குப்படி பஜனை செய்து அரிசி வசூல்பண்ணிச் சமைத்தே உண்பர்.

[அடுத்த இதழில் முடியும்]

# ஓரிளைஞனுக்குக் கடிதம்

வே. சாரநாதன்

அன்புள்ள யக்ஞனுக்கு,

மனிதரின் வாலிபப் பருவத்தில், ஆண்களும், பெண்களும் சரி, நிகர் சமானமாக வாழ்வதற்கு வசதிகள் வேண்டும் என்றேன். வாலிபர்கள் கூடு மிடங்களில் வாலிபப் பெண்களும் சேர்ந்து வசித்தல், சிரத்தையுடன் பொதுக் காரியங்களைச் செய்தல், பேசி, விளையாடிக் களித்திருத்தல், மேற்கத்திய நாடுகளில் முப்பது, நாற்பது வருடங்களாகவே பழக்கத்திலிருப்பதை நாம் அறிவோம். திருப்பத்தூர் கிருஸ்துகுல ஆச்ரமத்தார், அப்புதிய பழக்கத்தை இந்தியர்களும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதை எதிர்பார்த்து விவாகமான வாலிபர்களைத் தங்கள் மனைவிகளுடன் ஆச்ரமத்தில் அமர்த்துவது சரியே என்று நினைத்தார்கள். விவாகமாகாத வாலிபர்களும், வாலிபப் பெண்களும் சேர்ந்து வசிப்பது அதிகத் துணிவான ஏற்பாடு என்றும் அவர்கள் நினைக்கலாம். இந்தியாவின் தற்கால வுணர்ச்சி இவ் விஷயத்தில் வெகு தீவிரமாக மாறவில்லை. சிற்சில இடங்களில் ஆண்களும் பெண்களும் பழைய கட்டுப்பாடுகளை முற்றிலும் விலக்கியே உறவாடி வருகிறார்கள். பெரிய நகரமான பம்பாயில் அப்பேர்ப்பட்ட கோஷ்டிகளைக் காணலாம் என்று நினைக்கிறேன்.

இந்தியர்கள் பொதுவாகப் பிறப்பிலிருந்தே சிற்றின்பப் பிரியர்கள் என்று அன்னியநாட்டு மூட மக்கள் சிலர் நம் ஜாதியைப் பழி கூறுவது உண்டு. மானிடரே அம்மாதிரி என்றால் ஒரு நிதானத்தில் சரியா யிருக்கலாம். இளமையிலிருந்தே ஆணுக்குப் பெண் வாஞ்சையும், பெண்ணுக்கு ஆண் மோகமும் இயற்கை என்றே வைத்துக்கொள்வோம். இதற்குச் சான்று பழைய காலத்துக் குடிகளாகிய, தெற்கு ஆசியாத் தீவு ஜனங்கள். பருவ காலத்தில் ஆண்களும் பெண்களும் தட்டுத்தடையின்றி ஸல்லாபம், ஸம்ஸர்க்கம் நடத்திவந்து, விவாகமானவுடன் கற்பு நிலையில் அமர்வது அவர்களுக்கு ஸகஜம். காமம் என்பது பூக்களிடமும், பறவைகளிடமும் எவ்வளவு அழகு பொருந்தியது என்று இயற்கை நாயகி நமக்கு அறிவிக்கிறாளோ அவ்விதமே மனிதரின் இளமையில் சோபை பெற்றது. குதிரைகளுடன் பழகிய ஓர் வாலிபப் பெண் மனிதரின் வாழ்க்கையின் அம்சமாகிற காமத்தின் வளர்ச்சித்தத்துவங்களை இயற்கையாகவே அறியக் கூடும். பெற்றோர்களிடமும், சமவயதுள்ளவர்களிடமும் கற்றறியும் காமக் கலையானது தொன்று தொட்டு வந்த பழக்கத்திற்குப் பொருந்தியது. "தூய்மையின் மர்மங்களெல்லாம் ஆணுக்கும் பெண்ணுக்கும் தங்கள் வேர்வையின் நறுமணத்தைக் காட்டில் வளரும் புஷ்பச் செடிகளுடன் கலந்தவர்க்கே கிடைக்கும்" என்று ஹாவிலக் எல்லிஸ் என்ற பேரறிஞர் ஒரு வியாசத்தில் கூறியிருக்கிறார். மேலும், நம்முடைய சகாப்தத்தில் ஒளிவு மறைவு அற்ற மனத்துடன் தேடும் சரீரத் தூய்மையானது, ஆண்களுக்கும் பெண்களுக்கும், காமம் என்கிற விஷயத்தில் சித்திக்கக் கூடும் என்று ஹாவிலக் எல்லிஸ் கூறுகிறார். ஏன் என்றால், சரீர விஷயமான ஒளிவு மறைவு இக்காலத்தில் அசாத்தியமாய் விட்டது. விஞ்ஞான முன்னேற்றத்தினால் ஸ்தூல வஸ்துக்கள் பளிங்குபோல, தங்கள் ரந்திரங்களை வெளியிடுகின்றன. அப்படியே மனிதரின் சித்தமும் ஒளிவு மறைவைக் களைந்துவிடுகிறது. மேலும் மனித ஹிருதயத்திலோ மனசிலோ தோன்றும் ஒவ்வொரு வேட்கையையும் விஞ்ஞானம் சதிருக்குக் கொண்டுவந்து விடுகிறது. தப்பவே முடியாது. ஆகையினால், பழையகாலத்துத் தமிழர்களைப் போலவும், இந்திய ஆரியரைப் போலும், ஆண்களுக்கும் பெண்களுக்குமுள்ள உணர்ச்சியுறவு பாடுகளை இக்காலத்து இந்தியராகிய நாம் அழகும், தெளிவும் ஒருங்கே சேர்ந்தலௌகிக தர்மமாக ஆக்கிக்கொள்ள வேண்டும். அமெரிக்கா வழி நாம் போகவேண்டாம்; ஜப்பான் வழியும் போகவேண்டாம். சர்வார்த்த போதகரான காளிதாஸனே நமக்கு வழிகாட்டியாக வேண்டும்.

ஏ வாலிப நண்பனே, உன் தேவைகளை நீயே நன்கறிவாய். படிப்பும், குலமதமும்,

தேசியமும், உன்மனப் பண்பாட்டை இனியதாக்கும் கலைப்பயிற்சியும், சமூகத் தொண்டும், களங்கமற்ற இன்பவேதனைகளும், உன்னை வாழ்க்கையின் நடுச்சந்தியில் நிறுத்தி, உன் மனிதச் செயல்களை எழுப்பிவிட்டு, உன்னைக்காத்து வளர்க்கும். சமூகமோ உன்னையணைத்துத் தன்னுடைமையாக உன்னையாக்கிக் கொள்ளும். எந்தத் தனி மனிதனானாலும் சரி எந்தச் சமூகமோ சமூகப்பிரிவோ வானாலும் சரி, மகாத்மா காந்தி சமீபத்தில் ஹரித்துவார் அடைக்கல ஸ்தலத்தில் எல்லைப்புறத்திலிருந்து ஓடிவந்த சனங்களுக்குச் சொன்னது போல், "தனி மனிதனின் (ஆண், பெண் ஓரே மாதிரி) தைரியமும், சந்துஷ்டியும், நம்பிக்கையும், தன்கைப்பலம் கொண்டே அஞ்சாதிருத்தலும், தூய்மையும், பொதுக்காரியங்களில் இடைவிடாது உழைத்தலும், அவன் வாழ்க்கையை இன்பமுறச் செய்யும். அப்பொழுது சமூகத்திற்குப் பாரமாயிருத்தலின்றிச் சமூகத்துடன் பாலுடன் சர்க்கரை கலப்பது போல், கலந்து இனிப்புற்றிருப்பான்." ஆகையினாலேயே உலகச்சீர்திருத்தம் என்பதே தனி மனிதன் சீர்திருத்தத்திலடங்கியது என்று சொல்வதுண்டு; பிரபஞ்சத்தின் பிரச்னை ஓர் ஆளின் வைபவத்திலடங்கியதாகும். கல்வி என்பது ஓர் ஆளின் வைபவத்தை ஒழுங்கு படுத்தும் பிரத்தியேகமான கருவியாகும். அக்கல்வியும் ஒருவன் தானே தேடிப் பேணி வளர்த்துவரும் பொருள். வாலிபத்தில் வேரூன்றி ஆயுள் நாட்களெல்லாம் அழகிய கிளைகளும் ஆப்த பலன்களையும் அளிக்கும் கற்பக விருக்ஷம். இருந்தாலும், அவன் ஊக்கத்தினளவே அவன் கல்வி அவனுக்கு உயர்வையளிக்கும்.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்த
முள்ளத் தனைய துயர்வு"

இப்பொழுது இங்கிலாந்து தேசத்துத் தலைவர்கள் முழங்குகிறார்கள்: "யுத்த காலத்தில் இடைவிடாது, பசி நோக்காது, கண்மூடாது, இருந்து எவ்வண்ணம் நாட்டினரனைவரும் பாடுபட்டார்களோ அவ்வண்ணமே தொழிற்சாலைகளில் தற்காலம் உழைத்துப் பொருள்களை உற்பத்தியாக்கி அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாவிட்டார்களானால் இங்கிலாந்தே அதோகதியாய் விடும்" என்று. இதற்கர்த்தம் என்ன? ஊக்கம், பிரதானம். நாட்டினருக்கு உழைப்பு, வீரத்திற்குச் சரிசமானமான நற்குணமாக வேண்டும். நம்மிந்தியாவின் எளிய மக்கள் நல்ல உழைப்பாளிகள் என்று உலகப் பிரசித்தி பெற்றிருக்கிறார்கள். அன்னிய நாடுகளில் கூலித்தொழில் செய்து பெற்ற புகழ் அது என்றாலும் உழைப்பு இயற்கைக் குணமாயிருந்தால் மக்கள் ஒருநாள் முன்னேறியே தீருவார்கள். சாதாரண மக்களுக்குள்ள இச்சக்தியை மக்களாகிய நாம் கைப்பற்ற வேண்டும். இந்தியக்குமாஸ்தா உழைக்கிறான், சந்தேகமில்லை. அதைப்போல் இந்திய மேலதிகாரி செய்வது அவ்வளவு சகஜமாயில்லை. ஏ வாலிப நண்பனே, ஆங்கிலேயனைப்போல் அல்லது ருஷ்ஷியனைப்போல் உழைப்பது உனக்கின்றியமையாதது. என்வாழ்நாளில் நான் பெற்ற சிறு வெற்றிகளுக்கு உழைப்பே காரணமாகும். இன்னும் கட்டுப்பாட்டுடன் உழைத்திருந்தேனானால் சிறந்த கிரந்தங்களை எழுதியிருக்கலாம். ஒரு ஆங்கிலேய ஆசிரியன் தன் ஆற்றலை என்னைக் காட்டிலும் பதின்மடங்கு பயன் படுத்திக் கொண்டிருப்பான். இதைக் கூறுவது ஒரு திருஷ்டாந்தத்திற்காகவே. இந்தியாவின் படிப்பாளிகள் காயாத மரங்களைப் போல் வாழ்வைக் கழிக்கின்றனர். வருங்காலத்தில், ஏ வாலிபனே, உன்னைப் போன்றவர் இப்பழியை நீக்க வேண்டும். விருத்தாப்பியர்கள் துயரம் இந்தியாவில் வாலிபர்களின் உழைப்பின்மையைப் பற்றியே. வெறும் வார்த்தையல்ல நான் கூறுவது. கனம் டாக்டர் ராஜன் அவர்கள் வீட்டுவைத்தியர் என்ற புத்தகத்தில் கூறியிருக்கிறார்: "தேகம் என்பது வெறும் ஜடமான பொருள் அல்ல. எப்பொழுதும் ஓய்வில்லாமல் சிருஷ்டி, சம்ஹாரம் என்ற நியதிக்கு உள்ளடங்கியது. சரீரத்திலுள்ள ஒவ்வோர் அணுவும் வளர்ந்தும், தேய்ந்தும், மறைந்தும், புதிதாக உண்டாக்கப் பட்டும் வருகிறது. அதனால்தான் தேகத்தில் எப்பொழுதும் சூடு இருந்து கொண்டே இருக்கிறது. வெளியில் குளிர் இருந்தாலும், உஷ்ணம் அதிகம் இருந்தாலும் சரீரத்தின் சூடுமட்டும் ஒரே நிலையில் இருக்கிறது." மனிதனுக்கு இத் தேகச் சூட்டைப்போல் உழைப்பு, அல்லது உள்ளம் என்பது ஒரே நிலையில்

இருக்க வேண்டும். ஓய்வும், விளையாட்டும் அவன் உழைப்பிற்கு ஒரு பக்குவத்தை யளிக்கும். உழைப்பின்றிப் பௌருஷம் இல்லவே யில்லை. ஏ வாலிபனே, இந்தியாவையே தூக்கி நிறுத்தும் ஆற்றல் உன்கையில் இன்று வந்திருக்கிறது.

காளிதாஸன் ரகுவம்ச அரசர்களைப் பற்றிச் சொல்லுகையில், அவர்கள் "இளமையில் எல்லா வித்தைகளும் கற்றும், யௌவனத்தில் இந்திரிய சுகங்களைத்தேடிய வண்ண மிருந்தும், விருத்தாப்பியத்தில் முனிகளின் வாழ்வை முற்றிலும்நடத்தியும், வாழ்க்கையின் முடிவில் யோகசக்தியினால் உடலை நீக்கி விடுவித்துக் கொண்டார்கள்" என்கிறான். இப்பாரத நாட்டுப் பரம்பரையில் யௌவனமும், விருத்தாப்பியமும் நீண்ட புஷ்டியுள்ள காலங்களாயிருந்தன. பிற்காலத்தில் "பாபீசதாயு: (பாபஞ்செய்தவன் நூறு வயதிருக்கிறான்)" என்ற வாக்கியம் வழங்கியிருந்த போதிலும், நம் தேசத்தவர் பொதுவாக வாழ்க்கையின் பூரண சுகங்களை விரும்பியும் அதற்கொத்தபடி யௌவனத்தையும் விருத்தாப்பியத்தையும் சிறந்த காலங்களாகக்கருதினார்கள். ஏவாலிபநண்பனே, நீ உன் யௌவனத்தைப் பல துறைகளில் வெற்றிபெறும் வண்ணம் ஆக்கிக்கொள். இந்திய வாலிபர்களும், வாலிபப்பெண்களும் தங்கள் யௌவனத்தைச் சுகமாக நடத்த விரும்பினாலும், அவர்களுக்குப் போதிய தேகபலனும், காலபலனும் இன்னும் நம் நாட்டில் உண்டாகவில்லை. இதைச் சமூகமும் அரசாங்கமும் கவனிக்க வேண்டும், உலகம் முழுவதும் வயது முதிர்ந்தவர்கள் கண்மூடித்தனமாய் ஆதிக்கம் நடத்தி, உலக வாலிபர்கள் தத்தளிக்கும் காலமிதுவே. இதற்கு அறிவாளிகளின் பிரத்தியேகச் சங்கங்களும், யுவர்களின் திரண்ட குழாங்களும் ஒன்று சேர்ந்து இயக்கங்களும் ஸ்தாபனங்களும் ஏற்படுத்த வேண்டும். எல்லோருக்கும் கட்டாய ராணுவப்பயிற்சி ஏற்பட்டால், அதை மூலமாக வைத்துப் பெரும்பான்மையான சீர்திருத்தக்கட்சியைச் சிருஷ்டிப்பதற்கு வழியுண்டு. ராணுவப் பயிற்சி மனிதரை யடிமைகளாக்குவதும் சகஜம்; ஜனநாயகம் பேரருள் பெறும் சிலதருணங்களில் ராணுவப்பயிற்சியே மனிதரின் ஆக்கத்திற்கும் சுதந்திரத்திற்கும் அடிப்படையாய் விடுவதும் உண்டு. இப்பொழுது தென் ஆசியாவின் நாடுகளின் ஜனங்களுக்கு ராணுவப்பயிற்சி நான் கூறும் நற்பயனை உடனே யளித்து வருவதை நாம் காண்கிறோம். இங்கிலாந்தின் தற்கால ஜனநாயகக் கட்சியின் ஆற்றலுக்கும் அறிவு திகழும் அனுஷ்டானப் போக்கிற்கும், அடிப்படைப் பலம் சென்ற யுத்தத்தில் நாட்டினர் முழுவதும் சரிசமான ராணுவப்பயிற்சிகளைக் கையாண்டு வந்ததிலிருந்தும், தற்சமயத்தில் சட்டமாகி விட்ட கன்ஸ்கிருப்ஷன் முறையிலிருந்தும், உற்பத்தியாயிருக்கிறது என்று கூறலாம். ஆனால் இங்கிலாந்து அநேக நூற்றாண்டுகளாகப் பயிரிட்டுவந்த ஜனநாயகப் பயிர் மற்ற நாடுகளில் விளையுமோ என்றும் சந்தேகம் கிளம்புவதுண்டு. வேண்டாம். இங்கிலாந்துப் பயிர் வேண்டாம். அமரிக்காப்பயிர் கிடைத்தால் போதும். தற்போது அமரிக்க ஜனநாயகப் பயிர் துஷ்டமிருகங்களாகிய, பணக்கொழுப்பு மிகுந்த அமரிக்கா டோரிக்கட்சி யினங்களால் அழிக்கப்பட்டு வருகிறது, இப்பொழுது தொழிற்கட்சிகளையடக்கும் சட்டங்களை உண்டாக்குவதிலிருந்து தெரிகிறதல்லவா? பிரஸிடண்டுடுருமனே நல்லவரென்று மற்றக் காட்டாள்கள் செய்து விட்டார்களல்லவா? ஆனால் பூமி தேவியானவள் ஒரு பயிராவது நசித்து விடுவதைப் பொறுக்கமாட்டாள். எழுந்து துஷ்ட மிருகங்களை இனத்தோடு பூண்டற நாசம் செய்து விடுவாள். ஜனநாயகப் பயிர் மானிட சாதியுள்ள மட்டும் தேவையான உயிர்த்தானியங்களில் ஒன்று. அது நிச்சயம்.

ஏ வாலிப நண்பனே, உன் பெயரிலிருந்தும் மற்றச் சந்தர்ப்பங்களிலிருந்தும் நீ இந்தியாவின் சிறுபான்மை வர்க்கங்களில் ஒன்றான பிராம்மணனாயிருக்கிறாயென்றே பேசுகிறேன். ஜனநாயகஆட்சியில் சிறுபான்மை வர்க்கங்கள் பிழைக்க அநேக வசதிகள் உண்டு. சிற்சில காலங்களில் அவ்வர்க்கங்களுக்கே அடியோடு நாசமும் உண்டாவதைப் பார்க்கிறேன். தற்காலத்தில் நம் நாட்டில் நம் வகுப்பினருக்கு அதிக கவலைக்கு இடமிருக்கிறது. அதை விரித்துக் கூறுவது அவசியமன்று. நாட்டிற்குச் சுதந்திரம் பரவவும் ஒரு

இனத்திற்கு அச்சுதந்திரம் நமனுயிருக்கவும் கூடும். கிரீஸ் தேசத்து அரசாங்கம் மாசிடோனியாவிலுள்ள ஸிலாவ் வர்க்கத்தினரை வதைத்து அடக்கி வருகிறதே. நம் தேசத்தில் வங்காள அரசாங்கம் சென்ற பத்து வருடங்களாக நல்ல திரண்ட ஜனநாயகம் ஒன்றை, ஒரு மாபெருஞ் சாதியாகிய இந்து சமூகத்தாரை, ஒப்பேறவிடாமல் நடத்திவிட்டது. ஆகவே இப்பொழுது வங்காளம் பிளவுபட்டுவிட்டது. இதற்கு மனித சாஸனங்களில் மருந்து சிறிது உண்டு என்றாலும் ஜாதீயக் கல்வி என்ற ஒரு சஞ்சீவியே கடைசியாக உயிர்ப்பிச்சை கொடுக்கும். தென்னாட்டில் பிராம்மணர்கள் பிழைப்பது ஒரு சிறிது கடினம்தான்—வடநாட்டிலோ அவர்கள் சில நூற்றுண்டுகளாக அமுங்கிப் போனவர்களே.

தென்னிந்தியராகிய நாம் வட இந்தியாவில் ஏராளமான தொகையில் குடியேற முடியாது. ஆனால் முற்காலத்தில் எவ்விதம் பிராம்மணர்கள் சிறு சிறு குடும்பங்களாகத் தென்னிந்தியாவின் நதிகளின் கரைகளில் தங்களிருப்பிடங்களை அமைத்துக் கொண்டார்களோ, அவ்விதமே புது நாகரிகக் கல்வியின் சின்னங்களாகவும் போர் வீரர்களாகவும் நம்மினத்தினர் இந்தியாவில் எங்கெங்கே வசதிகள் கிடைக்கின்றனவோ அங்கே போய்ச்சேர வேண்டும். இதற்கு ஒரு பெரிய கூட்டுறவு ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டும். நமக்கு இவ்விந்தியாவில் கண்ணியமான வாழ்க்கையுண்டு, புது அரசாங்கங்கள் நம்மைப் புறக்கணித்தால், நாம் முற்காலத்துப் பௌத்தர்களைப் போல் சின்னஞ்சிறு குடியரசுகளை இன்றைக்கும் ஸ்தாபிக்க முடியும். திடச்சித்தமுள்ளவர்கள், “இருப்பிடம் வேங்கடம்” என்று அமர்ந்து, வந்த இன்னல்களை நேரடியில் சமாளிக்க வேண்டும். ஆண்களும் பெண்களும் ஒருங்கே கர்ம யோகிகளாக வேண்டும். “நோற்பார் சிலர், பலர் நோலாதவர்” என்பது பிராம்மணர்களுக்குள் இனி வழங்கக் கூடாது. பழைய மத சாஸ்திரங்களையும் கற்கவேண்டும்; நவீனக் கல்வியின் சிகரங்களையும் ஏறியாக வேண்டும். அப்படிப் பிராம்மணர் தங்கள் புதிய வாழ்க்கையைச் சீர்திருத்தினார்களானால், எளியவர்களாகிய வெகு சிலர் தவிர, மற்றவர் கல்லிலும் கடினமான ஒரு சான்றாண்மையைப் பெறுவார்கள். ஈனத்தொழில்கள் செய்து பிழைக்க வேண்டியதில்லை. பள்ளிக்கூடங்களிலும், தொழிற்கல்வியாலயங்களிலும், இடங்கள் கிடைக்காமல், தவிக்கிற நம் பெரும் வாலிபக் கூட்டங்கள் சர்க்கார் அங்கீகாரம் பெருத கல்விக் கூடங்களில் படிக்க வேண்டும். பிராம்மணர்களுள் படித்தவர்கள், தொழில் நிபுணர்கள் அவற்றை ஏராளமாய் நிறுவ வேண்டும். நடுத்தரமான படிப்பு, அதற்கும் மட்டமான படிப்பு, இவைதான் நமக்குப் பின் வருகின்ற நம்மினத்தாரான வாலிபர்களுக்குக் கிடைக்கும். இருந்தாலும், மற்ற இனத்தினர், வர்க்கத்தினர் ஒவ்வொருவர் தம்புராதனத் தொழிலை நம்பியே இன்றுவரை இந்தியாவில் வாழவில்லையா? நாம் அஞ்சாது ஏதாவது ஒரு தொழிலை ஊன்று கோலாய்ப் பிடித்தாகவேண்டும். பிராம்மணன் புரோகிதத் தொழிலைச் செய்யட்டுமே, என்று ஏளனம் செய்வார்கள். வாத்தியக்காரச் சாதியில் பிறந்த உத்தியோகஸ்தன் தன் வீட்டிற்காவது சோபன காலங்களில் ஊதுவானா? அப்பொழுது தன் வீட்டுப் புரோகிதம் எல்லாவற்றையும் பிராம்மணன் தானே நடத்திக் கொள்வான். ஜனநாயகச் சக்திக்கும் “தா” என்று கையை நீட்டுவான், கையில் சவுக்கடியோ, ஈட்டிக் குத்தோ பெற்றாலும் அச்சவுக்கையும், ஈட்டியையும் பிடுங்கி எறிந்து விட்டு, அச்சனங்களின் தொகுதியை விட்டு அகலுவான். வேறோரிடத்தில் தன் பண்பாட்டை விற்றுக் கண்ணிய ஜீவனம் செய்வான். ஏ வாலிப நண்பனே, எங்கள் குலப்பெயராகிய யக்ஞவராகன் என்ற பெயரை உனக்குச் சூட்டினேன். யக்ஞபலியாகவும் முன்வரவேண்டும் நீ. ஜனதேவதை உன்னைப் போற்றியே தீருவாள். உனக்குத் தெளிவு பிறக்க வேண்டும். எல்லாப் பொருள்களையும் சமமாகவும் ஈசுவரமயமாவும் பார்க்கும் சமதர்சியின் கண் உனக்கு வேண்டும். உன் வித்தையினாலேயே நீ அமிர்தத்தைப் புசிப்பாய். நீ பட்டினிப் பேயையும், பயமெனும் பேயையும், அடிப்பாய். உனக்கு வெற்றியுண்டாகுக.

வேணும்,
முத்தோரில் இளையவன்

# டிடிடி யின்

## அபார சக்தியுள்ளதும் அபாயமற்ற தன்மையும்

# நியோஸிடில் உள்ளது

10% டி. டி. டி பௌடர்

இது கெய்கி தயாரிப்பு

DJK 6020 TAM.

★ தொட்ட பூச்சிகள் எதுவும் பிழைக்காது.

★ ஒருதரம் பட்டாலும் சாவு நிச்சயம்.

★ மனிதனுக்கும் மிருகங்களுக்கும் ஹானியற்றது.

தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ்
அடிஸன் அண்ட் கோ., லிட்.,
மௌண்ட் ரோட், மதராஸ்

DDT Geigy DDT

மைசூர் சமஸ்தானம், ஸிடட் ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் முகமத் ரஹிம் கலீலி,
99-B, ஊஸ்மான்கான் ரோட்,
பெங்களூர் ஸிடி.

கெய்கி இன்ஸெக்டிஸைட்ஸ் லிட்., நெவில் ஹவுஸ் நிக்கல் ரோட், பெலார்ட் எஸ்டேட், பம்பாய்

# மருத்துவனுக்கப்பால்

ரா. ஸ்ரீ. தேசிகன்

ஒரு பெரிய தோப்பு; அதன் நடுவே அரண்மனை போன்ற வீடு. அந்த வீட்டுக்கருகில் கார்கள் நிற்கின்றன. டாக்டர்கள் கணத்திற்கு ஒருதரம் வந்து போகின்றனர். அழகப்பசெட்டியாருக்கு வெகுநாள் தவங்கடந்து பிறந்த குழந்தை மாசிலாமணியைப் பற்றித்தான் சோணிபுரத்தினர் கவலையில் ஆழ்ந்திருக்கின்றனர். குழந்தை ஒரு மாதமாய்ச் சுரத்தினால் வருந்திக்கொண்டிருக்கிறது; குணந்தெரிந்தபாடில்லை.

ஒரு நாள் காலை ஏழு மணியிருக்கும் மலர்கின்ற காலை எழிலில் எல்லாம் தோய்ந்து நிற்கின்றன. பறவைகள் இளங்காற்றில் அசைகின்ற மரக்கிளைகளில் ஆடிக் கொண்டே இன்பமாய் இசைக்கின்றன. ஆனால் மணமும், அழகும், ஒளியும் எங்கும் நிறைந்து கிடக்கிற தருணத்திலே இரண்டு முகங்களில் மட்டும் மிகுதியான கவலை பாய்ந்து விடுகிறது. ஒளி அடித்த உள்ளங்களை இருள் மூடியிருப்பதைக் காணலாம்.

''என்ன, ஜோஸ்யரே! அழகப்பசெட்டியாரின் மகன் மாசிலாமணிக்கு ஆயுசு கெட்டிதானே'' என்றார் அழகப்ப செட்டியாரின் மானேஜரான சிவராமஐயர்.

''அதற்கென்ன தடை; சந்தேகப்படுகிறீரா?'' என்று பதிலுரைத்தார் சந்திரசேகர தீக்ஷதர், ''டாக்டர் களெல்லாம் சொன்னார்களே நினைவிருக்கிறதா? அல்லது மறந்து போய் விட்டதா?''

''ஆமாம் நன்றாய் ஞாபகமிருக்கிறது. இந்த வயதிலே பிள்ளையாவது குட்டியாவது! என்று அவர்கள் சொன்னது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

''நான் சொன்னதுதானே பலித்தது; சாத்திரம் பொய்யில்லை. அதைச் சரிவரப் பார்க்கிற மனிதர்களில்லாதபடியால் அதன் மீது பழியைச் சுமத்துகின்றனர்''

ஆமாம்; நீங்கள் சொல்லுவது உண்மையே அழகப்பசெட்டியார் விஷயத்தில் அப்படித்தானே நேர்ந்தது. பார்க்காத வைத்தியமில்லை. டாக்டர்களெல்லாம் பயனற்றகாரியம் என்று முடிவுக்கு வந்து விட்டனர். தாங்கள் சொன்ன சாந்தி செய்த பிறகுதான், அழகப்பசெட்டியார் வயிற்றில் மகன் தோன்றினான்.''

''மந்திரங்களின் மகிமையை யார் அறிகின்றார்கள். ஓடி ஆடித் திரிந்தால்தான் காரியம் என்று சொல்லுகிறார்கள். சும்மா நின்று தூய எண்ணங்களை உலகத்தின் மீது பறக்கவிட்டால், அது செயலாகாதா? எண்ணங்கள் உலகப் புரட்சிகளை எழுப்பவில்லையா? உடலினால் ஆகாதசெயலை உள்ளம் புரிந்துவிடும் என்ற உண்மையை மறந்து விட்டனர். டாக்டர், டாக்டர் என்கிறார்களே செத்தபிணத்தைச் சோதித்தால் மட்டும் போதுமா? அது உயிரின் மர்மங்களைக் காட்டிவிடுமா? உயிரோடு திகழ்கின்ற உடலையல்லவா அறியவேண்டும். மனோசக்தி ஆத்மசக்தி, இல்லை உள்ளத்தில் உறைகின்ற தெய்வசக்தி. இது எப்படி உடலை ஆட்டிவைக்கிறது என்று எவராலும் சொல்லமுடியுமோ என்னமோ, மானேஜரே இன்னும் பத்துநாளில் பாருங்கள், எதிர்பாராத ஒருசம்பவம் நடக்கப் போகிறது. குழந்தையின் வியாதி அகன்று விடும்'' என்றார் சந்திரசேகரதீக்ஷதர்.

''மந்திரமோ மருந்தோ, எதுவாயிருந்தாலும் என்ன; நாம் வேண்டுகிறது ஆயுசு தானே'' என்று பதிலுரைத்தார் சிவராமையர்.

* * *

''சுத்த பைத்தியமாயிருக்கிறாயே, அழகப்பா, மந்திரத்தில் மாங்காய் விழுமா?'' என்றார் அழகப்பரின் ஆப்தநண்பர் அகோரமையர்.

''சந்திரசேகர தீக்ஷதர் சொன்னாரே மருந்தில் காரியமில்லை'' என்று அழகப்ப செட்டியார் பேசத்தொடங்கினார்.

''அப்படியானால் ஆஸ்பத்திரிகள் எதற்காக? டாக்டர்கள் எத்தனையோ விதமான ராக்ஷதகிருத்தியங்கள் செய்திருக்கிறார்கள். தியாக மூர்த்திகளாக விளங்கியிருக்கின்றனர். ஜோஸ்யத்தை நம்பவேண்டாம் என்று சொல்ல வரவில்லை. ஜோஸ்யத்தையும் விடவேண்டாம்; வைத்தியத்தையும் விடவேண்டாம்.''

''இங்கே உள்ள டாக்டர்களையெல்லாம் கொண்டு பார்த்து விட்டேன். ஒன்றும் பயனில்லையே'' என்றார் அழகப்ப செட்டியார்.

''உங்களுக்கு யாரையாவது தெரியுமா? விடலபுரி விஜயராஜேந்திர பாபுவைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?''

"ஆமாம் கேள்விப் பட்டிருக்கிறேன்."

"எத்தனையோ பட்டம் பெற்றவர்கள் M.D. M.S. M.R. C.P. F.R. C.S. ஆங்கில அரிச்சுவடியில் எத்தனை எழுத்துக்களிருக்கின்றனவோ! அத்தனை எழுத்துக்கள் கொண்ட டிகிரிகள், பட்டங்கள் வாங்கியிருக்கிறார். மரணத் தறுவாயிலிருக்கிறவர்களையும் பிழைப்பு மூட்டிவிடுவார். அவர்களிடத்தில் காட்டினால் பையன் பிழைத்து விடுவான்" என்று கூறினார் அகோரமையர்.

"அப்படிசெய்கிறேன். நாளையே ஆட்களை அனுப்பி அழைத்துவர ஏற்பாடு செய்கிறேன்" என்றார் அழகப்பசெட்டியார்.

* * *

விஜயராஜேந்திர பாபுவுக்கு உடம்புஒரு மாதமாய்ச் சரியாயில்லை. அவருக்கு ஏதாவது உடம்பில் பிணி ஏற்பட்டால், அதை வெளியிலேகாட்டிக் கொள்ள, மாட்டார். ஊரில் இருந்தாலும், ஊரில் இல்லை என்று விளம்பரம் செய்து விடுவார். தாங்கள் கைப்பற்றிய நாட்டிலுள்ள மாந்தர்கள் நடுவே தங்கள் ஜாதியரின் பிணிகளையும் மரணங்களையும் வெள்ளையர்கள் வெளிப்படுத்துகிறதில்லையாம். நாட்டிலுள்ளவர்கள், அவர்களும் தம்மைப் போல மனிதர்கள்தாம் சாவுண்டு பிணியுண்டு என்று நினைத்து விடுவார்களோ என்ற அச்சம் அவர்கள் மனதில் குடி கொண்டு விட்டது போலும்.

விஜயராஜேந்திர பாபு ஒரு வைத்தியர். வைத்தியருக்கே நோய் வரலாமா? மரணம் வரலமா? வைத்தியர்கள் ஒரு தனி இனத்தைச் சார்ந்தவர்கள் அல்லவா?

பாபுவுக்கு நாளுக்கு நாள் பிணி வளர்ந்து கொண்டே வந்தது. அவருக்குக் கீழ்ப்பட்டவர்கள் அதை மறைத்து வைத்துக் கொண்டே வந்தனர். பிணிகளால் சாம்புகிறவர்களின் முகங்களில் ஏமாற்றமும்வருத்தக் குறிகளும் தோன்றின. இன்று வருவர் டாக்டர், நாளை வருவர் டாக்டர் என்ற ஒலியைக் கேட்டார்களே தவிர, டாக்டர் வந்த பாடில்லை. எத்தனையோ நோயாளிகளின் உள்ளங்களில் பிழைப்போம் என்ற ஆசை சிறகடித்து ஓய்ந்து விட்டது.

சோணிபுரத்திலிருந்து அழகப்ப செட்டியாரின் வேலைக்காரர்கள் விடலபுரிக்குச் சென்றனர். டாக்டர் வீட்டிற்கு அவர்கள் போக முடியவில்லை. கடல் போலப் பரந்த ஒரு கூட்டம் நிமிர்ந்து நின்றது. டாக்டர் இறந்து விட்டனர் என்ற செய்தி காட்டுத் தீயைப் போலப் பரவவே,



அருகிலுள்ள கணக்கில்லாத கிராமத்திலுள்ளவர்கள் அனைவரும் அலைக்குமேல் அலையாய்த் திரண்டுவரலானார்கள்.

"டாக்டரும் செத்துவிடுவாங்களா?" என்றான் அக்கூட்டத்திலொருவன், அனைவருக்கும் மரணம் உண்டு என்று அவன் மனத்தில் அப்பொழுதுதான் உதயமாயிற்றுப்போலும்.

இந்நிலையில் அழகப்பசெட்டியார் வேலைக்காரர்களுக்கு என்ன செய்வது என்று ஒன்றும் விளங்கவில்லை. கவலை முகங்களில் பாய வீடுதிரும்ப எண்ணிவிட்டனர்.

டாக்டர் இறந்தநாள் அழகப்ப செட்டியார் வீட்டில் ஒரு பெரியவர் நிற்கிறார். கையில் ஒரு யோகதண்டம் இருக்கிறது. இடுப்பில் கிழிந்தஉடை. மார்பை அலும்புகிறது அவருடைய நீண்டதாடி. மாசுபடிந்த தேகம்; ஆனால் கண்களில் ஒருதனி ஒளி வீசுகின்றது.

தாபம் பொறுக்காமல் இங்கே வந்தேன் தண்ணீர் கொண்டு வாருங்கள் என்கிறார். இச்சொற்கள் மாடியில் உள்ள அழகப்ப செட்டியார் செவிகளில் விழுகின்றன. அவர் விரைந்தோடி வருகின்றார். தன்னையறியாமல் அம்மஹானின் அடிகளில் விழுகின்றார்.

என் தாபம் தீர்ந்தால், உன் தாபமும் தீர்ந்துவிடும் என்ற சொல் அவர் உள்ளத்திலிருந்து பிறக்கிறது.

தண்ணீர் கொண்டு வருகின்றனர். அந்தப் புண்ணியர் அருந்துகின்றார். பிறகு தியானத்தில் ஆழ்கின்றார் அப்புண்ணியனும்.

"வாருங்கள், வாருங்கள்! உள்ளே வாருங்கள். குழந்தை கண் விழித்து விட்டான். சிரிக்கின்றான்" என்ற குரல் கேட்கின்றது.

அழகப்ப செட்டியார் உள்ளே போகின்றார். அவருடைய வியப்புக்கு அளவே இல்லை. குழந்தையை முத்தமிடுகின்றார். தாபந்தணிந்து விட்டதை நோக்குகின்றார். "என்மணியே, என் கண்ணே வயிற்றிலே பாலைக்கறந்தாயே" என்றெல்லாம் உவகையால் கூறினார். உடனே தியானத்தில் ஆழ்ந்த பெரியாரின் நினைவு வருகின்றது. அவர் வருவதற்குள் அவர் மறைந்து விடுகிறார். அவரைத் தேடித் தேடிப்பார்க்கின்றனர். அவரைக்காணோம்.

விடலபுரி வைத்தியர் இறக்கின்றார்! இங்கே ஒரு குழந்தை கண்விழித்து நோக்குகின்றது.

மந்திரமா, வைத்தியமா? என்ற பேச்சு எங்கும் எழுகிறது.

ஜோஸ்யரே உம்முடைய ஜோஸ்யம் பலித்து விட்டது. என்ற இன்பமொழி அழகப்ப செட்டியார் வீடு முழுவதும் கேட்கின்றது.


# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 **SUNDARI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

**K. S. MEHTA & CO.**

250, China Bazaar, MADRAS.

# ஜெபுன்னிஸாவின் தோல்வி

எஸ். என். ராஜலக்ஷ்மி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அச்சமயம் அவள் உத்தரவை நிறைவேற்றிவிட்ட சீட்டை ஒரு தாதிப் பெண் கொண்டு வந்தாள்.

"ஜோஹ்ரா! அமிருத்தின் நிஜமாகவே இதைச் செய்து முடித்திருப்பானு? இது உண்மையாக இருக்குமா?"

"ஆமாம்! அரசி!"

"ஐயோ! நானே என் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டேன். ஹிருதயத்தில் சுமக்க முடியாத சுமை அழுத்துகிறதே! இம்மஞ்சம்! இத்துகில்கள்! ஆபரணங்கள் எல்லாம் ஒரே எரிச்சலாய் எரிகின்றனவே!

"ஐயோ! அப்பா! நெஞ்சு பற்றிக் கொண்டு விட்டதோ! தாங்க முடியவில்லையே. இவைகளைப் பிய்த்து எறிந்து விடுகிறேன்" என்று எல்லாவற்றையும் பிய்த்துப் பிடுங்கி வீசினுள்.

"அரசி! பொறுத்துக் கொள்ளுங்கள். இவ்வாறு செய்யக் கூடாது"

"ஆம்! பொறுத்துக் கொள்வேன். ஒரு முபாரக் இறந்தால் நூறு முபாரக் பிறப்பார்கள். என்ன பிரமாதம்"

"ஆம் அரசி"

"சாத்தியமில்லையே ஜோஹ்ரா! என் குடல் நடுங்குகிறது. அவனை எப்படிச் சர்ப்பம் கடித்ததோ அம்மாதிரி என்னையும் கடித்து விட்டதென்றே நினைக்கிறேன்"

"அரசி! தைரியத்தை இழக்காதீர்கள்; சாந்தமடையுங்கள்"

"ஹா! அரசகுமாரியின் ஹிருதயத்தில் கூட அன்பு விதை முளைக்கிறது என்பதை இன்று தான் கண்டு கொண்டேன். வெறும் காமம், மோஹம் என்றே என்னையே நம்பி ஏமாந்தேன். அன்பின் ஆழம், வேகம், இத்தனை தூரத்திற்குக் கொண்டு வந்து விடுமோ? என் கர்வத்தினுல் நான் குருடியாகி விட்டேன். அந்தக் கர்வம் இன்று க்ஷணநேரத்தில் பொடி சூரணமாகி விட்டது. அன்பின் வலிதான் மிகுந்து நிற்கிறது" என்று தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறினுள் ராஜகுமாரி. நெடுநேரம் மனமார அழுது தீர்த்தபிறகு அவள் மனம் சற்றே சாந்தமடைந்தது.

"ஜோஹ்ரா! முபாரக்அலியின் மனைவியின் பெயர் என்ன?"

"அரசி! அவள் பெயர் தரியாபீபி."

"நீ போய் அவளைக் கூட்டிவா" என்ருள் ராஜகுமாரி.

சற்று நேரத்தில் தரியாபீபி ராஜகுமாரியின் முன்பு பிரசன்னமானுள்.

"நீதானு தரியாபீபி?"

"ஆம் அரசி."

"முபாரக்அலி ஸர்ப்பம் தீண்டி இறந்த தாய்க் கேள்விப்பட்டேன்."

"ஆம் நீங்கள் கேள்விப்பட்டது உண்மை தான்"

"நீ பிரசித்தி பெற்ற ஹகீம் மோமீனுவின் புத்திரிதானே?"

"ஆம் அரசி"

"உனக்கு ஜோசியம், மந்திரம் தெரியுமா?"

"ஆம்! ஏதோ கொஞ்சம் தெரியும்"

"அப்படியானுல் முபாரக் இறப்பதை முன்பாக அறிந்து தடுக்கலாமே"

"அரசி! விதியை யாரால் வெல்லமுடியும்? நடந்தது நடந்தாகிவிட்டது"

"ஆம். விதி வல்லமை பொருந்தியதுதான். தரியாபீபி! நான் மிகவும் உள்ளம் உடைந்து போயிருக்கிறேன். நீயும் ஒரு ஸ்திரீதான். என் உள்ளத்தின் நிலைமையை அறிந்துகொள்ள முடியும் என்றே நம்புகிறேன்."

"ஆம்! அறிந்து கொள்கிறேன்."

"எவ்வாறு ஜோஸ்யத்தினுலா?"

"நீங்கள் எப்படி நினைத்தாலும் சரி"

"என் எண்ணம் என்னவென்று தெரியுமா?"

"தெரியும். என்மீது கோபிக்காம லிருந்தால் சொல்லுகிறேன்,"

"இல்லை. சும்மா சொல். பயப்படாதே"

"அரசி! தாங்கள் ஒருமுறை மன்ஸப்தார் முபாரக்அலியைச் சந்திக்க விரும்பு கிறீர்கள்'

"ஆம்! ஆம்! ஆச்சரியம்! இதைஎவ்வாறு அறிந்தாய்?"

"அரசி! நான் ஹகீம் மோமினாவின் புதல்வியல்லவா?"

"அப்படியானுல் உன் கணவன் யாரால் எவ்விதமாகக் கொல்லப்பட்டான் என்ற விபரமும் தெரியுமல்லவா?"

"ஆம்! தெரியும் அரசி"

"அப்படியானுல் உனக்குச் சத்துரு ஸ்தானத்தில் உள்ள எனக்கு உதவி செய்ய முன் வருவாயா? நானும் உன்னிடம் எப்படி நம்பிக்கை வைத்து அசாத்யமான காரி யத்தைச் செய்யும்படி கேட்பது? நடக்கக் கூடியதா?"

"ஆலம்கீர்பாதுஷாவின் புத்திரியின் முன் னிலையில் அசாத்யமான காரியம் ஒன்றுமே யில்லை. அன்றி தரியாபீபியின் உடலில் உயிர் உள்ளவரை தங்கட்குப் பயமே வேண் டாம். வாக்குத்தவறும் வம்சத்தில் பிறக்க வில்லை இந்த அடிமை தரியாபீபி"

"தரியா! நீ இவ்வளவுதூரம் என்னை மன்னிக்ககூடும் என்று நான் சிறிதும் நம்ப வில்லை. உன் உயர்ந்த குணங்களை எண் ணிப்பார்க்கக்கூட என் உள்ளத்தில் திறமை யில்லை.

"நல்லது! என் எண்ணத்தைப் பூர்த்தி செய்வாயா?"

"அரசிளங் குமாரியின் எண்ணம் எதுவோ"?

"ஒரே ஒரு முறை முபாரக் அலியிடம் இரண்டு வார்த்தைகள் பேசினுல் போதும்."

"அரசி! இறந்து போன மனிதரிடம் எப்படிப் பேச முடியும்"?

"நீ மந்திரம், தந்திரம் ஜோசியம் தெரிந் தவள் என்று சொன்னுயே"

"அதற்கும் ஒரு எல்லையுண்டல்லவா! நல்லது முயற்சிக்கிறேன். உங்களுடைய ஆவலைப் பூர்த்தி செய்ய அல்லா அருள் வாராக. ஆனுல் ஓர் உடன் படிக்கையின் பேரில் தான் செய்ய முடியும்"

"அது என்ன உடன்படிக்கை?"

"அரசி! ஸ்வப்பனத்தில் தான் தாங்கள் சந்திக்க முடியும் என்று நினைக்கிறேன்".

"அதுவே போதும் தரியாபீபி! இந்தா இதை எடுத்துக் கொள்" என்று விலையு யர்ந்த ஒரு முத்து மாலையை எடுத்துக் கொடுத்தாள் ஜெபுன்னிஸா.

"அரசி உங்களுடைய பரிசுக்காக நான் ஆசைப்பட்டு இதைச் செய்து முடிக்க முன் வரவில்லை. உங்கள் ஹிருதயத்தின் வேதனையை நன்ருக அறிந்து அவ் வேதனையைத் தீர்க்கத்தான் இச்செய் கைக்கு உடன் பட்டிருக்கிறேன்.

"இந்த அபலைக்கு அவை தேவையில்லை. அரசி! முடிவில் நானும் ஒரு ஸ்திரீ உள்ளம் படைத்தவளே.

"விதியின் வலிமையால் என் சௌந்தர்ய திரனை முபாரக்கை நேசிக்க விழைந்த தங்களின் ஹிருதயத்தின் வலியைத் தீர்ப்ப தற்கே மட்டும் இக்காரியத்திற்கு இசைந் தேன். அன்பின் வலிமையும், அன்பால் தாக்குண்டு சிதறிப் போயிருக்கும் தங்கள் உள்ளம் எந்த நிலையிலிக்கிறது என்பதையும் நான் அறிந்திருக்கிறேன்" என்ருள் தரியாபீபி.

கடின சித்தமுடைய பேரழகியான ஜெபுன்னிஸாவின் கண்களில் நீர் சுரந்தது.

"தரியாபீபி! என் ஆயுள் பரியந்தம் உனக்குக் கட்மைப்பட்டுவிட்டேன்"

"நல்லது அரசி! இன்றிரவு உமது எண்ணம் நிறைவேறும்.

உங்களுடைய தார்த்தாரிப் பெண் களிடம் சொல்லி வையுங்கள். இரவு நடுநிசியில் யார் வந்தாலும் தடுக்கக் கூடா தென்று சொல்லி வையுங்கள். நான் போய் வருகிறேன்"

"கடவுள் கிருபை, நல்லது போய்வா"

தரியாபீபி போய் விட்டாள். ராஜகுமாரி குழம்பிப் போன உள்ளத்துடன் தலை யணையில் சாய்ந்து கொண்டாள்.

## 6

இரவு நெடு நேரமாகியும் ஜெபுன்னிஸா வின் கண்கள் மூட மறுத்தே விட்டன.

"ஐயோ! பிரிய முபாரக்! என் இஷ்டத் திற்கு இணங்காத உன்னைக் கொலை செய் வித்து விட்டால் உள்ளம் ஆறுதலடையு

மென்று எப்படி எண்ணினேன்? ஆறுதலுக்குப் பதிலாக இருதயத்தையே உடைக்கும் படியான வலியன்றோ ஏற்பட்டு விட்டது உள்ளத்தில்? உன்னை என் போகக் கருவியாகத்தான் நினைத்தேன்! ஆனால் இந்தக் கடினமான ஜெபுன்னிஸாவின் ஹிருதயத்தில் உன் அன்பின் விதையை ஊன்றி விட்டாய்? உன்னைத் தொடர்ந்து என் ஹிருதயம் எவ்வளவு தூரம் போயிருக்கிறது என்பதை நீ இறந்த பின்புதான் அறிகிறேன்.

"மகாபாபியாகி விட்டேனே! உன் உயிர் எப்படித் துடித்ததோ! உன் அழகிய சரீரம்எப்படிப் பாழாய்ப்போயிருக்குமோ! முபாரக்! உன் எழில் மிகுந்த முக கமலத்தைக் காட்டி விட்டுப் போய்விடு; அது போதும்! என் உள்ளம் காமத்தை ஜயித்துக் காதலை அடிமை கொண்டு விட்டது! என் காமத்திற்காக நீ பலியிடப் பட்டாய். உன் காதல் என்னைப் பலியிட்டு விடும் போலிருக்கிறது" என்று தனக்குத் தானே பலவாறு பேசிக் கொண்டாள் ஜெபுன்னிஸா.

நெடுநேரம் கண்களை மூடிக்கொண்டு கற்பனையுலகில் கிடந்தாள் போலும். திடீரென்று கண்களை விழித்தாள். எதிரே சௌந்தரிய வீரனான முபாரக் முல்லைச் சிரிப்புடன் கம்பீரமாய் நின்றிருந்தான்.

அவளது நெஞ்சத்தைப் பயம் சூழ்ந்து கொண்டு அவளை மூர்ச்சைக்குள்ளாக்கி விட்டது.

ஆனால் அன்பின் மிகுதியால் சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்தது. ஆனால், அவள் உடல் இன்னும் நடுங்கிக் கொண்டு தானிருந்தது.

"நீயார்! சொல்! சொல்!!" என்றாள் நடுங்கும் குரலில்.

"நான் தான் உன் பிரியத்திற்காகப் பலியிடப்பட்ட முபாரக். எவனை உன் காமத்திற்காகக் கொலை செய்வித்தாயோ அந்தத் துரதிர்ஷ்டவானான ஏழை மன்ஸப்தார் தான்"

"ஐயோ! அதேகுரல்! அந்த மதுரமான இன்குரல்! முபாரக்! நீ பிழைத்திருக்க முடியுமா! நான் தான் உன்னைக் கொன்று விட்டேனே! உயிருடனா இருக்கிறாய்! ஐயோ! என் ஹிருதயத்தைப் பிளந்துபார். அங்கு உன் காதலின் ஜ்வாலை பற்றி எரிகிறதைப் பார்ப்பாய்! இருந்தும், இறந்துபோய்க் கூட நீயே வெற்றி கொண்டாய். நான் தான் தோல்வியடைந்து வீழ்த்தப்பட்டேன். அன்பனே! அந்த விஷப்பாம்பைக் கொண்டுவா! நானே என்னைக் கடிக்க வைத்துக் கொள்கிறேன்.

"பார்க்கிறேன், நீ எப்படித் துடித்து இறந்தாய் என்று நானும் அனுபவித்துப் பார்க்கிறேன். என் அன்பின் வேகத்திற்காக நீ இறப்பதில் என்ன லாபம் அடைந்தேன் என்று நான் பார்க்கிறேன்" என்று பிதற்றினாள் ராஜகுமாரி.

"ஆனால் ராஜகுமாரிகட்கு அன்பினால் என்ன லாபம்! அவர்கள் அன்புக்கு அடிமையாக மாட்டார்களே! அவர்கட்கு சுகப்படுவது தான் வேலை, சுகப்படத்தான் பிறந்திருக்கிறார்கள்.

"அன்பனே! அந்த ராஜகுமாரி இந்த வுடலை விட்டு இறந்து போய்விட்டாள். இவள் உன் பிரேமையின் தாஸி. உன் காதலில் அடித்து வீழ்த்தப்பட்டுப் போன அடிமை துரதிர்ஷ்ட ஜெபுன்னிஸா. என்கர்வம் பங்கமடைந்தது. என் காமப் பேய் ஓடி ஒளிந்தது. அன்பின் வலிதான் ஹிருதயத்தைப் பிளக்கிறது. நீ எப்படியிருந்தாலும் சரி. ஒரு முறை, ஒரே ஒரு முறை என்னை உன் கையால் வாரி அணைத்துக்கொள். பிறகு நரகமோ, ஸ்வர்க்கமோ எங்கே நீ செல்வாயோ, அங்கே அழைத்துச் செல். என் குற்றங்களை மன்னித்துக்கொள். உன் மேன்மையான குணத்தால் மன்னித்து விடு" என்று கதறினாள் ஜெபுன்னிஸா.

"ராஜகுமாரி! கடவுள் அருளால் நான் எதனால், யாரால் உயிர்ப்பிக்கப்பட்டேன் என்பதை அறிந்திருப்பீர்கள்! யாரால் நான் உயிரைத் திரும்பப் பெற்றேனோ அந்தப் பரிசுத்தவதிக்காக என்னை மன்னித்து விட்டுவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். என்னை, புனர்ஜன்மமெடுக்கச் செய்தும், உங்கள் பிழையை மன்னித்தும் மறுபடியும் உங்களின் கடைசி ஆவலைப்பூர்த்திசெய்ய உங்கள் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியவளும், வீரஸ்திரீயுமான அந்த அபலை ஒரு சாதாரண ஸ்திரீயாயிருக்க முடியுமா?" என்றான் முபாரக்.

"ஆம்! அவள் ஒரு தேவஸ்திரீதான். நான் என் உள்ளத்தில் தோன்றிய அன்பை அப்படியே நசுக்கி விடப்பிரயத்தனம் செய்வேன். மேலும் அப்பரிசுத்தவதிக்கே உன்னை ஒப்புவித்துச் சொந்தமாகிவிடுகிறேன். நீ அவளுடையவன் தான். என் காம மிகுதியால் உன்னைக் கொன்றேன். அவளுடைய பரிசுத்தத்தால் நீ மறுபடி பிழைத்தாய். உன்னை என்னுடையவனாக நான் நினைத்தது பிசகு. அவளுடைய பொருள் நீ.

"அவள் உன்னை மறுபடி பிழைப்பித்து, தன்னுடையவனாகவே ஆக்கிக் கொண்டாள். அவளுடையவனே நீ என்பதற்கு இதுவே அத்தாட்சி.

"நல்லது நீ போகலாம். என்னை மன்னிக்க முடியுமானால் மன்னித்து விடு"

"ராஜகுமாரி! உங்களுடைய அன்புக்கு நான் என்றும் கடமைப் பட்டவன். அவள் என்னை மரணத்திற்குப்பயப்படாமல் இருக்கும்படி தைரியம் கொடுத்தாள். இப்போது பிழைத்தெழவும் உதவியவள் அவளே. அன்பு என்பது ஹிருதயத்தின் வியாபாரம். ஹிருதய வியாபாரியாகிய அவள் என் அன்பை விலைக்கு வாங்கிக் கொண்டு விட்டாள். வியாபாரி தன் சரக்கை இழக்க எங்கேனும் சம்மதிப்பானா? ஆதலால் உங்களால் கொள்ளையிடப் பட்ட அவள் சரக்கைத் தேடி மீட்டுக்கொண்டாள். அவளுக்காக என்னை மன்னித்து விடுங்கள்"

முபாரக் அலி மெதுவாக எழுந்து திரும்பிப் பார்த்துக் கொண்டே அந்தப் புரத்தை விட்டு வெளியே சென்று காரிருளில் மறைந்து போனான்.

7

பொழுது பல பல வென்று விடிந்தது. சூரியனின் உஷ்ண கிரணங்கள் ரங்க மஹாலின் மீது வீசிப் பிரகாசிக்கச் செய்தன.

ஆனால் தாதிகளும், அடிமைகளும், ரங்க மஹாலில் தந்தக் கட்டிலில் கிடந்த ராஜகுமாரியைப் பார்த்து மிக்க அதிசயமடைந்தார்கள். ஒரே நாளில் அவளுடைய அதி சௌந்தர்யம் தேய்ந்து வாடிப்போய், பாதிச் சிதையில் எரிந்து கருகிப் போன கட்டை போலிருந்தது.

காலையில் மலர்ந்து, வெயிலில் கருகிப் போன மலர் போல, கருகிப் போய்க் கிடந்தது அவள் கமலமுகம். முகத்தில் ஜீவனற்ற களை. கண்களில் கருமை படர்ந்து ஒரே நாளில் பல வருஷங்களைக் கடந்த ஒரு வயோதிக ஸ்திரீயின் தோற்றத்தைக் கொண்டிருந்தது அவளுடைய பேரழகு வாய்ந்த சரீரம். தாதிகளும், சேடிகளும் அவளுடைய ஜீவனற்ற நிலைமைக்குக் காரணம் தெரியாமல் அதிசயித்துக் கொண்டிருந்தார்கள்.

(ஹிந்தி "மாயா" பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது)

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

# சித்ரா

கே. சுந்தரம்மாள்

"பிரபாகர்! மனதைத் திடப்படுத்திக் கொள். நான் சொல்லப்போகும் விஷயம் உன் வாழ்க்கையைப் பற்றியது"

"அதிர்ச்சி இனிமேல் புதிதாக உண்டாக வேண்டும். பீடிகை யில்லாமல் விஷயத்தைச் சொல்லு"

சித்ரா வந்ததிலிருந்து அன்றுவரை நடந்த விஷயங்களைச் சொல்லி முடித்தான்.

"மித்ரா! சித்ராவா? அடையாளமே தெரியவில்லையே. ஆனால் காலையில், மாமா இவள் எந்த ஊர்? சித்ராவின் ஜாடையிருக்கிறது, என்று சொன்னார். ரோஜா நிறக் கன்னமெங்கே? ஒட்டியுலர்ந்த கன்னமெங்கே? துள்ளி விளையாடும் கண்களெங்கே? சோகம் தங்கிய கண்களெங்கே? என்னருகில் வந்தும் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையே! ஆனால் என் மனம் நிம்மதி யடைந்தது. இனி நான் பாக்யவதி" என்றாள் சுகன்யா?

"சௌதாமினி! என்கூடப்பிறந்து என்னை விட்டுக்கொடுத்துவிட்டு அவளுக்கு உதவி செய்தாயல்லவா? உனது ஒரே சொல்லில் எனது வாழ்க்கை எவ்வளவு இன்பகரமாகச் சென்றிருக்கும்? பெண்ணினம் பெண்ணையே சாரும்" என்றான், வெறுப்புடன்.

"அண்ணா மன்னித்துவிடு. ஆனால் நீ எந்தக் குழந்தைக்காக ராமேசுவரம்வரை போய் வந்தாயோ, அதுபோல் குழந்தையின் மீதுற்ற ஆணைக்கு நான் கட்டுப்பட வேண்டியதாயிற்று. சத்யத்திற்கு மதிப்புக் கொடுப்பது நமது குலப் பெருமையல்லவா? ஏன் சத்யம் செய்தாய் என்பாயோ? அந்தச் சமயம் அவள் நிலைமையைப் பார்த்தவர்கள் யாராக இருந்தாலும் எந்தத் தியாகத்தையும் செய்வார்கள். ஓர் அபலைப் பெண் எவ்வளவு துன்பம்தான் பொறுப்பாள்? வறுமையில் பிறந்ததற்கு இவ்வளவு தண்டனையா? நான் அன்று மறுத்திருந்தால் உன்னை வரவழைப்பதற்குள் அவள் என்னையும் ஏமாற்றிச் சென்றிருப்பாள். அன்று அவள் மன நிலை அப்படியிருந்தது. நமது உரிமைப் பொருள் கண்டவிடத்துத் திண்டாடாமல் இருக்கப் பாடுபட்டேன். நீ அறியாமலே உன் குழந்தையின் பாசம் உண்டானது இயற்கையின் விநோதம். இரண்டு வருஷமாக நீ அவனைப் பார்க்கவில்லையே. என்ன அழகு! என்ன புத்திகூர்மை! சின்ன பிரபாகரன் என்றுதான் சொல்ல வேண்டும். அவனிடம் உன்னைக்கண்டு ஆறுதல் கொள்ளுகிறாள் சித்ரா. ட்யூஷன் வைத்திருக்கிறாள். வெகுசீக்கிரம் படிப்பு வருகிறது. அம்மாவுடன் சேர்ந்து பாடுகிறான்" என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

"சரி சரி, ரொம்ப அளக்காதே" என்று சொல்லும் பொழுதே அவனை அறியாமல் முகத்தில் பெருமைக்குறி தென்பட்டது. "ராகவா! நீகூடச் சேர்ந்து கொண்டாயல்லவா?" என்றான். "நீ மடையன், அதற்கு நான் என்ன செய்வது? விஷயம் தெரிந்ததும் சட்டெனத் தைரியமாக ஏற்பாடு செய்யாமல் தலையைச்சுற்றி மூக்கைப் பிடிக்கப் பார்த்தாய். நான் உன் தங்கையின் சொல்லிற்கு அன்று கட்டுப்படாவிடில் உன்னுடன் நானும் சேர்ந்து கொண்டு இருவருமாகச் சிப்ளா கட்டை தட்டிக் கொண்டு கிளம்ப வேண்டியதாக இருக்கும். எல்லாம் உன்னால்தான். பெண்கள் சம உரிமை என்ற உணர்ச்சியை ஊட்டினாய். அவர்களே உன்னைத் திருப்பினார்கள். சம உரிமை, தாம்பத்தியமில்லை யென்றால், வேண்டாம். படிப்பும் உத்தியோகமும் எங்கள் வாழ்க்கையைச் சீர்படுத்தும் என்ற தைரியம் அவர்களைக் காப்பாற்றுகிறது. அதுதான் பெண்களுக்கு 'அ' என்ற அக்ஷரமே தெரியக்கூடாது என்றார்கள்" என்றான். யாவரும் கொல்லெனச் சிரித்தார்கள்.

"ராகவா" நான் மடையன் என்பதைப் பணிவாக ஒத்துக் கொள்ளுகிறேன். மேலே என்ன செய்யவேண்டும் சொல் பார்க்கலாம்"

"இதென்ன கேள்வி? செய்ய வேண்டு வதையெல்லாம் நான் சொல்லித் தரமுடியுமா?" என்று சிரித்தான். "உன் ஹாஸ்யம் இருக்கட்டும். இது வரை அவளைக்காண என் மனம் துடித்துக் கொண்டிருந்தது. அவள் சமீபித்து விட்டாள் என்றதும் எப்படி அவள் முகத்தில் விழிப்பது என்று அஞ்சுகிறது என் மனம். உன்னையன்றி ஒருவரையும் கண்ணெடுத்துப் பாரேன் என்று சொன்னவன் கர்ப்பச்சிகிச்சைக்காக அவளிடம் மற்றொரு பெண், மனைவி என்ற பதத்துடன் வந்திருக்கிருள். எப்படி நான்......"

"ஐயோ! வெட்கக்கேடே. இதென்ன பிரமை? அவள் அப்படி நினைக்கமாட்டாள். என்னை வேண்டும் போது கூப்பிடச் சொன்னாள். மணியை அழுத்தட்டுமா?" என்ருள் சுகன்யா.

"வேண்டாம் சுகன்யா! இந்த மாதிரி சந்திக்கத் தனிமையே நல்லது. மனம் திருப்தியுறும். வேண்டுமென்ருல் நான் அவளை நிறுத்தி யிருக்க முடியாதா?"

"இந்த விஷயங்கள் பேசி முடிய மணி ஏழரை யாகிவிட்டது இரவு இவ்விடம் யார் படுப்பது வழக்கம்?" என்ருள் சௌதா. "அத்தையும் அத்திம்பேரும் வருவார்கள். நர்ஸ் பக்கத்திலிருப்பாள். மூன்று பேர் மாறி மாறி விழித்துக் கொண்டிருக்க மூன்று நர்ஸ் ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்ருன் பிரபாகரன்.

சரி நாங்கள் வீட்டிற்குச் செல்லுகிருேம் என்று முடிக்கும் பொழுது, சுகன்யாவின் பெற்ருேர்கள் வந்தார்கள். "நல்ல சமயத்தில் வந்தீர்கள். நாங்கள் போய் வருகிருேம்" என்று சொல்லி விட்டு, மூவரும் வெளியில் சென்ருர்கள்.

* * *

வாசற்படிக்கடுத்த முன் ட்ராயிங் ஹாலில் சோபாவின் மீது சாய்ந்து கொண்டு சிந்தனைகிராந்தையாக உட்கார்ந்து கொண்டிருந்தாள் சித்ரா. கையிலிருந்த புஸ்தகத்தை வைத்துவிட்டுச் சித்ராவின் பக்கத்தில் வந்து நின்று கொண்டு 'அம்மா' என்று அவள் சிந்தனையைக் கலைத்தான் சுபாஷ்.

"ஏண்டா கண்ணு" என்று மைந்தனை வாரி எடுத்து அணைத்து முத்தமிட்டு மடியில் உட்கார வைத்துக் கொண்டாள். "அம்மா! தாராசந்த், கோவிந், முரளி- இவர்களுக்கெல்லாம் அப்பா வந்திருக்கா, பொம்மை சட்டை யெல்லாம் வாங்கிண்டு வந்திருக்கா. எங்க அப்பா எங்கே அம்மா" என்ருன்.

எதிரில் மாட்டியிருக்கும் மூன்றடி உயரமுள்ள பிரபாகரனின் படத்தைக் காட்டி "இதோ இருக்கிருர் உன் அப்பா. அத்தை, நான் எல்லோரும் உனக்குப் பொம்மை யெல்லாம் வாங்கிக் கொடுக்கலையா?"

"போம்மா! எப்போதும் படத்தைக் காட்டி ஏமாத்தறே, நிஜ அப்பாவேணும். எங்கப்பா வாங்கிண்டு வந்தார்னு நானும் அவங்க கிட்டே சொல்லணும், எங்க அப்பா எப்பொ வருவார் சொல்லு" என்ருன் தாயின் கழுத்தைக் கட்டியவாறு.

"உங்க அப்பா இங்கே வரமாட்டாரடா, கண்ணு" என்று குழந்தையை முகத்துடன் சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

"ஏம்மா, நீ டு விட்டுட்டயா?"

"நான் விடவில்லைடா"

"பின்னே அவர் விட்டுட்டாரா?"

"அவருமில்லை, நானுமில்லை, சாமி என்னைவிடச் சொன்னர்"

"நீ சாமிட்டே கேளு அம்மா, சுபாஷ் அப்பாவேணும்னு சொல்ருன், அதனல் நான் சேத்தி போடறேன் என்று கேளு அம்மா. நீ அப்பாபடத்தைனு பூஜை பண்ணுவாய். சாமி எங்கே யிருக்கிருர்?"

"சாமின்னு எங்கே நினைச்சோமோ அங்கே யெல்லாம் இருப்பார்"

"அப்படின்னு இங்கே சாமின்னு நினைச்சுக் கேளு. எனக்கு இப்பொ அப்பா வேணும்?

"நான் ஒண்ணு சொல்லுவேன் கேட்பாயா?"

"உம்."

"இந்த ஊருக்கு அத்தை சந்திரலேகா எல்லோரும் வந்திருக்கா"

"ஏனம்மா இங்கே வல்லையே"

"கேளு. அத்தைக்கு அம்மா எல்லாம் அங்கே ஒரு வீட்டில் இருக்கா, உங்க

# பேபி கமலாவின் அழகுபடுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப்...



கட்டழகி கமலாவின் அப்பழுக்கற்ற இனிதான வதனமே அவரது கவர்ச்சிக்கு முக்கிய காரணம். நீடித்து நிற்கும் சரும எழிலின் ரகசியம் தவறாமல் ஒரு அழகுபடுத்திக் கொள்ளும் முறையை கையாள்வதுதான் என்பது அவருக்குத் தெரியும். ஆகையால், சரும பாதுகாப்பில் தனி சிரத்தையெடுத்துக் கொள்கிறார். லக்ஸ் டாய்லட் சோப்பின் தாராளமாயுண்டாகும் நறுமணங்கொண்ட நுரை அவர் சருமத்தை குளுமையாகவும், மிருதுவாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்கிறது. நீங்களும் ஏன் கமலாவைப் போல் இந்த வெண்மையான குற்றமற்ற சோப்பைக்கொண்டு உங்கள் வதன எழிலை காப்பாற்றக்கூடாது?

*ஏ.வி.எம். பிரொடக்ஷன்ஸாரின் "நாம் இருவர்" என்ற புதுப் படத்தில் பேபி கமலாவை பார்க்கலாம். இந்த சமூகப் படத்தில் அவரது சிறந்த நடிப்பு அவருக்கு தனிப் பெருமையளிக்கும்.*




## லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களுக்கு அழகுதரும் சோப்

LTS. 162-23-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

அப்பாவும் அங்கே வந்திருக்கிறார். நாளைக்கு காலம்பர மாமியைத் துணைக்கு அனுப்புகிறேன். நீ உன் குஞ்சு மோட்டார்லே ஏறிண்டுபோய் ஜம்னு உங்கப்பாவைப் பார்த்துவிட்டு வா''

''ஏன், நீ வரமாட்டாயா?''

''நான் வரமாட்டேன். நீ வேண்டுமானால் உங்கப்பாகூடவே இரு.''

''நீ வரவேமாட்டியா? உன்னை விட்டுட்டா போகணும். போம்மா நான் மாட்டேன். நீயும் வராவிட்டால் நானும் போமாட்டேன். அப்பாவை இங்கே வரச்சொல்லு. அத்தைகிட்டே சொன்னா கூட்டிண்டு வருவா.''

''உன் அப்பா இங்கே வரமாட்டார் தெரியுமா?'' என்றாள்.

''போம்மா, வரணும்''

''உனக்கு அப்பா வேண்டுமா? நான் வேண்டுமா''

''இரண்டு பேரும்''

''அது முடியாது'' என்றாள்.

குழந்தையுள்ளம் இதைத் தாங்கவில்லை. அப்பா வரணும் என்று அழ ஆரம்பித்தான்.

''இதைப்பார், அழாமல் சமத்தாகத் தூங்கினால், நீ கண்ணை விழிக்கும்பொழுது உன் அப்பா வருவார். இதோ ரேடியோ திருப்புகிறேன், பாட்டைக் கேட்டுக்கொண்டு நான் உன்னைக் கட்டிக்கொள்ளுகிறேன், நீ தூங்கு.''

''அப்படின்னா அப்பா வந்துவிடுவாரா?''

''உம்'' என்று ரேடியோவைத் திருப்பிவிட்டு, குழந்தையை மடியில் வைத்து அணைத்துக்கொண்டாள். ''இதென்ன சோதனை? சாயங்காலம் அவரைக் கண்டது முதல் என் மனம் படும்பாடு ஈசனறிய வேண்டும். இவ்வளவு நாட்களாக நான் சொல்லும் சமாதானத்தில் திருப்தியுற்ற குழந்தை இன்று இவ்விதம் பிடிவாதம் செய்கிறானே'' என்ற சிந்தனையை,

''பாராளும் மன்னன், கண்மணி, என் குழந்தை ஏழைபோல் கானில் வாட, அம்மம்மா, மனம் தாளேன்'' என்று ரேடியோவிலிருந்து எழுந்த பாட்டு கலைத்தது. ''சரியான சமயத்தில் சரியான பாட்டு'' என்றது அவள் வாய். பாட்டு முடிந்ததும் கதவைத் தட்டும் சப்தம் கேட்கவே ''யாரது'' என்றாள்.

பதில்லாமல் மறுபடி கதவு தட்டப்பட்டது. சுபாஷை உட்கார வைத்துவிட்டு, எழுந்து சென்று கதவைத் திறந்தாள். பிரபாகரன் உள்ளே நுழைந்தான். எதிர்பாராத வரவு அவளை ஸ்தம்பம்போல் நிற்கச் செய்துவிட்டது. கதவைத் தாளிட்டுவிட்டுத் திரும்பி இரண்டடி வந்து சித்ரா உட்கார்ந்திருந்த சோபாவில் உட்கார்ந்தான். தன் பக்கத்தில் புதிய ஆள் வந்து உட்காரவே, சட்டென எழுந்திருந்து அம்மாவின் பக்கத்தில் போய் நின்று அவள் சேலைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டான்.

''அம்மா! இது யாரு?'' என்றான் மெல்லிய குரலில்.

''அவர் உன் அப்பா?'' என்றாள் நிதானமாக.

''நீ சாமியைக் கேட்டாயா? நான் கண்ணை மூடினேன். அப்பா வந்துவிட்டார். நான் அப்பாகிட்டே போகலாமா?'' என்றான்.

வாய் திறவாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தவன்,

''சுபாஷ்! இங்கே வா! நான்தான் உன் அப்பா.'' என்று கையை நீட்டினான். தயங்கியவாறு பக்கத்தில் வந்து நின்றான். வாரியெடுத்து அணைத்து முத்தமிட்டு விட்டு மடிமீது உட்கார வைத்துக்கொண்டு, பாக்கெட்டிலிருந்து ஒரு பொம்மையையும் சாக்லெட் பெட்டி ஒன்றையும் அவன் கையில் கொடுத்தான். அதை வாங்கிக்கொண்டதும்,

''அப்பா, நீ இவ்வளவு நாள் எங்கே போயிருந்தே'' என்றான்.

இதற்கு என்ன பதில் சொல்லுவது என்று புரியவில்லை. ''உனக்குப் பொம்மை வாங்க'' என்றான்.

''ஒரு பொம்மை வாங்க இத்தனை நாளா?'' என்றான்.

''எத்தனை நாளாச்சு சொல்லு பார்ப்போம்'' என்றான்.

குழந்தை மனம் இந்தக் கேள்விக்கு விடை சொல்ல மறுத்தது.

''இனிமேல் பொம்மை வேண்டாம். நீ இங்கேதானே இருப்பே'' என்றான்.

''ஆமாண்டா கண்ணு. தேடிக் கண்டெடுத்த புதையலடா நீ. உன்னைவிட்டு இனி அரை நாழிகைகூடப் பிரியமாட்டேன்'' என்று அன்புடன் அணைத்து முத்தமிட்டான்.

இவ்வளவுக்கும் கற்சிலைபோல் அசை வற்று நின்ருள் சித்ரா.

குழந்தையின் காதில் ''உன் அம்மாவைக் கையைப்பிடித்து எங்கிட்டே அழைத்துவா'' என்ருன் இரகசிமாக. தந்தையின் மடியி லிருந்து இறங்கிச் சென்று தாயின் கையைப் பிடித்து ''அப்பா கிட்டே வாம்மா!'' என்ருன்.

''நீ போ. நான் வரவில்லை'' என்ருள்.

''நீ வாம்மா: நீ வராட்டா அப்பா போயி டுவார் அம்மா. எனக்காக சேத்தி போடு அம்மா'' என்று இழுத்துக் கொண்டே, ''அப்பா! நீ டுவிடராப் போல விரலை வெச்சுக்கோ. அம்மா வந்து அதைக்கலைச் சுடுவா. அப்புறம் இரண்டு பேரும் சேத்தி'' என்ருன். யார் குற்றவாளி யார் மன்னிப்பு கேட்பது என்று ஆராய்ந்து கொண்டிருந்த இருவர் மனமும் குழந்தையின் மழலைச் சொற்களில் மயங்கி இருவரும் வாய் விட்டுச் சிரித்து விட்டார்கள்.

''சேத்தி சேத்தி'' என்று கையைக் கொட் டிச் சிரித்தான் சிறுவனும்.

''சித்ரா! இவ்வளவு நாள் என்னை வாட்டி வதைத்தது போதாதா? உனக் காகிலும், என் சொல்வன், தங்கவிக்ரகம் வருத்தத்தைத் தெரியாமல் தனது மழலை களால் மகிழ்வித்துக் கொண்டிருந்திருப் பான். நான் தனியாகக் கதறி, கதறி நொந் தது, உனக்கு இரக்கம்வரவில்லையா? தாயும் சேயும் செய்த தர்க்கம் முழுவதும் கேட்டேன் என் மனம்......''

''எனக்குச் செல்வனென்ருல் உங்களுக் கும் சுகன்யாதேவியார் இல்லையா?'' என்ருள்.

''சகலவிஷயமும் அறிந்தும் இப்படிச் சொல்லுவது நொந்த புண்ணில் கோலை விடுவது போலிருக்கிறது. நீ பக்கம் பக்கம் உட்கார்ந்தும் என்னைஏமாற் றினுயே. அம்மாவிற்கு மதிப்புக் கொடுக்க, உனக்கு மருந்து கொடுக்கத் துணிந்தேன். அவள் இப்படிச் செய்துவிட்டபிறகு உன்னை நான் அப்படிச் செய்வேனு? உன்னைக் கண்ணை இமை காப்பது போல் காத்தி ருக்கமாட்டேனு? இந்தச் சௌதாமினி எனக்காக இவ்வளவு நாள் செய்த உதவி செய்திருக்க மாட்டாளா? சித்ரா, உன் மனம் நோக உனக்கு மருந்து கொடுத்த அதே கையினுல், குழந்தை, உயிருள்ள குழந்தையைக் காண வேண்டு மென்று எவ்வளவு மருந்துகள் கொடுத்தேன். கைமேல் பலன் ஒவ்வொரு கிளாஸிலும் உன்பரிதாபகரமான முகம் தோன்ருமலி ருக்காது. அன்பில் விளைந்த கனி. காலாக்னி யைத் தாண்டி உருப்பெற்ருன். பிரிவின் வெப்பத்தில் விளைந்தது வெம்பிற்று. நான் என்ன செய்வேன். ஈசனும் சதயமும் இல்லை என்று சொல்ல முடியுமா? சுகன்யாவின் வம்ச தீபந்தான் பிரகாசிக்க வேண்டுமென்ருள் அம்மா. சித்ராவின் தீபம் தானே பிரகாசிக்கப் போகிறது. என்னிடம் வந்தால், உன்னை மருந்து சாப்பிடச் சொல்லுவேன் என்ற பயத் தினுல் தானே, என்னைத் தவிக்க விட்டுச் சென்ருய். ''சித்ரா சித்ரா'' என்று கதறும் படி செய்தாய். பகல், இரவு, தூக்கம், கனவு, படிப்பு, உத்யோகம், எதிலும் என் மனம், என் ஒவ்வொரு துடிப்பும் 'சித்ரா! சித்ரா' என்று அலறிற்று. தெரியுமா?'' என்று சொல்லும் பொழுதே அவன் கண்களில் நீர் நிரம்பிவிட்டது. அதற்குமேல் அவளால் நிற்க முடியவில்லை. எல்லாம் மறைந்து அன்பு ஒன்றே மீஞ் சினது. பக்கத்தில் வந்து தனது தலைப் பினுல் அவன் கண்களைத் துடைத்துவிட்டுக் காலில் விழுந்துநமஸ்கரித்து ''அந்தச்சமயம் தோன்றிய மனவேதனையில் அப்படிச் செய்தேன். தாய்மையின் அடங்கா ஆர்வத் தினுல் தங்கள் பக்கம் வரத்தயங்கினேன். என்னை மன்னித்து விடுங்கள்'' என்ருள்.

தூக்கி எடுத்து இறுக அணைத்துக்கொண் டான். உணர்ச்சியினுல் இருவரும் கண்களை மூடிக்கொண்டார்கள். குழந்தை ஆஸ்பத்ரி, பங்களா, இடையில் ஆறு வருஷ சம்பவம் யாவும் மறைந்தன. பழைய பளிங்கு மண்டபமும் யௌவனத்துடிப்பும் உள்ள மனமே முன்னின்றது.

அதுவரை இவர்கள் பேசிக்கொள்ளு வது புரியாமல் பொம்மையின் விசையை முடுக்கி அது டான்ஸ் ஆடுவதைப்பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த சுபாஷ், திரும்பித் தாயிடம் வந்தான். இவர்கள் நிலைமை அவனுக்கு விளங்க வில்லை. ''அம்மா! நீ அப்பாமடியில் தூங்கருயே. எனக்குத் தூக்கம் வருது'' என்ருன். திடுக்கிட்டு எழுந்து, ''நமது மனவெழுச்சியில் குழந்தை யிருப்பதை மறந்தோமே'' என்று வெட்கி, குழந்தையைத் தூக்கி முத்தமிட்டவாறு அவன் பக்கத்தில் உட்கார்ந்தான். தாயின் குடங்கை அணைப்பில் தலையும், தந்தையின் மடிமீது காலுமாக ஆனந்தமாகத் துயின் ருன் பாலன்.

பிரிந்தவர் கூடினுல் பேச்சுக்கு அள வுண்டா? இருவரும் பேசினுர்கள், பேசி னுர்கள் பத்துமணிவரை பேசினுர்கள்.



நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம்பிறை வடிவாகக் கட்டினாலும் சரி—கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல், இச்சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்கமாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும் கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை விதவிதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங் கூந்தலைப் பெறுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்கியத்தையும் அழகையும் தவறாமல் ஒருங்கே அடையுங்கள்.

# கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

**விலை அணா 12**

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

**தென் இந்திய ரஸாயன சாலை**

கோயமுத்தூர்.

"அந்த மாடியிலிருந்து கொண்டு, நான் தவிப்பதைப் பார்த்துக் கொண்டே எப்படிச் சஹித்துக் கொண்டிருந்தாய்? கள்ளி" என்று கன்னத்தைக் கிள்ளிவிட்டு "ரோஜாமலர் கன்னம் என்று நினைத்துத் தொட்டேன். ஒட்டி உலர்ந்து எலும்பு குத்துகிறது. ஒட்டக் கன்னம்" என்றான்.

"இன்னும் பத்துநாளில் உங்கள் கை பட்டு, கை பட்டு ஒப்பி விடாதா? எப்படிச் சஹித்தேனென்று கேட்கிறீர்கள்?

"கௌரவம் காப்பாற்றப்பட, வாசவதத்தாவை நினைத்து என் மனதை அடக்கி வந்தேன்"

"நல்ல வாசவதத்தா. சென்ஸாருக்கு மனுப்போட்டு அப்படத்தைக் காண்பிக்கக் கூடாது" என்று சொல்லப் போகிறேன்.

"ஏனோ?"

"அதைப் பார்த்து உன்னைப்போல், கௌரவம் காப்பாற்ற என்று பெண்கள் மறைந்து திரிய ஆரம்பித்துவிட்டால் ஆண் பிள்ளைகளின் கதி?"

"படம் பார்த்தால் மனம் எல்லோருக்குமே மாறிவிடுமா? என்னைப்போல் ஒன்றும் புரியாமல் இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டவர்களுக்கு, சமய சந்தர்ப்பங்களினால் மனம் மாறும். அதற்காகப் படத்தை நிறுத்திவிடாதீர்கள்" என்றாள்.

"வாசவதத்தாவின் கடைசி பாகமும் முடிந்துவிட்டதல்லவா, இனிமேல் என் சித்ராதானே?"

"சந்தேகமென்ன?" என்று சொல்லும் பொழுதே கடிகாரம் பத்தடித்தது. மணி சென்றதே தெரியவில்லை. சரி நீங்கள் வீட்டிற்குப் போகவேண்டாமா?" என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

"என்னகுறும்பு! வீட்டிற்குப்போகவா இவ்விடம் வந்தேன்" என்று அவள் கன்னத்தைத் தட்டினான்.

"தாங்கள் சாப்பிடவில்லையே. இரவில் நான் சாப்பிடுவதில்லை; ரொட்டியும் பாலுமே இருக்கின்றன. சௌதாமினி கொடுத்த முறுக்கும் இருக்கிறது. போருமா?" என்றாள்.

"இப்படியே பேசிக்கொண்டிருந்தால் பசி எப்படி உண்டாகும்? ஒன்றுமே வேண்டாம். நீ என்பக்கத்திலிருந்தால் அதுவே போரும்."

"சரி. சரி. தூக்கக் கலக்கமா? வார்த்தைகள் தடுமாறுகின்றன. என்று சொல்லி

விட்டு, "அடாடா! மறந்து விட்டேனே" என்று கையை உதறினுள்.

"என்ன?" என்ருன்.

"சுகன்யாவைப் பார்க்கும் மணி தவறி விட்டதே. போய்ப் பார்த்து வரட்டுமா?" என்ருள்.

"நான் வரும்போது நாடி முதலியவை களைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு வந்தேன். சரியாக இருக்கிறது. இப்பொழுது நீ அவ்விடம் சென்ருல், வர நேரமாகும். போன் செய்து வேறு டாக்டரைப் பார்க்கச்சொல்லு. நான் இவ்விடம் வரப்போவது அவளுக்குத் தெரியும்"

"ஐயோ! பாவம்.! கெளரவத்திற்கு அவள் தாய்மை பலியாயிற்று. இவனை அவளே வைத்துக் கொள்ளட்டும். அவள் மனம் சாந்தி அடையவேண்டும். தாய்மை ஸ்தானத்தை இழந்தாளே தவிர, வாழ்க்கையின் உரிமையை இழக்கவில்லையல்லவா? அதனுல், குழந்தையை எடுத்துச் சென்று வாழ்க்கை ரதத்தை ஓட்டுங்கள். அவ்வப்பொழுது எப்போதாவது ஒருசமயம் எனக்குத் தரிசனமளித்தால் போதுமானது. இந்த உத்யோகமும் இந்த இடமும் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன"

"பழைய புராணத்தைத் தொடங்கி விட்டாயா? இனி உன்னுடைய பழைய பிளான்படி தான் நடக்கப்போகிறேன். மனச்சாந்தியை அடைய இவ்வுத்யோகம் ஏற்றுக்கொண்டேன். உன்னைத் தேட ஏற்றுக்கொண்டேன். இரண்டும் கிடைத்து விட்டன. இனி இதற்கு ஒரு முழுக்கு. ஊரில் சொந்த டிஸ்பென்ஸரி. நீ சொன்னவற்றில் ஒன்று மட்டும் மாறிவிட்டது. நீ, வைத்திய முறையில் உதவியாகவும் அவள் வாழ்க்கை முறையில் உதவியாகவும் என்று சொன்னுய். இப்பொழுது இவை இரண்டிலும் உன் உதவியேதேவை. அவள் சுகவாசியாக இருப்பாள். உரிமை முழுவதும் உனக்கே என்ருலும் நீ, அவள் மனம்போல் விட்டுக்கொடுப்பாய் என்பதில் சந்தேகமில்லை. இனிமேல் தான் எனது உண்மையான வாழ்க்கை தொடங்கப்போகிறது. என் கொள்கைகளும் மறுபடி துளிர்க்கப் போகின்றன." என்ருன்.

"சரி, ஆகாரத்திற்குப்பின் பேசலாம்" என்று, 'நிமாயி!' என்று இரண்டுதரம் கூப்பிட்டாள். தூங்கி வழிந்தவாறு வந்து நின்ருள் அவள்.

"இது யார் தெரியுமா? என்னுடைய பாபு" என்ருள்.

"ஆ, பாபுஜி நமஸ்தே" என்ருள், அவள் தூக்கம் விடைபெற்றது. இவ்வளவு நாள் கழித்தாவது மனம் இரங்கிற்றே" என்ருள்.

"யாருக்கு? அவளுக்கா? எனக்கா?" என்ருன்.

"ஐயோ! அவளுடன் என்ன?" என்று சொல்லிவிட்டு, "நிமாயி இவனைப் படுக்கையில் விடு. நாங்கள் சாப்பிட்டுவிட்டு வருகிருேம்" என்ருள். குழந்தையை எடுத்துச் சென்றதும், போனில் டாக்டருக்குச் சொல்லிவிட்டு, இருவரும் உள்ளே சென்ருர்கள். ரொட்டியும் பாலும் சாப்பிட்டுப் படுத்துக் கொண்டார்கள். ஆறு வருஷங்களுக்குப் பின்னர் நித்ராதேவி அவர்களை அன்புடன் ஆலிங்கனம் செய்து கொண்டாள்.

பொழுது புலர்ந்தது. சித்ராவின் மனதில் அளவற்ற குதூகலம், டிபன் காபி தயார் செய்து மூவரும் சாப்பிட்டார்கள். ஆஸ்பத்திரிக்குச் செல்லச் சித்ரா உடுத்திக் கொண்டிருந்தாள். மேஜைமீது பொம்மையை ஆட விட்டுவிட்டு நாற்காலியில் தந்தை தனயனை மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

பேச்சுச்சப்தம் கேட்டுத் திரும்பினுன். ராதாகிருஷ்ணையர், ஸீதாலக்ஷ்மி, செளதா, ராகவன், சுகன்யாபெற்றேர்கள், யாவரும் வந்தார்கள்.

முன்னுல் வந்த சந்திரலேகாவைப் பார்த்து, சந்திரலேகா "எங்கப்பாவைப் பார்த்தாயா? ஆடுகிற பொம்மை வாங்கிக் கொண்டு வந்திருக்கிருர்" என்ருன் சுபாஷ்.

"இது எங்க மாமான்னு."

"எங்க அப்பா"

"ஏம்மா மாமாவா சுபாஷின் அப்பா? மாமி! நீ சொல்லலையே" என்ருள் சந்திரலேகா.

"மாமாதான் அவன் அப்பா; மாமி மாமி தான்" என்ருள்.

"குழந்தைகள் சம்பாஷணை பெரியவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது.

"வாருங்கள்" என்ருன் பிரபாகரன் மேலே பேசவில்லை.

"யாவரும் சுற்றியிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்கள். "சித்ரா" என்ருள் செளதா.

அப்பொழுதுதான் அவ்விடம் வந்த சித்ரா இவர்களைப்பார்த்துத் திடுக்கிட்டு நின்ருள்.

"அத்தே! இவாள்ளாம் யாரு?" என்றான் குழந்தை.

"இவா இரண்டுபேரும் பாட்டி, இவா ரெண்டுபேரும் தாதா" என்றாள்.

"சித்ரா! இன்னமுமா பயம்? வா இப்படி" என்றாள் சௌதா.

தயங்கியபடியே வந்து யாவரையும் நமஸ்கரித்தாள்.

"சித்ரா! இப்படி வாம்மா" என்று கையைப்பிடித்து அருகில் அழைத்து "என் கண் திறந்தது. அன்பு வெற்றிகொண்டது. அன்று நீ சொன்னபடி எளியாரை வலியார் அடித்தேன்; வலியாரைத் தெய்வம் அடித்து விட்டது. கௌரவப்பேய் என்னை விட்டுச் சென்று விட்டது. உத்தமியான நீ உள்ளத்தில் கொதித்துச் சொன்னது பலித்துவிட்டது. உன்னையும் குழந்தையையும் ஆடம்பரத்துடனே நான் வரவேற்கப் போகிறேன். இங்கே வாடா ராஜா! இரத்தபாசம் என்பது பொய்யல்ல. அப்பொழுதே எங்கள் மனதைக் கொள்ளை கொண்டான்" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

பேசவும் சத்தியற்று விட்டது சித்ராவிற்கு. குழந்தையைக் கையைப் பிடித்து அழைத்து ஸீதாலக்ஷ்மியினிடம் விட்டாள்.

"சித்ரா, நீ எங்களுக்கு மற்றொருபெண்" என்றாள் சுகன்யாவின் தாய்.

"சரி, காலசக்கரம் சுழன்றது. இப்பொழுது ஒரு நிலைமைக்கு எல்லாம் வந்துவிட்டது. மேலே செய்யவேண்டியதைப் பேசுவோம். பிரபாகரா! சௌதா பிரசவம் வரை இவ்விடம் இருக்கவேண்டுமா?" என்றார் ராதாகிருஷ்ணய்யர்.

"எட்டு மாதம் தானே? சுகன்யாவிற்குப் போகலாமென்றால் ஊருக்கே சென்றுவிடுவோம்" என்றாள் சௌதாமினி.

"ஜான்ஸி தான் வந்ததும் சுகன்யாவை அழைத்துச் செல்லலாம் என்று சொன்னாள்" என்றான் பிரபாகரன்.

"வீட்டில் டாக்டர்கள் இருக்கும்பொழுது கவலையென்ன? ஒருவாரத்தில் யாவரும் ஊருக்கே சென்று விடுவோம்."

"அப்படித்தான்; இனிமேல் இந்த வேலை பார்ப்பதாக உத்தேசமில்லை. நம்ம ஊரில் சொந்த டிஸ்பென்ஸரி. ராகவனும் அவ்விடத்திலேயே ஒரு வியாபாரம் தொடங்கலாம்" என்றான் பிரபாகரன்.

"அது நல்ல யோசனை. பிரபாகரா! இன்னொரு விஷயமும் முக்கியம். பின்னால் ஏதாவது விவாதம் ஏற்படாமல், போனதும் திருச்செந்தூரில் சித்ராவிற்கு நீ மாங்கல்ய தாரணம் சாஸ்த்ரோக்தமாகச் செய்ய வேண்டும். இதில் லஜ்ஜைப்பட்டால் முடியாது" என்றார்.

"சரி உங்கள் இஷ்டம்" என்றான் பிரபாகரன்.

## 18

தாயும் தகப்பனும் மாலையுடன் மணையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு "அத்தே! இது என்ன?" என்றான். "இது திருச்செந்தூர் கோவில். உன் அம்மாவிற்குக் கல்யாணம்" என்றாள்.

"அப்படின்னா"

"உன் அப்பா இவ்வளவுநாள் கழித்து வந்தாரோல்லியோ? அதனால்" என்றாள்.

"என்ன இருந்தாலும் நிறை குடம் நிறை குடம்தான் பாருங்கோ. சிறிசுகள், நாகரிக காலம். சாரதா சட்டம் வேறு கூத்தடிக்கிறது. இதனால் தவறுகள் நேர்ந்து விடுகிறது. அதைத் திருத்தி, நமது குல தர்மத்தைச் செய்வதுதானே அழகும் தர்மமும். இப்படிப் பட்டவர்கள் இருப்பதினால்தான் மழை பெய்கிறது. ரிஜிஸ்டர் மண்ணாங்கட்டி என்றெல்லாம் சொல்லாமல் அழகாகச்சாஸ்த்ரோக்தப்படி நிறையப் பூரிதக்ஷிணைகளுடன் மாங்கல்ய தாரணம் நடத்திவைத்தீர்கள். குழந்தை இருப்பது அனேகருக்குத் தெரியாது. தம்பதிகள் முகத்தில் பால்யக்களை சொட்டுகிறது. இந்த நாளில் இருபத்திநாலு வயதில் கூட மணப்பெண்களிருக்கிறார்கள். ஹி ஹி" என்று பல்லைக் காட்டியவாறு ஸ்தோத்திர பாடம் வாசித்தார் கனபாடிகள் ராதாகிருஷ்ணய்யரிடம். அந்தச் சமயம் அவ்விடம் தம்பதி சகிதமாக வந்த சேகர் "மாமா நமஸ்காரம். என்னைத் தெரியாதா?" என்றான்.

"யார்?"

"எழெட்டு வருஷத்திற்குமுன் இவ்விடம் சித்ராவின் கல்யாணம்?........."

"என்னப்பா சேகரா? வா அப்பா. இவள் உன் மனைவியா? இங்கே எப்படி......... என்ன விசேஷம்........."

"இவ்வளவு நாள் வடக்கே வேலையாக இருந்தேன். இந்தவருஷம் நம்ம பக்கம் வரவேண்டுமென்றுவந்தேன். பிரபாகரனைப் பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை



# ரெக்ஸோனாவினால்
## சரும ஆரோக்கியமேற்படுகிறது
## ... சரும ஆரோக்கியமே அழகு

அழகான மேனியின் இரகசியம் சரும சுகமே. உங்கள் சருமம் ஆரோக்கிய முடையதாக இருக்காவிட்டால் அழகு ஏற்படாது. கேடில் எனும் மருந்து சேர்ந்ததும், விரைவில் நுரையைத் தருகின்றதுமான ரெக்ஸோனாவின் உதவியை பயன் படுத்திக்கொள்ளுங்கள். இந்த, ஆன்டி ஸெப்டிக்கும், குணமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்தை, ரெக்ஸோனாவின் நுரை சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டுசேர்த்து, மலினங்களை அகற்றி சுத்தம்செய்து சருமத்திற்கு சுகத்துடன் வனப்பையுமளிக்கிறது. மேனி அழகிற்கு சருமசுகமே அடிப்படை என்பதற்கும், ரெக்ஸோனாவின் மருந்து கலந்த நுரை சௌந்தர்ய மேற்பட உதவுகிறது என்பதற்கும் சந்தேகமே கிடையாது.

**ஆடவருக்கு ரெக்ஸோனா:** ரெக்ஸோனா பெண்களுக்காகமட்டும் வழங்கப்படும் சோப் பெனக் கருதாதீர்கள். அது ஆடவருக்கும் மிக அவசியமான சோப். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் ஆன்டிஸெப்டிக்கும், குணமளிக்கும் தன்மை வாய்ந்ததுமாதலால் சருமத்தைப் பாதுகாக்கிறது. சரும சுகத்தினாலேற்படும் செழித்த ஆரோக்கியம் ஆடவருக்கு தனிப்பெருமையைக் கொடுக்கும்.

**குழந்தைகளுக்கு ரெக்ஸோனா:** ரெக்ஸோனாவின் மிருதுவான நுரை குழந்தையின் இளம் சருமத்தைத் தேற்றுகிறது. கேடில் மருந்து சிறு அவையவங்களை எரிச்சல் அரிப்பு முதலானவைகளிலிருந்து காப்பாற்றுகிறது. குழந்தைகளுக்கு, மிக உத்தமமான சோப்பே உகந்ததாகும்.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில் சுகமளித்துப் போஷிக்கும் தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்து. அது சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது.




R.P. 30-23 TM

REXONA PROPRIETARY LIMITED

யாதலால் நேற்று உங்கள் வீட்டில் விசாரித்தேன். வேலைக்காரன் ஏதோ சித்ரா காணமலிருந்து அகப்பட்டதாகவும் திருச் சந்தூர் சென்றிருப்பதாகவும் சொன்னன். அதற்குப் பிறகு இங்கே வந்தேன்'' என்முன்.

பிறகு யாவரும் கூடிப் பேசினர்கள். துக்கசாகரத்தில் அலைந்த குடும்பப்படகு ஆனந்த சாகரத்தில் அமைதியாக மிதக்க லாயிற்று. கூடிப்பேசுகையில், சேகர் நகைகளை நினைவு படுத்தினன்.

''சேகர்! நான் மறக்கவில்லை. கொண்டு வந்திருக்கிறேன். இன்று இரவு ஷண்முக அர்ச்சனையின்பொழுது சுவாமிக்குச் சாத்தி விடுவோம்'' என்ருள் ஸீதாலக்ஷ்மி.

அன்று கோவிலின் அலங்காரம் அதியற் புதம் என்று கண்டவர்கள் காணுதவர்களை அழைத்து வந்தார்கள். மின்சாரதிபம் புஷ்பாலங்காரம் ஜோதிமயமாக வீசிற்று. எம்பெருமானின் வைர ஆபரண அலங் காரம், பக்தியில்லாதவர் மனதிலும், மெய் சிலிர்ப்பு ஏற்படச் செய்தது. ஆறுமுகத் திற்கும் அர்ச்சனை நடந்து கொண்டிருந்தது. சேகரின் ஒட்டியாணம், காசுமாலை, தோடு மூன்றும் பகவானின் தேகத்தில் மின்னின. தந்தையின் பாபத்திற்குப் பிரயாசித்தம் உண்டு என்று மனமகிழ்ந்தான் சேகர். ஒருபுறம், ஸீதாலக்ஷ்மி ராதாகிருஷ்ணய்யர் முதலியவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். எதிர்ப்புறம் இளந்தம்பதிகள் நின்றுகொண் டிருந்தார்கள்.

ஸீதாலக்ஷ்மிக்கு நேராக ஒருபுறம் சுகன்யா, ஒருபுறம் சித்ரா, நடுவில் பிரபா கரன் சுபாஷைத் தூக்கிக்கொண்டு நின்றி ருந்ததோற்றம் பெற்றோர்மனதைப்பூரிக்கச் செய்தது. குதூகலம்நிறைந்த பிரபாகரனின் முகத்தைக்கண்டு பெற்ற மனம் அளவற்ற குதூகல மடைந்தது.

சித்ராவின் மனம் முன்தடவை வந்த தைப்பற்றிய சிந்தனையில் சென்றது. தாயாரின் நினைவு தோன்றவே ''ஈசா, என் தாய் என் வாழ்வின் பலிக்காக உயிர் நீத்தாள். இன்று எனது இன்பகரமான நிலையை அவள் அறிவாளா?'' என்று எண்ணும் பொழுது அவள் கண்களில் நீர் துளித்தது. இதைக் கவனித்த பிரபாகரன் அவள்மனதில் இந்த நினைவுதான் தோன் றும் என்று நினைப்பவன்போல், காதருகில் குனிந்து, ''சித்ரா மனதைத் தைரியப் படுத்திக்கொள். உன் தாயார் ஈசுவர சொருபமாக உன்னை ஆசிர்வதிக்கிருள். பஞ்சாபி பெண்ணே, என்னை ஏமாற்றி னதை நினைத்துக்கொள். சாந்தமடைவாய்'' என்று அவள் கண்களை அச்சமில்லாமல் துடைத்தாள். சௌதா புன்சிரிப்புக் கொண்டாள்.

ஒரு அர்ச்சகர், இவ்விடம் நிற்பவர்களின் மீது கவனத்தைச் செலுத்தியவாறு, அர்ச்சனைப்புஷ்பத்தைச் சுவாமிமீது போடு வதற்குப் பதிலாக, மற்ற முகத்திற்கு அர்ச்சனை செய்யும் அர்ச்சகர் தலையில் போட்டார். அச்செய்கை இளம் உள்ளங் களில் சிரிப்பை உண்டாக்கிற்று. சித்ரா வின் சோகமும் இச்செய்கையினல் சற்று மறைந்தது.

தீபாராதனை முடிந்ததும் யாவரும் பிரசா தங்கள் பெற்றுக் கொண்டு திரும்பினர்கள். சுபாஷைப் பார்த்த போத்தியானவர் ''இக்குழந்தை முப்பத்திரண்டு லக்ஷணமும் பொருந்தியவன். நல்ல யோகசாலி. பெற்றவர்களுக்கு இவனல் கீர்த்தியும் பெருமையும் உண்டாகும். முருகனைப்போல் தோன்றுகிறுன் என் கண்களுக்கு'' என்ருர்.

பிறகு அர்த்த ஜாமம் பார்த்துவிட்டுப் போகலாமென்று ஷண்முகவிலாசத்தில் யாவரும் உட்கார்ந்தார்கள்.

''சௌதாவிற்குப் பிறக்கப்போகும் பின் ளைக்கு முருகன் என்று பெயர் வைக்கப் போகிறேன்'' என்முன் பிரபாகரன்.

''சித்ராவிற்குப் பிறக்கப் போகும் பெண்ணிற்கு வள்ளி என்று நான் பெயர் வைப்பேனென்ருள்'' சௌதா.

யாவரும் சிரித்தார்கள்,

''அப்பா! எவ்வளவுகஷ்டங்களுக்குப்பின் அதாவது வெளிப்பார்வைக்குக் கஷ்டமாகத் தோன்ருது ஒவ்வொருவரையும் உள்ளூர அரித்துவந்த கஷ்டம் நீங்கி, எல்லார் உள்ளும் புறமும் ஒத்தபடி நிம்மதியாயிற்று. பிரபாகரனின் பிரசங்கப்படி, இதில் வெற்றிபெற்றது யார்?'' என்று கேள்வியை எழுப்பினுர் ராதாகிருஷ்ணய்யர்,

''ஏன், பெண்மைக்கே வெற்றி'' என்முன் பிரபாகரன்.

''இல்லை. தோல்வி,'' என்ருள் சித்ரா,

''எப்படி?''

''எப்படிச்சுற்றியும் கடைசியில் எல்லோ ரையும் போல் தங்கள் இஷ்டத்திற்கு விரோதமில்லாமல்தானே நடக்க வேண்டி வந்தது. ஆண்களின் சகவாசமில்லாமல் தனியாக நின்று கடைசிவரையில் ஜயித்

தால் அல்லவோ பெண்மை வெற்றிபெற்ற தாகும்?''

''அப்படியல்ல; என்னை, 'அப்பாவை' இருவரையும் ஏமாற்றி உனக்குக் கல்யாண ஏற்பாடு செய்தாளே, விதி குறுக்கிட்டிரா விட்டால் அவள் வெற்றிதானே? நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியிருந்தும் தப்பிக்க முயலாது பழிவாங்க உறுதி கொண்டது உன் வெற்றி அல்லவா? பிறகு அன்று இரவு நான் செய்யவிருந்ததவறைத் தடுத்துவிட்டுப் பிறகு என்னிஷ்டப்படி நடப்பதாகச் சமாதானம் செய்தாயே அது உன் வெற்றியல்லவா? தந்திரமாக உன்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்று வீட்டை விட்டு வெளியேறும்படி அப்பாவிற்குத் தெரியாமல் செய்தாளே அது அவள்வெற்றி அல்லவா? நீ ஆதிமுதல் சுகன்யாவை மணக்கும்படி சொல்லிவந்து, அதற்காக பஞ்சாபி பெண்ணாக என்பக்கத்திலிருந்து வெற்றிலை முதல் கொடுத்து என்னை ஏமாற்றிச் சென்றாயே அது உன் வெற்றி யல்லவா? ராகவனின் வாய்க்குத் தனது அன்பினால் பூட்டுப் போட்டு வீட்டிற் குள்ளேயே உன்னைவைத்துக் கொண்டு என்னைப் பற்றியே என்னிடம் கதை சொல்லி, குழந்தையை அம்மாவிடமும் கொண்டுவந்து காட்டிச் சென்றது சௌதா மினியின் வெற்றியல்லவா? உரிமை ஒன்றைக்கேட்டு, என் உதாஸீனத்தைத் சகித் துக் கடைசியில் அவள் மனம் போல் நடக் கும்படி செய்து, தனது நிலைமையை இந்த ஸ்திதிக்குக் கொண்டு வந்தது சுகன்யாவின் வெற்றியல்லவா? எல்லாவற்றையும் விட ஆறு வருஷகாலம் என்னைக் கதறவிட்டு, ஆண்களின் உதவியின்றிப் பெண்கள் முன் னேறலாம் தைரியமும் உறுதியு மிருந்தால், என்று நிலைநாட்டினது சித்ராவின் வெற்றி யில்லை என்று சொல்லமுடியுமா?'' என்று முடித்தான்.

''யாவற்றிற்கும் காரணகர்த்தா தாங்கள். உங்களை ஆதாரமாகக் கொண்டு சுற்றிப் படர்ந்தது எங்கள் வெற்றிக் கொடி'' என்றாள் சித்ரா.

''என்னைக் கேட்டால் சித்ராவின் பொறு மையே, அன்பே, யாவரையும் வெற்றி கொண்டது. அன்பினால் புவனம் பெறலாம் என்பது உண்மை. சித்ராவை வழியனுப் பும் சமயம் ஆஸ்பத்திரியே திரண்டு நின்று கண்ணீருடன் காட்சியளித்ததை நினைக்க மயிர்க்கூச்செடுக்கிறது.;

''நீபோவது எனது வலது கை முறிந்தது போல்; ஆனால் உன் சுகவாழ்வு என் மனதிற்கு மிகவும் திருப்திகரமாக இருக் கிறது. உன்னைப் போன்ற குணம் படைத்தவராக ஆயிரத்தில் ஒருவரைகூடக் காண்பதரிது. உன் பொறுமையே உன் கணவனைக் கூட்டிவைத்தது'' என்று ஜான்ஸி ஆலிங்கனத்துடன் கண்ணீர் மல்க அனுப்புவித்தது எவ்வளவு உயர்ந்த நோக்கம்'' என்றார்.

''ஒரு பிரதக்ஷிணம் வரலாமா?'' என்றாள் சித்ரா.

யாவரும் எழுந்தார்கள். பெரியோர்கள் முன்னதாகச் சென்றார்கள். இளம் தம்பதி ஜோடிகள் பின்னாகச் சென்றார்கள். பூர்ண கலையுடன் பவனி வந்தான் ரோகி ணியின் காதலன். நிலவுப் பொழிலில், கோவிலும் இயற்கையும் கடலும் நீலநிற ஆகாயமும் சேர்ந்து காண்போர் மனதைக் கவரும் காட்சியாக இருந்தன.

வள்ளிக் குகையின் பக்கம் வரும் பொழுது, ''சித்ரா இந்த இடம்'' என்றான் சேகர்.

''எனது வாழ்க்கைப்போர் தொடங்கின இடம்''.

''விவரம் தெரிந்திருந்தால் இவ்வளவு தூரம் கதைவளர இடமே இருந்திருக்காது'' என்றான் சேகர்.

''அப்படிப்பட்ட தவறுதல்களே மானிட வாழ்வில் ஜகஜ்ஜால வித்தைகளைக் காட்ட விதி புருஷனுக்குக் கருவியாகின்றன.'' என்றான் பிரபாகரன்.

நிலாவின் எழில் மனதில் ஓர் அசைவைக் கொடுக்கத் தம்பதிகள் ஜோடிகளாகப் பிரிந்து சென்றனர்.

சுகன்யா சித்ராவுடன் அலைகள் காலில் முத்தமிட நின்று கொண்டிருந்தாள். நீலக் கடலில் எழும்பி வரும் அலைகள் தோறும் காட்சியளித்தான் சந்திரன்.

''அநேக வருஷங்களுக்கு முன், இந்த மாதிரி நிலவில் இப்படி நின்று பார்க்கும் பொழுது, தங்களுடன் இதை அனுபவிக்க என்மனம் விரும்பிற்று. சற்றுநேரத்தில் யாவும் விபரீதமாக முடிந்துவிட்டன''.

''சென்றதை விடு. இன்று இன்பகரமாக உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறேன்'' என்று இருகைகளினாலும் இரண்டு பக்கத் திலும் இருவர் இடுப்பைச்சுற்றி அணைத் துக்கொண்டான்.

''ஐயோ, இதென்ன வெட்கக்கேடு'' என்றார்கள் இருவரும்.

"அம்மா! என்ன வெட்கம்? இருவரும் சேர்ந்து தானே என்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தீர்கள், நீயும் அவள் வாழ்க்கையில் குறுக்கிட வில்லை என்றாய். நீயும் அவள் வாழ்க்கையில் குறுக்கிடவில்லை என்றாய். இருவரும், நான் இருவரையும் ஏற்றுக் கொள்ளுவதைப்பற்றி ஆக்ஷேபனை இல்லை யென்று எழுதின கடிதங்கள் என்னிடமிருக்கின்றன. இனி இப்படித் தானே நமது வாழ்க்கைப் படகைச் செலுத்தவேண்டும்" என்று இருவரையும் மாறி மாறி முத்தமிட்டான். லஜ்ஜையினால் இருவர் முகங்களும் சிவந்தன. "அம்மா நேற்று இப்படி நிற்க வைத்துத் தானே ஆரத்திசுற்றினாள். முருகப் பெருமான் இப்படித் தானே நிற்கிறார்."

"இப்பொழுது நினைத்தால் கூட லஜ்ஜை யாக இருக்கிறது. அன்று உங்கள் அம்மா விடம் ஒருவனுக்குப் பிறந்து ஒருவனையே வரித்தது சத்யமானால் இதேவீட்டில் என் குழந்தையுடன் கோலாகலமாக வரவேற்கப்படுவேன் என்று. அது விஷயத்தில் வெற்றிபெற்றேன்" என்றாள் சித்ரா.

"எடுத்த காரியம் யாவிலும் வெற்றி" "பெண்மைக்கு வெற்றியென்று கூத்தாடு வோம்" என்று பாடிக்கொண்டே போனான் ஒரு வழிப்போக்கன். எழும்பி வரும் அலைகளை நோக்கு. அதோபார். எங்கும் பெண்மைக்கே வெற்றி. சிறிய அலையை முன்னிட்டு, பெரிய அலை பின் வருகிறது. வெற்றி வெற்றி என்று கோஷமிடுகிறது அலை" யென்றான் பிரபா கரன். கோவிலில் அர்த்தஜாம மணி அடித் தது. அதுவும் "பெண்மையின் வெற்றி, பெண்மையின் வெற்றி" என்று கோஷிப் பதுபோலிருந்தது.

முற்றிற்று


# நின்றுபோன மாதவிடாய்



குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்று போனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

சாதாரண கேஸ்களுக்கு ... ... ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு ... ... ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு ... ... ரூ 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு) ... ரூ 4
(வி. பி. அணா 12 கூட)

தயாரிப்பவர்கள்:-

**MRS. P. DEVEE, F.D.S. (C.M.)**
Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி, கொச்சி
J. திராத் & கம்பெனி, மஹாத்மா காந்தி ரோடு, கராச்சி
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட் 167, தராம்தோலா தெரு கல்கத்தா
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல்தெரு கொளும்பு, &
768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

# கடல்

ஆர். கே. விசுவநாதன்

நம்மைப் பிரமிக்கச் செய்யும் இயற்கைத் தோற்றங்களில் கடல் ஒன்று. காலை மாலை நேரங்களில் கடற்கரை சென்று இயற்கையில் லயித்து விடுபவர்கள் அனேகர் உண்டு. அதைப் பார்த்தவுடன் அதன் பரப்புத்தான் நம்மை முதலில் திகைக்கச் செய்கிறது. எப்பொழுதும் ஓவென்று இரைச்சல் கேட்பதையும் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் அலைகள் கரையை நோக்கி ஓடிவருவதையும் காணும் போது கடலுக்கு ஓய்வு என்பதே கிடையாது என்பது தெரிகிறது. இதைத் தெளிவுபடுத்தவே "சமுத்திரம் அலை நின்று ஸ்நானம் செய்ய முடியுமா?" என்ற பழமொழி நம்மிடையே வழங்கி வருகிறது போலும். பூமிச் சுழற்சியிலே கடல் தலைகீழாகக் கவிழ்ந்து திசை வெளியில் ஏன் போய் விடவில்லை? நம் தலையிலே ஏன் கவிழ்ந்து விடவில்லை? என்று எல்லாம் நமக்குச் சந்தேகம் உண்டாகிறது. கடலின் நீல நிறத்தையும் வானத்தின் நீல நிறத்தையும் பார்க்கும்போது கடவுள் சிருஷ்டியில் நீல நிறத்துக்குத்தான் மவுசு அதிகம் என்று தெரிகிறது. இதனால்தான் வால்மீகி ராமருக்கு நீல நிறத்தைக் கொடுத்தார் போலும்! கடலைப் பார்க்கப் பார்க்க இம்மாதிரி பல எண்ணங்கள் நமக்கு உண்டாகின்றன. இவ்வெண்ணங்களுடன் திருப்தி அடைவதில்லை விஞ்ஞானிகள். அவற்றுக்கெல்லாம் காரணங்களைக் கண்டுபிடிப்பதில் ஈடுபடுவார்கள். கடல் நீரின் இயக்கத்திற்கும் அதன் பரப்பின் மீது உண்டாகும் அலைகளுக்கும் காரணங்களை அறிந்திருக்கிறார்கள். அதன் நீல நிறத்தின் மர்மத்தையும் உணர்ந்திருக்கிறார்கள். இவ்விவரங்களை எல்லாம் இக்கட்டுரையில் பார்ப்போம்.

பூமியின் மேற்பகுதியில் தரையின் பரப்பை விட, கடலின் பரப்புத்தான் இரண்டு மடங்கு அதிகமாக இருக்கிறது. கடலின் பரப்பு விஸ்தீரணம் சுமார் பதினான்கு கோடி சதுரமைல் என்று கண்டிருக்கிறார்கள். கடல் பலவேறு பாகங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. அப்பிரிவுகளுள் முக்கியமானவை பஸிபிக்கடல், அட்லாண்டிக் கடல், இந்தியக் கடல், ஆர்டிக்கடல், அண்டார்டிக் கடல் என்னும் பாகங்கள். இவற்றில் முதல் மூன்று கடல்கள் தான் அதிக விஸ்தீரணம் உள்ளவை. பஸிபிக் கடலின் விஸ்தீரணம் சுமார் ஆறேமுக்கால் கோடி சதுரமைல்; அட்லாண்டிக் கடலின் விஸ்தீரணம் சுமார் மூன்றரைக் கோடி சதுரமைல்; இந்தியக் கடலின் விஸ்தீரணம் சுமார் இரண்டு கோடி சதுரமைல். கடலில் மிகவும் ஆழமான இடம் கடல் மட்டத்தின் கீழ் முப்பத்திரண்டு ஆயிரம் அடியில் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கடலின் சராசரி ஆழம் ஏறக்குறைய இரண்டு மைல் என்று தெரிகிறது. ஆனால் தரைமீது மிகவும் உயரமான இடம் கௌரீ சங்கர் என்னும் மலைச்சிகரம். இதன் உயரம் இருபத்தொன்பது ஆயிரம் அடிதான். பூமியின் மேற்பரப்பில் தரைமீது இருப்பது போலக் கடலின் அடியிலும் மேடுபள்ளங்கள் இருக்கவேண்டுமென்றுதெரிகிறது. சிற்சில இடங்களில் கடலின் அடியில் மலைகளும் தென்படுகின்றன. இவை எரிமலைகளின் விளைவாக ஏற்பட்டிருக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். மேற்பரப்பில் காணுவது போல அவ்வளவு அதிகமான மேடுபள்ளங்கள் கடலின் அடியில் இருக்க முடியாது என்று ஊகிக்கின்றார்கள். ஏனெனில் காற்றைப் போல நீர் கடலின் அடியை அழிப்பதில்லை. இதனால் வெகு இடங்களில் கடலின் அடி சமதளமாக இருக்கவேண்டுமென்று தெரிகிறது.

கடலில் இரண்டு வித இயக்கங்கள் உண்டு. ஒன்று அதன் பரப்பின் மீது மட்டும் நாம் காணும் அலை இயக்கம். மற்றும் அலை இயக்கத்தினால் பரப்பிலுள்ள நீர் ஓரிடமிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லாது. இதைத் தவிர, கடலுக்கு வேறொரு இயக்கம் உண்டு. இது பெரும்பாலும் கடலின் கீழ் அதிக ஆழத்தில் நிகழ்வது. இதனால் நீர் இடம் விட்டு இழுத்துச் செல்லப்படுகிறது. இதற்குக் காரணம் எப்பொழுதும் கடலில் இருந்து கொண்டிருக்கும் அருவிகள். இதற்கு Oceanic Currents என்று பெயர். முதலில் இவ்வருவிகளினால் ஏற்படும் இயக்கத்தைக் கவனிப்போம். இவ்வருவிகள் கடல் நீரின் செறிவு வேற்றுமையினால் உண்டாகின்றன. செறிவு என்பது ஒரு குறிப்பிட்ட அளவு நீரின் நிறை ஆகும். ஒருகன அடி தண்ணீ

ரின் நிறை அறுபத்திரண்டரைப் பவுண்டு என்று கண்டிருக்கிறார்கள். கடல் நீரின் செறிவு இடத்துக்கு இடம் வேறுபடுவதுடன் பலவேறு ஆழங்களிலும் வேறுபடுகிறது. இதற்குக் காரணம் அதில் கரைந்துள்ள உப்புக்கள். பூமி சூரியனிடமிருந்து பிரிந்து சற்றுக் குளிர்ந்தபோது மேற்படலங்களில் அடர்ந்திருந்த பலவகை உப்புக்கள் மழை நீரால் அடித்துச் செல்லப்பட்டுக் கடலில் விழுந்தன. அவற்றில் முக்கியமானவை "ஸோடியம் குளோரைடு" (Sodium Chloride), மக்னீஸியம் குளோரைடு (Magnesium Chloride), மக்னீஸியம் ஸல்பேட் (Magnesium sulphate) என்னும் உப்புக்கள். முதலில் சொன்ன உப்பைத்தான் நாம்ஆகாரத்துடன் உபயோகிப்பது. இதுதான் அதிகமாகவும் இருக்கிறது. நூற்றுக்கு மூன்று வீதம் இருக்கிறது. மற்ற உப்புக்கள் சிறிதளவே இருக்கின்றன. இவ்வுப்புக்கள் கரைந்த விகிதத்தை ஒட்டிக் கடல் நீரின் செறிவு இடத்துக்கு இடம் வேறுபடுகிறது. மற்றும் நீரைக் காய்ச்சினால் அது ஆவியாக மாறுவதை நாம் அறிவோம். இதைப் போலச் சூரிய வெப்பத்தினால் கடல்நீர் ஆவியாக மாறுகிறது. சூரிய கிரணங்கள் அதிகமாக விழும் இடங்கள் பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இடங்கள்தான். எனவே அவ்விடங்களில் அதிக நீர் ஆவியாக மாறுகிறது. இதனால் அங்குள்ள உப்புக்களின் அளவு மற்ற இடங்களில் இருப்பதைவிட அதிகரித்து விடுகிறது. இதன் விளைவாக அங்குள்ள நீரின் செறிவும் உயர்ந்து விடுகிறது. செறிவு வேற்றுமை உண்டாவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. பூமியின் மேற்பகுதியில் சூட்டுநிலை இடத்துக்கிடம் வேறுபடுவதை நாமறிவோம். துருவப்பிரதேசங்களில் சூடு குறைவாக இருக்கும். மத்திய ரேகைப் பிரதேசங்களில் சூடு அதிகமாக இருக்கும். இதைப் போலக் கடலின் வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறுசூட்டு நிலைகளில் இருக்கின்றன. நீரைக்காய்ச்சும் போது அதன் செறிவு குறைந்துவிடும். ஆகவே சூடு குறைவாயுள்ள இடங்களில் கடல் நீரின் செறிவு அதிகமாகவும் சூடு அதிகமாயுள்ள இடங்களில் கடல் நீரின் செறிவு குறைவாகவும் இருக்கும். செறிவு மிகுந்த இடங்களுக்கும் செறிவு குறைந்த இடங்களுக்கும் இடையே அருவிகள் (Currents) உண்டாகின்றன. பூமியின் சுழற்சியும் வியாபாரக் காற்றுக்களும் (Trade winds) இவ்வருவிகளின் வலிமையைப் பல மடங்கு பெருக்கி விடுகின்றன. வடதுருவத்திற்கும் தென் துருவத்திற்குமாய் அமைந்த ஆயத்தை நடுவாய்க்கொண்டு பூமி தன்னைத் தானே மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றி வருகின்றது. ஒரு நாளைக்கொரு சுற்றுச் சுற்றுகிறது. இதனால் துருவப் பிரதேசம் அசைவற்றிருக்க மத்திய ரேகைப் பிரதேசம் மணிக்கு ஆயிரம் மைல் வீதம் சுற்றி வருகிறது. பூமியைச் சூழ்ந்து காற்று மண்டலம் ஒன்று வியாபித்திருப்பதை நாமறிவோம். மத்திய ரேகைப் பிரதேசங்களில் உள்ள காற்று துருவப் பிரதேசங்களில் உள்ள காற்றைவிட அதிக வெப்பத்தைப் பெறுவதால் லேசாகி மேலெழும்புகிறது. இக்காற்று இருந்த இடத்தை நோக்கி, துருவப் பிரதேசத்துக் குளிர்ந்த காற்று வீசுகின்றது. மத்திய ரேகைப்பிரதேசங்களில்மேலேறிய காற்று, துருவப் பிரதேசங்களை அடைகின்றது. இவ்வாறான நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. பூமிச் சுழற்சியினால் வடக்கே இருந்து வருகிற காற்று, வட கிழக்கிலிருந்து வருவதைப் போலாகின்றது. தெற்கே இருந்து வருங் காற்று, தென் கிழக்கிலிருந்து வருவதைப் போலாகின்றது. இவ்வாறு மத்திய ரேகையை நோக்கி வீசும் காற்றுக்களை வியாபாரக் காற்றுக்கள் (Trade winds) என்று கூறுவார்கள். இக்காற்றுக்களினால் கடலில் தோன்றியஅருவிகள் வலுப்பெற்று நீர் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இழுத்துச் செல்லப்படுகிறது.

இப்பொழுது கடல் பரப்பில் தோன்றும் அலை இயக்கத்தின் காரணத்தைக் கவனிப்போம். ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு நிறை உண்டு. இந்நிறையை ஒட்டி இரண்டு பொருள்களினிடையே ஒரு கவர்ச்சிச் சக்தி ஏற்படுகிறது. பூமியின் நிறை மிகப்பெரியதாகையால் அதன் மீதுள்ள எல்லாப் பொருள்களும் பூமியால் கவரப்படுகின்றன. இக் கவர்ச்சிச் சக்தியின் விளைவாகத்தான் பூமி சுழலும் போது கடல் தலைகீழாகக் கவிழ்ந்து விடாமல் நிற்கிறது. சூரியனைச்சுற்றி எல்லாக் கிரகங்களும் ஓடிவருவதும் இதே காரணம் பற்றித்தான். பூமியைச் சூரியனும் கவருகிறது; சந்திரனும் கவருகிறது. சந்திரன்தான் பூமிக்கு மிக அண்மையில் இருக்கிறது. எனவே இதன் கவர்ச்சிதான் அதிகம். சந்திரனின் கவர்ச்சியினால் பூமியின் மேற்பரப்பில் முன்னும் பின்னும் கடலில் இரண்டு புடைப்புக்கள் (Bulges) உண்டாகின்றன. பூமி சுழலும்போது இப்புடைப்புக்கள் இரண்டும் கடல்பரப்பு முழுவதும் பரவிச் செல்லுகின்றன. இவை செல்லும்போது பரப்பில் நீர் சில இடங்

களில் உயர்ந்தும் சில இடங்களில் தாழ்ந்தும் சென்று, ஓர் அலை இயக்கம் முன்னேறிச் செல்லுகிறது. இவ்வலைகளுக்குத் தான் Tidal waves என்று பெயர். பௌர்ணமி, அமாவாசை நாட்களில் சூரியன் சந்திரன் பூமி மூன்றும் ஒரே நேர் கோட்டில் வருகின்றன. அப்பொழுது உண்டாகும் புடைப்புக்களின் வலிமை அதிகம். இதனால் தான் அந்நாட்களில் கடல் பொங்குகிறது என்று சொல்லுகிறோம். கடற்கரையோரங்களில் உள்ளவர்கள் ஒவ்வொருநாளும் கடல் ஏறி இறங்குவதைக் கவனிக்கலாம். சில இடங்களில் கடல் நெடுந்தூரம் உள்வந்து பின் வாங்குவதும் உண்டு. இவையும் புடைப்புக்களின் விளைவுகள்தான். வேறொரு காரணம் பற்றியும் கடலில் அலைகள் உண்டாகின்றன. நடுக் கடலில் தொடர்ந்து காற்று வீசும்போதெல்லாம் உதாரணமாக வியாபாரக் காற்றுக்களின் போது நீர்ப் பரப்புக்கு அதிர்ச்சி ஏற்பட்டு நீர் குவிந்து அலைகள் உற்பத்தியாகிப் பரப்பில் பரவிச் செல்லும். பூகம்பம், எரிமலை இவை ஏற்படும் போதும் கடலுக்குப் பெரிய அதிர்ச்சி உண்டாகி அலைகள் தோன்றும்.

கடலின் நீல நிறத்தின் மர்மத்தை இப்பொழுது கவனிப்போம். முதலில் கடலுக்கு ஆகாயத்தினால் நீல நிறம் உண்டானதாக நினைத்தார்கள். அதாவது நீர்ப் பரப்பில் ஆகாயம் பிரதிபலிப்பதினால் கடல் நீருக்கு நீல நிறம் ஏற்பட்டதென்று கருதினார்கள். கடல் நீர் ஆகாயத்தைக் காட்டிலும் அதிக நீல நிறத்துடன் இருப்பதைக் கண்டு இக்காரணம் சரியல்ல என்று கைவிடப்பட்டது. ஆகாயம் கடல் இரண்டின் நீல நிறத்திற்கும் உண்மையான காரணம் ஒளிச் சிதறல் என்னுமோர் நிகழ்ச்சி என்று அறியப்பட்டது.

சூரியனின் வெண்ணொளியில் பல வேறு நிற ஒளிகள் அடங்கி இருக்கின்றன. வானவில்லைக் கவனித்தால் என்ன என்ன நிறங்கள் என்பது தெரியும். ஒளியும் ஒலியைப் போல ஓர் அலை இயக்கம். ஒலி அலைகள் பொருள்களின் மூலம் பரவிச் செல்லுகின்றன. ஒளி அலைகள் எங்கும் வியாபித்திருக்கும் விசும்பில் பரவிச் செல்லுகின்றன. ஒலி அலைகளைவிட ஒளி அலைகள் மிகவும் நுட்பமானவை. அலைகளில் அவற்றின் நீளத்திற்குத்தகுந்தவாறு பெரிய அலைகளும் உண்டு; சிறிய அலைகளும் உண்டு. ஒளி அலைகளின் நீளம் சாதாரணமாக ஆயிரங்கோடியிலொரு பங்கு அங்குலம் இருக்கும். ஒவ்வொரு நிறத்துக் குண்டான ஒளி அலைகளின் நீளம் ஒவ்வொரு விதமாக இருக்கும். சிவப்பு நிற ஒளி அலைகள் தான் மற்ற நிற ஒளி அலைகளைவிட அதிக நீளமானவை. இதைப் போல ஊதா ஒளி அலைகள்தான் மற்ற நிற ஒளி அலைகளைவிட நீளம் குறுகிய அலைகள். சூரியனது ஒளி கடல் பரப்பின் மீது மட்டும் பிரதிபலித்துத் திரும்பிவரவில்லை. சிறிது தூரம் உட்சென்றுதான் வெளிவருகிறது. இவ்வாறு உட்செல்லும் ஒளியின் பகுதி இடத்துக்கிடம் வேறுபடும். சூரியகிரணங்கள் செங்குத்தாய் விழும் இடங்களும் உண்டு; சாய்வாய் விழும் இடங்களும் உண்டு. உட்சென்று வெளிவரும் போது சூரியனது ஒளி, சில நிறங்களை இழந்துவிடுகின்றன. உட்சென்ற ஒளி நீர்த்துளிகளைத் தாக்கும் போது ஒளிச்சிதறல் உண்டாகின்றது. பல நிற ஒளிகள் அவற்றின் அலை நீளங்களுக்குத் தகுந்தாற் போலச் சிதறஅடிக்கப்படுகின்றன. இச்சிதறலினால் நீலநிறம் நீங்கலாக மற்றநிற ஒளிகளெல்லாம் கடலை விட்டு வெளிப்படுவதில்லை. எனவே நமக்குக் கடல் நீலநிறமாகத் தோன்றுகிறது. இதைப் போலவே பவனத்தைத் தாண்டி வரும்போது சூரியனது ஒளியில் நீலநிற ஒளி நீங்கலாக மற்ற நிற ஒளிகள் சிதறப்படுவதால் ஆகாயமும் நீலநிறமாகத் தோன்றுகிறது.


## காவேரி சந்தா விகிதம்

| சந்தா விபரம் | உள்நாடு | ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு |
|---|---|---|
| ஒரு வருஷம் | 6 0 0 | 7 8 0 |
| அரை வருஷம் | 3 0 0 | 3 12 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 8 0 | 0 10 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.






மாலை வேளையின் மங்கலான வெளிச்சத்தில் காற்றிலசைபுகின்ற அழகான இந்திய ரோஜா மலர்களைப் பார்த்ததும், உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பான வினோலியா ஒயிட் ரோஸின் ஞாபகமேற்படும். உங்கள் எழிலை அதிகப்படுத்த இதன் சுகந்த நுரையைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. மிருதுவான நுரையைத்தரும் வினோலியா மிக நேர்த்தியான சருமத்தையும் சுகமாக சுத்தம் செய்கிறது . . . மேலும் உங்களை சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச்செய்கிறதி.

# வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWB. 20-23 TM VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

# பரிசு

சுகிர்தி

இரவு முழுதும் பெய்த மழையினால் காலையில் வானம் நிர்மலமாயிருந்தது. கிழக்கோடியில் கதிரவன் வருகைக்குக் கட்டியம் கூறுவதுபோல் அடிவானம் வெளுத்துக்கொண்டே வந்தது. மெதுவாய் வீசிக்கொண்டிருந்த ஊதற்காற்றில் அசைந்தாடும் மரக்கிளைகளில் குளிர் நடுக்கத்தால் ஒடுங்கிப்போய் உட்கார்ந்திருந்த பறவைகள் விடிந்தது கண்டு வானவீதியில் "விர்"ரென்று இரைதேடப் பறந்து சென்றன. வானத்தில் ரவி தன் ஜாலவித்தையால் ரசவாதம் புரிந்து கொண்டிருந்தான். வினாடியில் கன்னங்கரேலென விருந்த சிறு சிறு மேகக்கூட்டங்கள் வெண்மை நிறமாயும், பொன்னிறமாயும் மாறின. கடுங்குளிரில் இரவு முழுதும் சோம்பிக் கிடந்த ஜனக்கூட்டம் குதூகலத்துடன் தங்கள் வேலையில் ஈடுபட்டன.

"கல்.........கல்........."என்ற உளியின் ஓசை இலேசாக அடித்துக் கொண்டிருந்த இளங்காற்றில் மிதந்து வந்தது. ஓசை ஒரு பாழ் மண்டபத்தின் அருகிலிருந்து ஒலித்தது. மண்டபத்தின் பக்கத்தில் எங்கும் சிலைகளும் சிற்பவேலைப்பாடமைந்த கற்றூண்களுமே சிதறிக் கிடந்தன.

மண்டபத்தின் அண்மையில் ஒரு சிறு ஓலைக் குடிசை. குடிசையின் முன்னுள்ள பரந்த வெளியில் சிதறிக் கிடந்த சிலா உருவங்களும், செதுக்கி அரைகுறையாகக் கைவிடப்பட்ட சிற்பங்களும், தாழ்வாரத்தில் கிடந்த உளி முதலிய கருவிகளும் அது ஒரு சிற்பசாலை என்பதை அறிவுறுத்தின.

குடிசையின் பக்கத்துத் திண்ணையில் ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். வயது ஐம்பத்தைந்தாண்டிருக்கும். உடலை மறைத்திருந்த காவி அங்கி, அவர் இல்லற வாழ்க்கையினின்று வேறுபட்டவர் என்பதை உணர்த்திற்று. செம்பட்டை பாய்ந்திருந்த தலைமயிர், அவர் கழுத்தில் விழுந்து புரண்டு கொண்டிருந்தது. ரத்தப்பசையில்லாமல் சுருக்கம் விழுந்திருந்த முகமும், ஏக்கங்கலந்த பார்வையும் அவர் தம் வாழ்க்கையில் அடைந்த ஏதோ ஒரு பெருங்கஷ்டத்தையும் ஏமாற்றத்தையும் சித்திரிப்பதுபோல் இருந்தன. சோகம் நிறைந்த அவர் கண்கள் குடிசையின்முன் எதையோ உற்று நோக்கிக் கொண்டிருந்தது.

உளியினால் சிற்பவேலை செய்துகொண்டிருந்த ஓர் இளஞ்சிற்பியின்மேல் பதிந்திருந்தது அவருடைய பார்வை. வாலிபம் மிளிரும் இளைஞனின் முகத்தோற்றத்தையும், சிற்பவேலையில் அவன் கொண்ட ஆர்வத்தையும், திறமையையுங்கண்ட பெரியவரின் சிந்தனையில் அவரது கடந்த கால பால்ய வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் எழுந்தன. தம் வாலிபப் பருவத்தில் தாம் செய்த தவறைப்போல் இந்த இளைஞனுடைய வாழ்க்கையில் விபரீதம் விளையக்கூடாதே என்று நினைத்த பெரியவர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு "ரவி!" என்று அழைத்தார்.

சிற்பவேலையில் மூழ்கிக் கிடந்த இளைஞனின் சிந்தனை கலைந்தது. உளியின் நர்த்தனம் தடைப்பட்டது. இளைஞன் உடனே பெரியவரின் பக்கம் திரும்பி, "சுவாமி! கூப்பிட்டீர்களா?" என்றான் பணிவுடன்.

"ஆம்" என்பதுபோல் தலையை அசைத்தார் முதியவர். உளியைக் கீழேவைத்துவிட்டு ரவி பெரியவரின் பக்கத்தில் வந்து நின்றான். "உட்கார்" என்று சமிக்ஞை காட்டவே பெரியவரின் காலடியில் அமர்ந்தான்.

ஆழ்ந்த யோசனையிலிருந்த பெரியவர் மீண்டும் பேசலானார்:

"ரவி! நீ செதுக்கிய சிற்பங்களில் உன் கைத்திறனும், கலை ஆர்வமும் மிளிர்கின்றன, உன்னுடைய கைததிறனைப் பார்க்குந்தோறும் என் பால்ய கால வாழ்க்கை என் கண்முன் தோன்றுகிறது. ரவி! நீ தற்பொழுது வாலிபத்தின் முழு வளர்ச்சியையும் அடைந்திருக்கிறாய். மனிதனின் வாழ்க்கையிலேயே வாலிபப் பருவந்தான் அவனுடைய பிற்கால வாழ்க்கையை அமைக்கிறது. இந்தப் பருவத்தில் மனம் சிட்டுக்குருவிபோல் எங்கெங்கெல்லாமோ பறந்து செல்லும். கனவுலகிலே காதலில் சஞ்சரிக்கும். தன் உணர்ச்சிககாகத் தன் வாழ்க்கையையே பலியாக்கிவிடும். ரவி! எதைக்கண்டாலும் உண்மையென நம்பி அதற்காக முன்பின்யோசியாமல், தன்

லாழ்க்கையைப் பறிகொடுத்துவிடும் மனம். ரவி! உன் போன்ற வாலிபனுயிருக்கும் பொழுது நான் செய்த தவறுதான் என் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டது. ராஜன் அரண்மனையில் பெரும் புகழும் பெற்ற இந்த உடல் இன்று இந்த ஓலைக்குடிசையில் துன்பத்தால் வாடி வதங்குகிறது.'' என்று அவர் அளவு மீறிய துக்கத்தால் மேலே பேசமுடியாமல் நிறுத்தினர். அவர் குரல் தழுதழுத்தது.

''அவ்வளவு பெரிய தவறு என்ன நேர்ந்தது சுவாமி?'' என்று படபடப்புடன் கேட்டான் இளைஞன்.

''ரவி! அவசரப்படாதே! நான் செய்த தவறை நீயும் உன் வாழ்க்கையில் செய்து விடாதே! கவனமாய்க் கேள்'' என்று கூறி மேலே சொல்லலானர்.

* * *

அந்தக் காலத்தில் கலைக்குஉறைவிடமாய்த் திகழ்ந்தது பாண்டியநாடு. பாண்டியனுக்குச் சிற்பக்கலையின் மேலுள்ள ஆர்வத்தால் அது சிற்பக்கலையின் சிகரத்தையே எட்டி யிருந்தது. பாண்டியன் அடிக்கடி பல சிற்பப் போட்டிகளை ஏற்படுத்துவான்; சிற்பப் போட்டிகளின்மூலம் பாண்டியச் சிற்பிகளுக்கு ஊக்கமளித்து வந்தான். சிற்ப்போட்டியில் எல்லாம் வாலிபச் சிற்பியான மஹேந்திரவர்மாவின் சிற்பங்கள் முதன்மை ஸ்தானத்தை பெற்றன. அவரது கற்பனையிலிருந்து எழும்சிற்பங்கள் எல்லாம் பாண்டிய தேசத்துக் கோயில்களை அலங்கரித்தன. கலைப்பண்பு மிகுந்த அவரது கற்சிலைகளைக் கண்டவர்கள் தங்கள் கருத்தை அதனிடம் பறி கொடுத்தனர். வாலிபச் சிற்பியான வர்மாவின் சிற்பங்களைக் கண்ணுற்ற கலைவாணர்கள் அவரைப் போற்றிப் புகழ்ந்தனர். வர்மாவின் புகழ் நாளுக்குநாள் வளர்ந்து பாண்டியனது பெருமதிப்பையும் பெற்றது. அது முதற் கொண்டு பாண்டியனது அரச சபையையும் வர்மாவின் சிற்பங்கள் அலங்கரித்தன.

வர்மா வாலிபப் பருவத்தின் முழுவளர்ச்சியையும் அடைந்திருந்தார். கட்டுமஸ்தான தேகம், தேஜஸ் பொருந்திய முகம். உளி வேலை செய்வதால் உரம் பெற்றுப் போயிருந்த அவரது உருண்டு திரண்ட புஜங்களும், அகன்ற மார்பும் அவர் அழகை மிகைப்படுத்தின. பரந்த நெற்றி அவரது கற்பனைத் திறனை எடுத்துக் காட்டியது. வர்மா தம் வாழ்க்கை முழுவதையும் சிலைகள் செதுக்குவதிலேயே கழித்தார். அவரது மனக் கோயிலில் கலையன்னையைத் தவிர வேறு யாரும் இடம் பெறவில்லை. அவரது கற்பனை ஊற்றுக்களிலிருந்து கிளர்ந்தெழும் சிற்பங்கள் கல்லினில்சமைக்கப்பட்டுக் கோடிக் கணக்கான வருடங்கள், காண்போர் மதி மயங்கும் வண்ணம் காட்சியளித்தன. காலையில் துவங்கும் உளியின் ஓசை சிற்சில சமயங்களில் இரவில்கூட அவர் குடிசையிலிருந்து விடாது ஒலிக்கும்.

தன் பிறந்தநாள் வைபவத்தை விமரிசையாகக் கொண்டாடும்பொருட்டு ஒரு சிற்பப் போட்டியை ஏற்படுத்தினன் பாண்டியன். ''சிற்பப் போட்டியில் முதன்மைஸ்தானத்தை யார் அடைகிறார்களோ அவர்களுக்கு ஆயிரம் பொன்னும், ஆஸ்தான சிற்பிப்பதவியும் கொடுக்கப்படும்'' என்று பறையறைவிக்கப்பட்டது. சிற்பம் செதுக்க ஒருதிங்கள் தவணையும் கொடுக்கப்பட்டது.

வர்மாவின் மனம் மட்டற்ற மகிழ்ச்சியில் மிதந்தது. கலைக்கோயிலில் எல்லாத் தேசத்துத் சிற்பிகளாலும் கௌரவிக்கப் படும் ஓர் உன்னத பதவியை அடைய வேண்டும் என்று வெகுநாட்களாக விரும்பிய வர்மாவுக்குத் தம் கைத்திறனைக் காட்ட ஓர் சந்தர்ப்பம் வாய்த்தது கண்டு எல்லையற்ற பூரிப்படைந்தது அவர்மனம்.

சிற்ப சாலை யொன்றை நிர்மாணித்திருந்தான் வேந்தன். சிற்பவேலை செய்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. எல்லாத் தேசங்களிலிருந்தும் வயது முதிர்ந்தவர்களும் வாலிபர்களுமாய்ச் சிற்பிகள் வந்து குவிந்தனர். சிற்ப சாலை முழுதும் 'கல்... கல்' என்று ஒலித்த உளியின் ஓசையானது சிற்பிகள் தங்கள் பணியில் ஈடுபட்டதை அறிவித்தது. சிறிது நாட்களிலேயே அங்குள்ள கற்பாறைகள் உருப்பெறத் தொடங்கின.

நாட்கள் உருண்டோடின. சிற்பப் போட்டிக்குக் குறிப்பிட்ட நாள் நெருங்கிக் கொண்டேயிருந்தது. சிற்பிகளில் அனேகர் தங்கள் சிற்பத்தை முடித்து விட்டனர்.

பகலவன் மெதுவாய் மேற்றிசையில்மறையலானன். கீழ்த்திசையில் தன் தண்மை பொருந்திய ஒளியைப் பரப்பிக் கொண்டு சந்திரன் தோன்றினன். பகல் முழுதும் வேலை செய்த அலுப்பின் மிகுதியால் நித்திரைக்குச் செல்லலாயினர் சிற்பிகள்.

பால் போல் வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்தது. பிரகாசம் பொருந்திய சந்திரனின் ஒளியிலே நட்சத்திரங்கள்

ஒளி மங்கி மின்னின. நீல நிற வானிலே சிற் சில இடங்களில் ஊர்ந்து செல்லும் சின்னஞ் சிறு மேகக் கூட்டங்கள், நில வொளிபட்டு நீலக்கடலிலே நீந்திச் செல்லும் அன்னங்கள் போல் காட்சி யளித்தன. நகரமன்றத்திலே "டணார்...டணார்" என்றடித்த நடுச்சாமமணி நிசப்தத்தை ஊடுருவிச் சென்று நாற்றிசை யிலும் பரவி அடங்கிற்று. கேட்டுக் கொண்டிருந்த ஒன்றிரண்டு சிற்பிகளின் பேச்சுக் குரலும் அடங்கி விட்டது. பால் நிலவிலே எங்கும் மோனம் நிலவியது. காலை முழுவதும் கல்...... கல் என்று உளியின் நாத வெள்ளத்தில் லயித்திருந்த சிற்பிகள் நடுச்சாமத்தில் கடும் நித்திரை யில் மூழ்கியிருந்தனர்.

மகேந்திரவர்மர் பால் பொழியும் நிலவைப் பருகிக் கொண்டே ஒரு சாய் வான பாறையில் சாய்ந்திருந்தார். அவரது இருகரங்களும் தலைக்குத் தலையணையாக உதவின. சிற்பி ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தார். ஏதோ ஒரு பொருளைத் தேடுவது போல் வானத்தைத் தம் கண் களால் ஊடுருவிப் பார்த்துக் கொண் டிருந்தார். மற்றச் சிற்பிகளெல்லோரும் சிற்பப் போட்டிக்கு அனுப்ப வேண்டிய சிலைகளைச் செதுக்கி முடித்திருந்தும் வர்மாவின் கரங்கள் மட்டும் இன்னும் உளியைத் தொடவேயில்லை. ஆம், அவரு டைய கற்பனையிலேயே அவர் செதுக்க வேண்டிய சிற்பம் உருப்பெறவில்லை.

மணியோசை அவர் சிந்தனையைக் கலைத் தது. வர்மா ஒரு பெருமூச்சுடன் பாறை யிலிருந்து எழுந்தார். அவர் கண்ணெதிரே ஒரே கல்சிதறல்களும், சிற்பிகள் பணித் திருந்த சிலா உருவங்களும் தென்பட்டன. அவருடைய கால்கள் அவரைச் சிலைகளை நோக்கி இழுத்துச் சென்றன. அந்த மயான மோனத்திலே அவருடைய காலடி களின் ஓசைமட்டும் தெளிவாகக் கேட் டது. ஒவ்வொரு சிலையாகப் பார்த்துக் கொண்டே சென்ற அவர் மனம் ஒன்றிலும் திருப்தியடையவில்லை.

வர்மாவின் கண்களுக்குச் சிற்பசாலை யோரத்தில் ஒரு குடிசையில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் வெளிச்சம் புலப்பட்டது. அங்கு யார் இன்னம்


# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 9,00,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 6 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| அமதலவார்ஸா | கும்பகோணம் | திருநெல்வேலி ஜங்ஷன் | ராமநாதபுரம் |
| அனகாபள்ளி | சாலூர் | திருச்சிராப்பள்ளி | மதுரை |
| அம்பாசமுத்திரம் | சிதம்பரம் | திருவாரூர் | மாருடேரு |
| ஆம்பூர் | சித்தூர் (கொச்சி) | தென்காசி | விழுப்புரம் |
| ஈரோடு | சீயாழி | நாகப்பட்டணம் | விருதுநகர் |
| கடலூர் N. T. | தஞ்சாவூர் | பரமக்குடி | விஜயநகரம் |
| கடலூர் O. T. | தாடபள்ளிக்கூடம் | பாலக்காடு | வேலூர் |
| காஞ்சீவரம் | திலாரு R. S. | பார்வதிபுரம் | வேதாரண்யம் |
| காரைக்குடி | திருநெல்வேலி டவுன் | புதுக்கோட்டை | |

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... 2¾% விதம்
இரண்டு ,, ,, ... ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 10,000/வரை வட்டி 2½% ,,
கரண்ட் கணக்கு .. ... .. .. ¼% ,,
தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

விழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி அவர் மனத்திடையே எழுந்தது. அவர் அந்தக் குடிசையை நோக்கி நடக்கலானார். குடிசையின் வாயிலையடைந்த வர்மாவின் கண்களுக்கு மூன்று உருவங்கள் தென்பட்டன. ஒன்று ஒரு ஆண் உருவம். மற்றவை ஒரு பெண்ணும், அந்தப் பெண்ணைப் போன்றிருந்த ஒரு சிலையும். சிலையினடியில் முழங்காலை ஊன்றிய வண்ணம் சிலையையும் அந்தப் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தது அந்த ஆண் உருவம்.

நிலவின் ஒளியிலும், பக்கத்தில் மங்கலாக எரிந்து கொண்டிருந்த விளக்கின் ஒளியிலும் சிலையின் தோற்றம் நன்ருகத் தெரிந்தது. புஷ்பச் செண்டு ஒன்றைக் கையில் தாங்கிய வண்ணம் நின்றிருந்தது சிலை. வர்மா சிலையினழகில் தம் மனதை லயித்திருந்தார். கால்களில் தான் என்ன வேலைப்பாடு. அந்தச்சிலையின் தளிர்க் கரங்களிலிருக்கும் புஷ்பச் செண்டுக்குத் தான் என்ன அழகு! அந்தப்பூவினது காம்புதான் எவ்வளவு மெல்லியதாய்ச் செதுக்கப் பட்டிருக்கிறது. சிற்பியின் பொறுமையும், கைத்திறனும் அதில் மிளிர்ந்தன. வைத்தகண் வாங்காமல் பார்த்து கொண்டிருந்தவர்மா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

ஆள் அரவம் கேட்டு நிமிர்ந்தனர் இருவரும். "சிற்பியே! வணக்கம். இந்த அகாலவேலையில் தங்கள் சிற்ப வேலைக்கு இடையூருக வந்துவிட்டேன்" என்ருர் வர்மா.

"அதனுல் பரவாயில்லை. தாங்கள்யார் என்று அறிய விரும்புகிறேன்." என்ருர் சிற்பி

"என்பெயர் மகேந்திரவர்மன். பாண்டிய நாட்டு சிற்பிகளில் ஒருவன். தாங்கள் .........?"

"சோழநாடு. நரேந்திரன் என்றழைப்பர்."

"நரேந்திரரே! காலம் நடுச்சாமத்திற்குமேல் ஆகிவிட்டதே. தாங்கள் இன்னும் விழித்துக்கொண்டு சிற்பவேலை செய்கிறீர்களே! காலையில் நல்லவெளிச்சத்தில் வேலை செய்யலாமே."

வாஸ்தவந்தான். ஆனுல் பகலில் என் தங்கைபுஷ்பவல்லிக்கு ஓய்வு கிடைப்பதில்லையே! இப்பொழுது இவளைச் சிலையில் உருவாக்கும் பணியில்தான் ஈடுபட்டிருக்கிறேன், இந்தச் சிலையைத்தான் சிற்பப் போட்டிக்கு அனுப்பப்போகிறேன்."

வர்மாவின் கண்கள் அந்தப் பெண்ணின் மேல் தாவிச்சென்றன.

சௌந்தர்யதேவியே தம்முன் வந்து கொலுவீற்றிருப்பதுபோல் உணர்ந்தார் வர்மா. கருநாகம்போல் கருகருவென்று அடர்ந்து வளர்ந்திருந்த அவள் கூந்தல், அவள் நெற்றியிலும் விழுந்து கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தது. சிவந்தஅதரங்களும் கயல் மீன்களை யொத்த விழிகளும் அவள் அழகை எடுத்துக் காட்டின. வர்மா அவளழகில் தம்மை மறந்து ஈடுபட்டார்.

அவளையும் அவர் கற்பனையில் எழும் பெண்ணுருவங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தது அவர் மனம். "உம்.............என்ன இருந்தாலும் உன்னுடைய சிருஷ்டியைவிட பிரம்மனின் சிருஷ்டி சிறந்ததுதான்" என்று அவர் மனம் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டது.

வர்மா சிலையைப் பார்த்தார். சிற்பி அவளை மிகவும் பிரயாசைப்பட்டுச் சிலையில் உருவாக்கியிருந்தார். சிலையின் ஒவ்வொரு அங்கங்களும் மிக நேர்த்தியாகச் செதுக்கப் பட்டிருந்தன. சிலை சிற்பியின் கற்பனைச் சிருஷ்டி யல்ல, பிரம்மனின் சிருஷ்டியைப் பார்த்துச் செதுக்கப்பட்டது. சிலையின் வேலைப்பாடுகள் மிகச் சிறந்தவைதான். ஆனுல் கற்பனையில்லை.

"மஹேந்திரரே சிலை நன்ருயிருக்கிறதா?" என்ற நரேந்திரரின் கேள்வி வர்மாவைக் கனவுலகிலிருந்து தட்டி யெழுப்பியது.

"சிலை சிறந்ததுதான். ஆனுல்............"
"ஆனுல் என்ன? குறை யேதாவது இருக்கிறதா? படபடப்புடன் வெளி வந்தன வார்த்தைகள்.

சிலையில் குற்றமில்லை. ஆனுல் இது கற்பனையில் உருவாகியது அல்லவே. தங்கள் வேலைத்திறன் ஒவ்வொரு அங்கங்களிலும் பிரதி பலிக்கிறது. ஆனுல் கலைப் பண்புக்கு வேண்டிய கற்பனைத் திறன் துளிர்க்கவில்லையே! உம், கற்பனையில் தோன்றியதாயிருந்தால், இதைவிட ஜீவனுள்ளதாய்த் திகழும்; தெய்வீகக்களை முகத்தில் மிளிரும்"

"சிற்பியே!தங்கள் எண்ணம் அதுவாக இருக்கலாம். அதற்காக என் சிலையில் குற்றம் கூறமுடியாது." நரேந்திரர் கோபமும் ஆத்திரமும் கலந்த குரலில் பேசினுர்.

"சிற்பியே! என் மனதில் பட்டதைச் சொன்னேன். இதற்கு ஏன் தாங்கள் மன வருத்தமடைய வேண்டும்? நரேந்திரரே! கண்ணால் காணும் உருவங்களைச் சிலைகளில் அமைப்பதைவிடக் கற்பனையில் தோன்றும் உருவங்களைக் கல்லினில் அமைப்பதுதான் சிறந்த கலை. அதில்தான் கலைஞனின் கற்பனைத்திறன் தோன்றும். கற்பனை ஓவியங்களை மனதில் தீட்டுங்கள். பின்னர் சிலைகளில் உருவாக்குங்கள். அதுதான் சிற்பியின் சிற்பக்கலை"

நரேந்திரர் கல்லெனச் சமைந்திருந்தார். "சிற்பியே! காலம் நடுநிசிக்குமேல் அதிகம் ஆகிவிட்டது. நான்போய் வருகிறேன்", என்று கூறியவண்ணம்குடிசையை விட்டு வெளிவந்தார் வர்மா.

"கலைஞரே!" என்று யாழ்போல் ஒலித்தது ஓர் குரல். குடிசையின் வாயிற் புறத்தருகில் வந்துவிட்ட வர்மா "யார்?" என்ற கேள்வியுடன் திரும்பினார்.

"நான் தான். சற்றே பொறுங்கள்" என்று கணீரென்று ஒலித்தது அந்தப் பெண்ணின் குரல்.

"உலகில் தோன்றும் சிருஷ்டிகள் அனைத்தும் அன்னையின் சிருஷ்டிதானே!"

"ஆம்"

"அன்னைபடைத்த உயிர்களில் அழகு இல்லை, ஜீவன் இல்லை என்று சொல்லுகிறீர்களா?"

"இல்லை, அன்னையின் சிருஷ்டிகளனைத்தும் அழகின் உறைவிடமே. பச்சைக் கம்பளம் விரித்தாற்போலுள்ள பசும்புல் தரைகளில் பாய்ந்தோடும் மானினங்களின் மருண்ட பார்வையிலும், அன்னத்தின் அலங்கார நடையிலும், மயிலினது நிருத்தியத்திலும் அழகில்லை என்று சொல்ல முடியுமா? அவைகள் கலையன்னையின் சிருஷ்டிகள் தான். ஒரு சிற்பி செதுக்கிய சிலையைப்போல் மற்றொரு சிற்பி சிலை செதுக்குவதுண்டா? அன்னையும் ஒரு சிற்பிதான். கவிஞனின் கற்பனைக்கவிதைகளிலுள்ள கவித்துவ சக்தி, சைத்திரிகனின் கற்பனை ஓவியங்களிலுள்ள சிறப்பு, சிற்ப வல்லுனனின் கற்பனைத் திறனால் செதுக்கப்படும் கற்சிலைகளின் அழகு, கலை, தெய்வீக சக்தி-இவையனைத்தும் ஒருங்கே சுடர் விட்டெரியும் கைத்திறனில் மட்டுமல்ல, சிற்பியின் திறமை; கற்பனையிலும் வேண்டும்.

வர்மா தம்மைமறந்து உணர்ச்சியுடன் தம் கலை ஆர்வத்தை அள்ளிக் கொட்டினார். வர்மாவின் பேச்சில் மனதைப் பறி கொடுத்தவளாய்க் கற்சிலைபோல் நின்றாள் புஷ்பவல்லி.

வர்மாவின் பேச்சிலுள்ள உண்மை நரேந்திரர் மனதிலும் சிறிது புலப்பட்டது. ஆனால் அவர் தம் சிலையை வேண்டுமென்றே குறை கூறுகிறார் என்ற எண்ணமே மேலோங்கியிருந்தது. தமக்குப் போட்டியாகத் தம்மைவிடச் சிறந்த சிற்பி ஒருவன் இருக்கிறான் என்று மனதில் பட்டதும், நரேந்திரரின் மனதில் பொறாமை கொழுந்து விட்டெரியத் தொடங்கியது.

வர்மா நிச்சிந்தையாய்த் தாம் நாளைக்குச் செதுக்கப்போகும் உருவத்தை நினைத்துக் கொண்டே தம் குடிசையை நோக்கி நடந்தார். ஆனால் இடையிடையே அவர் மனதில் அவளுடைய உருவமும் தோன்றி மறையலாயிற்று. அவருடைய கலா ஆர்வம் அவரிடத்தில் அவளுக்குப் பெரும் மதிப்பைக் கொடுத்தது.

காரிருளை அகற்றக் கீழ்க்கோடியில் தன் நித்தியக் கடனை செய்யும் பொருட்டுப் பரிதி தோன்றினான். சிற்ப சாலையில் உள்ளவர்கள் தங்கள், தங்கள் சிற்பங்களை மற்றவர்களுக்குக் காட்டி அளவளாவிக் கொண்டிருந்தனர். இயற்கைக்கு மாறாக அன்று "கல்...கல்" என்ற உளியின் ஓசை வர்மாவின் குடிசையிலிருந்து காற்றில் மிதந்து வந்தது. இரவு முழுதும் கண் விழித்து, கற்பனையில் உருவாக்கியிருந்த சித்திரத்தை கல்லினில் உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் சிற்பி.

சூரியன் வான முகட்டில் உச்சிக்குவந்து விட்டான். கல்லின் மேல் உளியினால் அடிக்கும் போது தெறித்தெழும் கல் துகள்கள் அவர் கையிலும் முகத்திலும் பட்டு அவரை வருத்தின. நெற்றியிலிருந்தும், கைகளிலிருந்தும் வியர்வை பெருகியோடியது. நெற்றியில் அரும்பியிருந்த வியர்வைத்துளிகளை வழித்தெறிந்து விட்டுத் தலையை நிமிர்த்தினார் சிற்பி.

வர்மாவின் முன் நரேந்திரரும் புஷ்பவல்லியும் காணப்பட்டனர்.

"நீங்கள் தானா! குடிசைக்குள் வாருங்கள்" என்று புன்னகை பூத்தவராய் அழைத்துச் சென்றார் வர்மா.

குடிசையில்தாம் உருவாக்கிய சிற்பங்களைப்பெருமிதத்துடன் ஒவ்வொன்றாய் அவர்

களிடம் காண்பித்துக் கொண்டே சென்றார் வர்மா. சிலைகளின் சிறப்பைக்கண்ட நரேந்திரரின் மனதில் பொறுமைப்பேய் பிடித்து ஆட்ட ஆரம்பித்தது. அவர் மனம் சிலைகளின் அழகில் லயிக்க மறுத்தது. சிற்பப்போட்டியில் தாம் எவ்விதம் பரிசை யடைவது என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது.

''மகேந்திரரே! சிற்பப் போட்டிக்குத் தாங்கள் எந்தச் சிலையை அனுப்பப் போகிறீர்கள்?'' என்றார் நரேந்திரர்.

''நரேந்திரரே! இன்னும் சிலை பூர்த்தியாக வில்லை. அதோ! அந்தக் கற்சிலைதான் பரிசுக்காகக் காத்திருக்கிறது.''

''பரிசுக்காகக் காத்திருக்கிறது''—என்று நரேந்திரர் தமக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்.

''சிற்பப்போட்டிக்கு இன்னும் பத்து தினங்கள்தானே இருக்கின்றன. அதற்கு முன்னர் சிற்பத்தை முடித்துவிட முடியுமா?'' என்றாள் சந்தேகம் தோன்றப் புஷ்பவல்லி.

சிற்பி புன்னகை பூத்தவராய், ''ஏன் முடியாது? இன்று இரவிலேயே வேண்டுமானாலும் முடித்து விடலாமே'' என்றார்.

''மகேந்திரரே! தங்கள் பணியில் ஈடுபடுங்கள். நாங்கள் தடையா யிருக்கிறோம்'' என்று கூறிய வண்ணம் நகர்ந்தனர் இருவரும்.

போகும் பொழுது வல்லியின் மின் வெட்டுப் போன்ற பார்வை வர்மாவின் மனதில் ஒரு புயலைக் கிளப்பிற்று. சிற்ப வேலைகளுக்கிடையே அந்தப்பார்வை அவர் கண் முன் தோன்றி மறையலாயிற்று. இதனால் தம் மனம் சஞ்சலமடைவது அவருக்கு விநோதமாகவே இருந்தது.

கால சக்கரம் சுழன்றது. பருவகாலம் மாறுவது போல வர்மாவின் மனதிலும் மாறுதல் ஏற்படலாயிற்று. ஒவ்வொரு நாளும் வர்மாவின் குடிசைக்குவரும் வல்லி அவர் மனதில் ஒருவித புது மாறுதலைச் சிருஷ்டித்து விட்டாள். வர்மாவின் மனதில் வல்லி நிரந்தரமாய் இடம் பெற்று விட்டாள்.

காலம் முழுதும் ''கல்.........கல்'' என்ற உளிச் சத்தத்தில் சலிப்புற்றிருந்த வர்மா, ''கலீர்.........கலீர்'' என்ற வல்லியின் கால் சலங்கை யொலியில் மனதைப் பறிகொடுத்தார். ஏகாந்தத்தில் சிலைகள் செதுக்குவதில் கிடைத்த இன்பம் இப்பொழுது வல்லியின் அருகிலிருந்தது. பேசாச் சிற்பங்களுடன் நாள் முழுதும் கழித்த வர்மாவிற்கு வல்லியின் பேச்சுக் குரல் யாழினும் இனிமையாக இருந்தது. வர்மாவின் சிற்பம் அநேகமாய்ப் பூர்த்தி யடைந்திருந்தது. அதுபோல் அவர் மனதிலும் வல்லியின் உருவம் நிரந்தரமாய்ப் பூர்த்தி யடைந்து விட்டது.

கதிரோன் தன் கிரணங்களை வாரிச் சுருட்டிக்கொண்டு மலைகளினிடையே மறைந்தான். கீழ்த்திசையில் சந்திரன் தன் தண்மைபொருந்திய கிரணங்களுடன் வெளிவந்தான். வர்மா அளவற்ற பூரிப்புடன் சிலை செதுக்குவதில் முனைந்திருந்தார். அவர் கற்பனைத் தெய்வம் சிலையில் உருவாகிக் கொண்டிருந்தது.

அளவுமீறிய அயர்ச்சியினால் உளியைக் கீழேவைத்துவிட்டுச் சிலையினழகைப்பருகிக் கொண்டே ஒரு கற்பாறையில் அமர்ந்தார் வர்மா. சிலையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த வர்மா, சிலையில் குறை யெதுவுமில்லாமல் தம் கைத்திறன் முழுதும் பிரதிபலிப்பதுகண்டு மிகுந்த உவகை யடைந்தார்.

நாளைக்குக் கண்திறப்பு. கண்ணைத் திறந்து விட்டால் அவர் கற்பனைத் தெய்வம் பரிசு பெறுவதற்குத் தயாராகிவிடும். சிற்ப சாலையில் கலைச் செல்வங்களுக் கெல்லாம் சிகரமாய் விளங்கும் தம் சிலை என்று நினைக்கும் பொழுது, அவர் மனம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது. அதிலும் தான் பரிசு பெற்றதை ''அவள்'' அறிந்தால் அவளுக்குத்தான் எவ்வளவு சந்தோஷ மேற்படும் என்று நினைத்தவுடன் அவர் மகிழ்ச்சி எல்லைக் கோட்டையும் தாண்டிச் சென்றது.

சிந்தனையில் மூழ்கியிருந்த அவருடைய கண்களை மலர் போன்ற இரு கரங்கள் மூடின.

கண்களைமூடிய கரங்களை எடுத்து விட்டு ''களுக்'' கென்று சிரித்தாள் வல்லி. சிரிப்பொலி காற்றுடன் கலந்து சென்றது. அந்தப் பால் நிலவில் அவள் வதனம் மிகுந்த பிரகாசத்துடன் ஜ்வலித்தது. சுருள் சுருளாய் நெற்றியில் புரண்டுகொண்டிருந்த தலைமயிரை ஒதுக்கிவிட்டு அவள் அழகைப் பருகிக் கொண்டிருந்தார் வர்மா. கரடு முரடான பாறைகளிலும், உளிகளிலும் பழக்கப்பட்ட அவர் கரங்கள் வல்லியின் மிருதுவான கரங்களின் மென்மையை ஸ்பரிசித்துக்கொண்டிருந்தன.

அங்குலிலவியிருந்த நிசப்தத்தை கலேத்துக் கொண்டே, 'மகேந்திரரே! தங்கள் சிலே பூர்த்தியடைந்துவிட்டதா?'' என்று வினவினுள் வல்லி,

''வல்லி! நாளை மறுநாள் என் சிலே பூர்த்தியாகிவிடும். சிற்பப் போட்டியில் எனக்குத்தான் பரிசு!'' என்ருர் பெருமிதத்துடன்.

''எனக்குப் பரிசு!''

''உன்னைக் கல்லினில் உருவாக்கி, அழகுத் தெய்வமாக மிளிரும் அந்தச் சிலேயைப் பரிசாக அளிக்கிறேன்''

''வேண்டாம்! அண்ணுதான் என்போன்ற ஓர் சிலேயை செதுக்கிவிட்டானே! எனக்குப் பரிசு......தாங்கள்தான்'' என்று கூறிவிட்டு வெட்கத்தால் முகத்தை வர்மாவின் மார்பில் புதைத்துக்கொண்டாள்.

* * *

மறுநாள் காலே உளியை எடுத்து வேலே செய்வதில் வெகுவாக முனைந்திருந்தார் வர்மா. சிலேயின் கண்களைத் திறந்துகொண்டிருந்தார். வள்ளியும் நரேந்திரரும் அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்ததைக்கூடஅவர் கவனிக்கவில்லே.காலம் கழிவது தெரியாமல் தம் வேலேயில் ஆழ்ந்திருந்தார் வர்மா. கண்ணைத் திறந்துவிட்டார்—சிற்பம் பூர்த்தியடைந்துவிட்டது. சிலேயை உற்றுப்பார்த்த வண்ணமிருந்த வர்மா, ''மகேந்திரரே''! என்ற குரல் கேட்டுத் திரும்பினுர்.

''மகேந்திரரே! சிலே பூர்த்தியடைந்துவிட்டதுபோலும்,'' என்ருர் நரேந்திரர்.

''ஆம், நரேந்திரரே! சிற்பப் போட்டியில் பரிசுபெறப் போகும் என் கலேயன்னை எவ்வளவு சோபையுடன் பிரகாசிக்கிருள் பார்த்தீர்களா? பராசக்தியின் அங்கங்களில் துடி துடிக்கும் ஜீவனைக் கவனியுங்கள்.பரிசு நிச்சயம் எனக்குத்தான்'' என்று பெருமிதத்துடன் படபடப்பாய்ப் பேசினுர்.

நரேந்திரரின் மனதில் வெகுநாட்களாகப் புகைந்துகொண்டிருந்தபொருமைக்குவத்தி வைத்தது போலிருந்தது வர்மாவின் பேச்சு.

''மகேந்திரரே! பரிசு உமக்குத்தான் என்பது என்ன நிச்சயம்?''

''சிற்பியாரே! என் கலேத் தெய்வத்தின் முன் எந்தச்சிற்பியின் சிற்பமும்ஈடுஆகாது''

''இல்லே மகேந்திரரே! என் சிற்பம்தான் பரிசை நிச்சயம் அடையப்போகிறது.''


# இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்
நார்த் பீச் ரோட், மதராஸ்.

●

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு, திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் - ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 53,00,000
ரிஸர்வ் நிதி - - ரூ. 60,72,602

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.
செக்ரெடரி.

"ஒருநாளும் இல்லை, நரேந்திரரே! வீண் தர்க்கம் எதற்கு? கற்பனைத் திறனற்றிருக்கும் உமது சிலைக்குப் பரிசா?" என்று எக்காளமாய்ச் சிரித்தார் வர்மா.

"மகேந்திரரே! தற்பெருமை எதற்கு? இந்தப் பேய்ச் சிலைக்குப் பரிசா? வீண் கனவு எதற்கு?"

"நரேந்திரரே! நாவை அடக்குங்கள். இதுவா பேய்ச்சிலை? இன்னும் சில வருடங்களில் நீர், நான், வல்லி எல்லோரும் அழிந்து விடுவோம். ஆனால் என் கற்பனையில் உருவாகி, கல்லில் கடைந்தெடுக்கப் பட்ட என் பராசக்தி—அன்னை ஊழிக் காலம் முழுதும் அழியாமல் நிருத்தியம் செய்துகொண்டிருப்பாள். என் கலையன்னையின் முன் உம் அலங்காரப்பாவை எம்மட்டு? சிற்பியே! நீர் என்னைமட்டும் அவமதிக்கவில்லை. என் கலையன்னையையே அவமதித்துவிட்டீர். இந்தப் பேய்ச்சிலைக்குப் பரிசு கிடைக்காவிட்டால் இந்த ஜன்மத்தில் நான் உளியைத் தீண்டவே மாட்டேன். உம் சிலைக்குப் பரிசு கிடைக்குமானால் என் பெரு விரலை உமக்குக் காணிக்கையாகச் செலுத்துகிறேன். இது சத்தியம்; என் கலையன்னையின் மீது ஆணை," என்றார் ஆத்திரத்துடன்.

"மகேந்திரரே! என் சிலைக்குப் பரிசு கிடைக்காமல் உமது சிலைக்குப் பரிசு கிடைக்குமானால் என் பெருவிரலை உமக்குக் காணிக்கையாய்ச் செலுத்துகிறேன்" என்று ஆக்ரோஷத்துடன் கூறிவிட்டு, தம் குடிசையை நோக்கி நடக்கலானார்.

வர்மாவின் அனல் கக்கும் பேச்சில் மனம் வெருண்டு நின்றாள் வல்லி. அவள் கண்கள் கண்ணீரைப் பெருக்கின.

"புஷ்பா!" என்ற நரேந்திரரின் கடுங்குரல் கேட்டு சோகம் கலந்த கண்களுடன் வர்மாவைப் பார்த்து விட்டு நரேந்திரருடன் சென்றாள் புஷ்பா. அவளது சோகங்கலந்த பார்வை வர்மாவின் திடமனதையும் நிலைகுலையச் செய்தது. அவர் கண்களிலிருந்து கண்ணீர் புரண்டோடியது. பொங்கிவழியும் கண்ணீருக்கிடையே தம் பணியில் ஈடுபடலானார் வர்மா.

மேற்றிசையில் கதிரவன் மறைந்து வெகு நேரமாகி விட்டது. வர்மா தம் சிலையின் கண்களைத் திறந்து விட்டார். சிற்பம் முழுமையும் பூர்த்தியடைந்து விட்டது. சிலைக்கு மெருகு கொடுத்துக் கொண்டிருந்தார் வர்மா. கண்களின் இமையரும்புகளில் நகாசு வேலை செய்து கொண்டிருந்தது உளி. நாளை தமக்குக் கிடைக்கப் போகும் பரிசைப் பற்றிய இன்பமயக்கத்தில் அவர் இருந்தாலும் மிக ஜாக்கிரதையாகவே வேலை செய்து கொண்டிருந்தார்.

கண் இமையரும்புகளை இழைக்கும் பணியில் கவனமாய் ஆழ்ந்திருந்த அவரது கண்களை வல்லி தன் கரங்களால் மூடினாள். சிற்பியின் கரங்கள் இடறின. அதன் பின் "கல்" என்ற என்ற உளியின் ஓசையும் உளி கீழே விழும் சப்தமும் அங்கு நிலவியிருந்த நிசப்தத்தைக் கலைத்து விட்டுக் கேட்டன. ஆம், உளி அன்னையின் கண் இமையில் ஊனமுண்டாக்கி விட்டது. வல்லி திடுக்கிட்டுப் பின்னடைந்தாள்.

அன்னையின் கண்ணிமையில் ஏற்பட்ட ஊனத்தை வர்மாவின் கண்கள் கண்டன. கண்களில் கோபக்கனல் வீசியது. கண்கள் நீரைப் பெருக்கின. அன்னையின் ஊனத்தைக் கண்டு மனம் வெதும்பியது. அவர் கண்கள் வல்லியையும் சிலையிலேற்பட்ட ஊனத்தையும் மாறி மாறிப் பார்த்தன. அளவு மிஞ்சிய கோபத்தால் உதடுகள் துடி துடித்தன.

"வல்லி;"...கடுமையாக ஒலித்தது அவர் குரல். உன் கண்மூடித்தனமான செய்கையினால் அன்னையின் கண்களில் மாசு ஏற்பட்டு விட்டது தெரியுமா? இரவு பகலாய்க் கண்விழித்து உருவாக்கிய என் அன்னையின் கண்களை ஊனப்படுத்தினது மன்றி என் வாழ்நாள் முழுதும் இனி என்னை உளியைத் தீண்ட முடியாமற் செய்து விட்டாயே! உன் மேற் கொண்ட காதலினால் என்னிடம் உனக்கு அதிக சலுகை காட்டினேன். பலன்—அன்னையின் கண்கள் பறிபோயின. என் வாழ்க்கையையே சீர்குலைத்த காதகி! போ! என் கண்முன் நில்லாதே!.

"உன் தமையன் வெற்றியடையட்டும்; நீ சந்தோஷப்படு! ஆனால் பழிக்குப் பழி வாங்கியே தீருவேன். அன்னையின் அழகைச் சீர்குலைத்த உனக்கு எதற்கு அழகு? என் கலையுடன் நீயும் அழிந்து போ!"

அன்னையின் கண்களை ஊனப்படுத்திய உளியை எடுத்துக் கோபாவேசத்தில் வல்லியின் கண்களை நோக்கி வீசினார். உளி வல்லியின் மண்டையைப் பிளந்தது. மண்டையிலிருந்து பெருகிய இரத்தம் முகத்தில் வடிந்து அவள் முகத்தைக் கோரப் படுத்தியது.

"சிற்பியே! என் தவறுதான். என்னை மன்னித்து விடுங்கள்," என்று அலறிய வண்ணம் அங்கிருந்து தன் குடிசையை நோக்கி ஓடினாள் வல்லி. வர்மா சிலையின் காலடியில் விழுந்து விசித்து விசித்து சிறு குழந்தை போல் அழுது கொண்டிருந்தார். அயர்ச்சியினால் அவர் சிறிதுநேரத்தில் அந்தப் பரந்த வெளியில் சிலையினடியில் நித்திராதேவி வசப்பட்டார். அவருடைய விம்மல் சப்தமும் சிறிது நேரத்தில் அடங்கி விட்டது.

சிலையை எடுத்துச் செல்ல வந்த அரசாங்க சேவகர்கள் வர்மாவையும் சிலையையும் பார்த்து விட்டுத் திகைத்தனர். நித்திரை கலைந்த வர்மா அரசனின் கட்டளைக்கிணங்க சிலையைப் போட்டிச்சாலைக் கனுப்பிவிட்டு, தாமும்அரண்மனை நோக்கிச் சென்றார். குற்ற முள்ள சிலை. கலைப். பீடத்தை அலங்கரிக்கத் தகுதியற்ற சிலை. அவர் மனம் அவரை வருத்திற்று.

* * *

ஆஸ்தான மண்டபத்தில் ஒரே பேரிரைச்சலாயிருந்தது. பாண்டிய மன்னரும் தீர்ப்புக்கூற வேண்டிய கலை வாணர்களும், சிற்பிகளும் தங்கள் தங்கள் ஆசனத்தில் வந்து அமர்ந்தனர். சபையிலும் நிசப்தம் நிலவத் தொடங்கியது.

வெண்பட்டால் மூடப்பட்ட சிலைகள் ஒவ்வொன்றாய்க் கொண்டுவரப் பட்டன. அரசரின் பக்கத்தில் அமர்ந்திருந்த கலைவாணர்கள் சிலைகளை ஒவ்வொன்றாய்ப் பரிசோதித்தனர். சிலைகளில் பெரும்பாலானவை வந்து விட்டன. அவைகளில் ஒன்றும் பரிசுக்குத் தகுதியுள்ளதாய்த் தோன்ற வில்லை. சபையில் எல்லோருக்கும் சலிப்புத் தட்டியது. இரண்டே இரண்டு சிலைகள் தான் மீந்திருந்தன.

ஒரு சிலை கொண்டுவரப்பட்டது. வேந்தர் வெண்துகிலை நீக்கியதும் தான் தாமதம். சபையில் ஒரே ஆரவாரம் எழுந்தது.

"ஆஹா!," "என்ன அழகு!," "என்ன சிற்பவேலை" என்ற சந்தோஷக் கூச்சல்கள் கிளம்பின. கலைவாணர்களின் முகத்திலும் மகிழ்ச்சிக்குறி தோன்றியது.

"இது யாருடைய சிலை?" என்றான் வேந்தன்.

"சோழதேசத்துச் சிற்பி நரேந்திரருடையது வேந்தே!" என்று பணிவுடன் கூறினார் அமைச்சர்.

மரியாதையாக எழுந்து வணங்கிவிட்டு நரேந்திரர் சபையோரையும், குறிப்பாக வர்மாவையும் ஒரு முறை பார்த்துவிட்டு அமர்ந்தார்.

வர்மா மிகவும் அமைதியாக இருந்தார். அவர் முகம் இயல்பாகவுள்ள மகிழ்ச்சியின்றி, களையிழந்து காணப்பட்டது.

"மஹேந்திரவர்மாவின் சிலை எங்கே?" என்றது வேந்தன் குரல். அவன் குரலில் ஏமாற்றம் தொனித்தது.

வர்மாவின் சிலையைக் கொண்டுவர ஆக்ஞாபித்தார் மந்திரி.

சிலையின்மேல் போர்த்தப்பட்டிருந்த வெண்துகிலை நீக்கிய மன்னன், "ஆ!" என்றலறிய வண்ணம் பின்னடைந்தான்.

"என்ன அபூர்வ சிருஷ்டி, சாக்ஷாத் பராசக்தி தான்" என்று மிதமிஞ்சிய ஆனந்தத்தில் கலைவாணர் குழுவிலுள்ள ஒருவர் கூறினார். "பரிசு பாண்டிய சிற்பி மகேந்திரவர்மாவிற்கே உரியதாகும், என்றான் வேந்தன். வர்மா மௌனம் சாதித்தார். சிலை குற்றமுள்ளது என்று கூற அவர் உள்ளம் துடிதுடித்தது; ஆனால் உதடுகள் அசைய ஏனோ மறுத்தன!

நரேந்திரர் ஏமாற்றமடைந்தவராய் சிலையை நோக்கி விரைந்தார். சிலையின் அங்கங்களை ஊடுருவிப் பார்த்தன அவர் கண்கள். கண்ணிமையில் உள்ள வடுவைக் கண்ட நரேந்திரர் அழுத்தமான குரலில், "இல்லை வேந்தே! பரிசு இந்தச் சிலைக்கு அல்ல" என்றார்.

"ஏன்?" என்று ஏக காலத்தில் வெளி வந்தன சபையோரின் குரல்கள்.

"சிலை குற்றமுள்ளது. இதோ! கண்ணிமையில் உளியைத் தவறுதலாகப் பிரயோகித்ததனால் உண்டான ஊனம்"

கலை வாணர்கள் கண்ணிமையைக் கவனித்தனர்.

"ஆம் வேந்தே! குற்றமுள்ள சிலை பரிசுக்கு உதவாது. பரிசு நரேந்திரருக்கே வழங்கப்படவேண்டும்" என்று தீர்ப்பளித்தனர் கலைக்குழுவினர்.

"மகேந்திரவர்மரே!" என்றான் சோகம் நிறைந்த குரலில் வேந்தன்.

பேசமுடியாமல் நின்ற வர்மா தம் தவறை உணர்ந்து தலை குனிந்தார்.

"சபையோர்களே! கலைவாணர்களே!! இன்றுமுதல் சிற்பப் போட்டியில் பரிசு பெற்ற நரேந்திரரே நம் ஆஸ்தான சிற்பியாக விளங்குவார், பரிசு ஆயிரம் பொன்னும் அவருக்கு வழங்கப்பட வேண்டும்"

என்ற வேந்தன் சொற்கள் வர்மாவின் செவியிலும் விழுந்தன.

அரசன் பரிசை நரேந்திரருக்கு வழங்கி ஆஸ்தான சிற்பிக்குரிய சின்னங்களையும் வழங்கினான்.

பரிசு பெற்ற பெருமிதத்தில் நின்று கொண்டிருந்த நரேந்திரர் முன் வந்து நின்றார் வர்மா.

''நரேந்திரரே! பரிசை நீர் அடைந்து விட்டீர், என்னுடைய சிலை உம் சிலையை விடச் சிறந்ததுதான் என்பதை என் சிலையைப் பார்த்த பின்னர் நீரே ஒப்புக் கொள்வீர்.

"சிற்பியே! இதோ என் காணிக்கை!" என்று கூறியவண்ணம் கையிலிருந்த கத்தியால் பெருவிரலைத் துண்டித்தார். துண்டிக்கப்பட்ட பெருவிரல் நரேந்திரரின் காலடியில்விழுந்து துடி துடித்தது,

வர்மா தம் சிலையை நோக்கிச் சென்றார், அடுத்த விநாடி ''தடார்'' என்று சிலை கீழே விழுந்து சுக்கு நூறாய்ச் சிதறியது. ''குற்றமுள்ள சிலை இவ்வுலகில் இருக்கக்கூடாது'' என்று கூறிவிட்டுச் சபையைவிட்டு வெளியேறினார், அவர் கையிலிருந்து வடிந்த இரத்தம்சொட்டுச் சொட்டாய்ச் சபையில் விழுந்திருந்தது,

சிதறுண்டு கிடந்த பராசக்தியின் சிலையைக் கையில் எடுத்துக்கதறினார் நரேந்திரர். ஒன்றும் புரியாமல் திகைத்து நின்ற சபையோர் தம் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டனர்.

அதே நேரத்தில் நரேந்திரரின் குடிசையில் ஓர் உயிர் இவ்வுலகைவிட்டுச் சென்று கொண்டிருந்தது. அந்த ஜீவனின் பிரதிபிம்பம் புன்னகை தவழ அரச சபையில் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது, ஆம் பரிசு பெற்ற சிற்பம்தான் அது.

* * *

''சுவாமி! தங்களுக்குப் பரிசு'' என்றான் இளைஞன்.

வெறுப்புக் கலந்த குரலில் சிரித்தார் பெரியவர். ''அவள் காதலுக்கு என் உளி பரிசளித்து விட்டது, எனக்குப் பரிசா? அப்பா! இதோ'' என்று தம் விரலிழந்த கையைக் காண்பித்தார் பெரியவர்.

''தங்களுக்குக் கிடைத்த பரிசு இது தானா?'' என்று அவர் கையைப் பிடித்துக் கதறினான் இளைஞன். அவனுடைய கண்களில் பெருகிய கண்ணீர், பெரியவரின் ஒட்டி உலர்ந்த கன்னத்தின் வழியாய் வழிந்து கொண்டிருந்த கண்ணீருடன் கலந்து விரல் இழந்த அவர் கையை நனைத்தது.

இருமல்களுக்கும் ஜலதோஷங்களுக்கும்
மிக ஜனப்பிரீதி வாய்ந்த மருந்து

ஸிரோலின்
ரோச்




உலகு பூராவும் உபயோகிக்கப்பட்டுவருவது

# மனமே ராஜ்யம்!

உமா ஸ்ரீநிவாஸன்

## வசன காவியம்

[கவிதை—மனதில் உள்ள உணர்ச்சியை, பிறர் வசீகரமாகும்படி, சித்திரிக்கப் படும் சொல் ஓவியமே இது. சந்தத்திற்கு ஏற்ப, பண், இசை தாளங்களுடன் அமைந்தால் அது பாடல். பண், இசையின்றி, கருத்தைக் காட்டும் வசன நடையில் வருமானால் அது வசன காவியம். ஆங்கிலத்திலே எவ்வளவோ கவிதைகளும் காவியங்களும் சந்த, லயப் பண்களிலே அமையாதவை; ஆனாலும் அவை என்றென்றும் போற்றப்பட வேண்டியவை. நம் தாகூரின் கீதாஞ்சலி கூட அவ்விதமானதுதான்.

நம் தாய் மொழியிலும் இது தேவை. இதோ முதன் முதலிலே ஒரு வசன கவிதை! ஆங்கில மூலத்திலிருந்து மொழி மாறியது தான். ஆனாலும் நம் மொழியில் நம் சிந்தனைக் கேற்ற ஒரு வேதாந்தம்.]

என் மனமே எனக்கோர் இராஜ்யம். அதிலே நான் அவ்வளவு இன்பம் காண்கிறேன். உலகம் அளிக்கும் இன்பங்களையும், அன்பினால் வளரும் ஆனந்தங்களையும் காட்டிலும் அது உயர்ந்ததாக எனக்குத் தோன்றுகிறது. மற்றவர்கள் வேண்டுவதெல்லாம், எனக்கும் வேண்டும் போல ஆசை இருந்தாலும் என் மனம் அவற்றை வேண்ட மறுக்கிறது.

உயர்ந்த குடும்ப ஆடம்பரங்கள், நகை நாணயம் நிறைந்த பொக்கிஷம், வெற்றி மேல் வெற்றி பெற வாய்ப்பாக அமைந்த பலம், அரசியல், சமூக, குடும்பச் சிக்கல்களையெல்லாம் நீக்கத் தந்திரம், காதல் ததும்பும் கண்களைத் திருப்தி செய்யத் தகுந்த அழகிய உருவம்—இவை ஒன்றுமே எனக்குத் தேவையில்லை. கனவிலே கூட இவை எனக்கு அமைய வேண்டாம்—அவை தேவையில்லை எனக்கு. ஏன் என்றால் இவையெல்லாவற்றிற்கும் சேர்த்து என் இதயம் எனக்கு இன்பம் ஊட்டுகிறது.

உலகிலே துயரங்கள் எவ்வளவு என்று நான் கண்கூடாகக் காண்கிறேன்—வேகமாக முன்னேறுபவர்கள் எப்படித் தத்தளிக்கிறார்கள் என்பதையும்தான் நான் காண்கிறேன். உயர்ந்தநிலை அடைந்தவர்களை லஞ்சம், அபவாதம் முதலிய பல இடையூறுகள் எதிர்பாராத வகைகளிலும், சமயங்களிலும் குறுக்கிட்டு அச்சுறுத்துவதும் பார்க்கிறேன். அவர்கள் உழைத்துப் பேரும், பொருளும் பெறுகிறார்கள்; பயப்படவும் வேண்டியிருக்கிறது. ஆனால் அந்தவிதமான கவலைகளையெல்லாம் என்மனம் தாங்காது.

நான் திருப்தியாக வாழ்கிறேன்; இது போதும். போதுமானதற்குமேல் நான் தேடித் திரியவில்லை. அகந்தையை நான் வளர்க்கவில்லை; அந்தஸ்தை நான் விரும்பவில்லை. பாருங்கள்! என் தேவைகளை என் மனது திருப்தி செய்கிறது. ஆஹா! இவ்விதமாக ஓர் அரசன்போல் அதிருப்தி, அகந்தை, அந்தஸ்து இவற்றை நெருங்க வொட்டாமல், வெற்றிகொண்டு என் மனம் அளிப்பதைக் கொண்டு திருப்தியாக வஸிக்கிறேன்.

சிலரிடம் நிரம்ப பொருள் இருந்தும், மேலும் அவர்கள் வேண்டித் தவிக்கிறார்கள். ஆனால்! என்னிடம் இருப்பது கொஞ்சமாயிருந்தும் நான் மேலும் வேண்டுவதில்லை. ஆகையால் அதிகம் பெற்றிருந்தும் அவர்கள் ஏழைகள்; சிறிது படைத்திருந்தும் நான் செல்வன். அவர்கள் ஏழை; நான் செல்வன்; அவர்கள் இரக்கிறார்கள், நான் கொடுக்கிறேன்; அவர்களுக்குத் தேவை, ஆனால் எனக்கில்லை. அவர்கள் வேண்டும் வேண்டுமென்று உருகுகிறார்கள், நான் இன்பமாய் வாழ்கிறேன்!

மற்றவன் இழந்தால் நான் மகிழ்வதில்லை. வேறொருவன் பெற்றால் நான் வருந்துவதில்லை. உலக ஆசையாகிய அலைகள், என் மனமாகிய படகைத் தத்த

ளிக்கச் செய்ய முடியவே முடியாது. என் நிலை ஒருமைப்பட்டது. நான் ஒருவருக்கும் அஞ்சவேண்டாம், ஒருவரையும் மகிழ்விக்க வேண்டாம். இந்த வாழ்விலே நான் ஆசை வைக்கவில்லை, முடிவுக்கும் அஞ்சவில்லை.

சிலர் காமத்தைத் தங்கள் இன்பமாகக் கருதுகிறார்கள். அவரவர் இஷ்டத்தைக் கொண்டு சிலர் தங்கள் அறிவின் ஆழம் காண்கிறார்கள். தங்கள் ஆஸ்தியை மாத்திரம்தான் சிலர் நம்புகிறார்கள். தோல் போர்த்திய தங்கள் எலும்புக் கூட்டினுள்ளே, சாமர்த்தியங்கள் எல்லாம் ஒருமிக்கச் சேமித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பலர் தம்மை மதிப்பிட்டுக் கொள்கிறார்கள். ஆனால், என் இன்பமெல்லாம் ஒரு அமைதியான மனப்பான்மை கொள்வதில்தான்!

என் உடல் நலமும் மன அமைதியும் தான் என் ஆஸ்தி. என் மனச் சாட்சி என்னைப் பாதுகாக்கிறது. லஞ்சம் அளித்து ஒருவரைத் திருப்தி செய்யவோ, அல்லது மற்றவரை ஏமாற்றி வருத்தவோ நான் விரும்பவில்லை, விரும்பமாட்டேன். இவ்விதமாக நான் வாழ்கிறேன், வாழ்வேன், இப்படியே இறப்பேன். ஆஹா! எல்லோருமே இந்தவிதமாக இருந்து விட்டால்......?

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை :: நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L நெ 61, மெடிகேடட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாயச உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸூம் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறாஸ்.

# சுதாவின் பிறந்தநாள்

"மானஸீகன்"

ஜஸ்டிஸ் ராம்லால் மாலையில் உலாவி விட்டு வீட்டுக்குள் நுழையும்போது, சூரியன் மேற்றிசைக் கடலில் மூழ்கிக் கொண்டிருந்தான். மாலையின் பொன்னிற மான வெளியிலே, காக்கை யினங்கள் அங்குமிங்கும் பறந்துகொண்டு கூட்டை நோக்கிச் சென்றன. தூரத்தில் பசுக்களின் கத்தலையும், சிறுவர்கள் கூச்சலையும் தவிர, அமைதி நிலவியது. கையிலிருந்த 'வாக்கிங் ஸ்டிக்' சுழன்று கொண்டிருக்க, அவர் முகத்தில் மந்தஹாஸம் ததும்பியது. கேட்டருகில் அவர் மனைவி தாரா நின்றுகொண்டிருந்தாள். கணவனும் மனைவியும் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டு, தோட்டத்திற்குள் சென்றனர். இவர்கள் பேச்சை ரஸிப்பதுபோல், அவர்கள் வேட்டைநாய் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு, அவர்கள் முகத்தைப் பார்ப்பதும், சுற்றிச் சுற்றி விளையாடுவதுமாக இருந்தது.

ராம்லால் வாழ்க்கையிலே வெற்றியடைந்தவர் என்றுதான் சொல்லவேண்டும். பாட்னா தலைமை நீதிபதி உத்யோகம் கொஞ்சநாள் முன்புதான் அவருக்குக் கிடைத்தது. ராம்லாலைவிட அதிக நாள் உழைத்தவர்களை யெல்லாம் தள்ளிவிட்டு, அப்பதவி அவருக்குக் கொடுக்கப்பட்டதே அவர் அதிர்ஷ்டம். இப்படியிருந்த அவருக்கு வாழ்க்கையில் ஆசையும், இன்பமும் பிறந்தது ஆச்சர்யமில்லை. இருவரும் அங்கு மகிழ மரத்தடியில் போடப்பட்டிருந்த ஆசனத்தின்மேல் அமர்ந்தனர்.

வாசலில் கார் ஓசை கேட்டது. ஒரு நீல வர்ணக் கார் உள்ளே பிரவேசித்து, 'போர்டிகோவின்' அடியில்போய் நின்றது. காரைத் திறந்துகொண்டு, ஒரு யுவன் இறங்கினான். அவன்தான் ராம்லாலின் ஒரே புதல்வனான சுதாகர்ராய். பாட்னா மெடிகல் காலேஜில் படித்துக்கொண்டிருந்தான். மகனைக் கண்டவுடன் தம்பதிகள் முகங்களில், ஆனந்தமும் உவகையும் ததும்பி யோடின. சுதாகர் வந்த சுருக்கிலேயே ஒரு டென்னிஸ் பாட்டைக் கையிலெடுத்துக்கொண்டு ஓடிவிட்டான்.

"தாரா! நம் சுதாவின் பிறந்தநாள் அடுத்த மாதம் வருகிறதே உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார் லால்.

"மீன் குட்டிக்கு நீஞ்சக் கற்றுக்கொடுக்கிறீர்களே. நான்தான் ரொம்பநாள் முன்னதாகவே அதைப் பார்த்து வைத்து, காலண்டரிலும், சிவப்பு பென்ஸிலால் அடையாளம் போட்டு வைத்துவிட்டேனே. நான் மறந்தாலும் காலண்டர் மறக்காது." என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் தாரா.

"அடேடே. ரொம்ப மிஞ்சிவிட்டாய். நல்லது போ. இப்படிப்பட்ட வழிகளெல்லாம் யார் சொல்லிக்கொடுத்தார்கள்?"

"இருக்கிறது ஒரு பையன் நமக்கு, அவனுக்கு வருகிற பிறந்தநாளைக் கூட ஞாபகம் வைத்துக்கொள்ளாமல் போனால் எதற்குத்தான் பிரயோசனம்?"

"அதிருக்கட்டும் தாரா! இந்தத்தடவை பிறந்தநாளின்போது, ஒரு ஆச்சர்யகரமான வெகுமதி, சுதாகருக்குக் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறேன். உன் எண்ணமென்ன?"

"அவனுக்கும் இருபத்தாறு வயதாகி விட்டது. வைத்தியப் படிப்பும் முடிந்துவிடப் போகின்றது. அவன் படிப்பு முடிந்ததும், வேலை தொடங்குவதற்கு உதவியாக, டிஸ்பென்ஸரி வைத்துக்கொடுத்து விடுங்கள். அதுவே சரியான வெகுமதி யென்று எனக்குத் தோன்றுகிறது."

"அட அசடே, உனக்கு அவ்வளவுதான் தெரியும்." என்று செல்லமாகக் கடிந்து கொண்டார் லால்.

"பின் என்னதான் செய்யப் போகிறீர்களாம்."

"அதுவா! அன்று உனக்குத்தெரியப் படுத்துகிறேன். இப்பொழுது சொன்னால் அதன் மதிப்புப் போய்விடும்" என்று கொஞ்சினார்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையிலேயே நன்கு இருட்டிவிட்டது. எழுந்து பங்களாவை நோக்கிச் சென்றார்கள். போர்டிகோவின் அடியில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். இவர்களைக் கண்டதும் "இதுதானே சுதாகர் ராய் அவர்கள் வீடு?" என்று கேட்டாள்.

"ஆம். என்னம்மா வேண்டும்?" என்று கேட்டார் லால்.

"இந்தக் கடிதத்தை அவரிடம் கொடுக்க வேண்டும். எங்க வீட்டிலிருக்கும் அம்மா கொடுக்கச் சொன்னுங்க."

'அம்மா' என்றதும் லால் புதுமாதிரியாக நடந்துகொண்டார்.

"சரி, அக்கடிதத்தை இப்படிக் கொடு. நான் கொடுத்து விடுகிறேன்" என்று அக்கடிதத்தை வாங்கிக்கொண்டார்.

"தயவு செய்து மறக்காமல் கொடுத்து விடுங்கள்" என்று சொல்லிக்கொண்டே போனுள் அப்பெண்.

"கடிதத்தை இப்படிக் கொடுங்கள்; சுதா வந்தவுடன் கொடுத்து விடுகிறேன்" என்று கையை நீட்டினுள் தாரா.

"அதிருக்கட்டும். அப்பெண் யாரோ அம்மா எழுதியிருப்பதாகச் சொன்னுளே, யார் என்று தெரிய வேண்டாமா? பையன் இப்பொழுதிலிருந்தே காதல் கீதல் புரியத் தொடங்கிவிட்டானே என்னமோ?"

தாராவின் மனதிலும் ஒரு ஊக்கம் பிறந்தது. "சரி அவன் வருவதற்குள் பிரித்துப் பாருங்கள்" என்று ஒத்துக் கொண்டாள்.

மங்கிய ஒளியில் கடிதத்தைப் படித்தார் லால்.

அன்புள்ள சுதாகர் பாபுஜிக்கு,

அம்மா மிகவும் கடுமையான ஜ்வரத்தில் தவிக்கிருள். மறுபடியும் அதே ஜ்வரம்தான். இன்று இரவு கட்டாயம் வந்துபார்த்தால் நல்லது. வீட்டில் சாமான் வாங்க பைசா கூட கையில் கிடையாது. கோஞ்சம் பணமும் கோண்டுவரவும்.

உங்கள் அடிமை
மனே ரமா

புருவத்தை நெறித்து மேலே பார்த்தார் லால். "சரி, நாம் நினைத்தபடியே இது ஏதோ சந்தேகமாகத்தான் இருக்கிறது. பிச்சைக்கார குடும்ப சகவாசம் இவனுக்கு எங்கே கிடைத்தது?" என்று கேட்டுக் கொண்டார்.

தாராவிற்கு ஒன்றும் புரியவில்லை' "சுதா வரட்டும். கண்டிப்பாய்க்கேட்டுவிடுகிறேன். முளையிலேயே வெட்டியெறியாவிட்டால், சங்கடம் வந்துவிடும்"என்ருள்.

சாப்பாட்டிற்காகச் சுதாகர் வருகையை எதிர் பார்த்திருந்தார்கள். அவனும் வந்து சேர்ந்தான், தாரா அவன் கையில் கடிதத்தை "சாயந்திரம் ஏதோ ஒருபெண் இக்கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போயிற்று" என்று கொடுக்கும்போது லால் அவன் முகத்தை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார். சுதா கையெழுத்தைக் கண்டவுடன் ஆவலுடன் அதை வாங்கிக் கொண்டு. பெற்றேர்கள் அருகிலிருப் பதையும் கவனியாது, பிரித்துப் படிப் பதைக்கண்டு இருவரும் ஒருவரையொருவர் கடைக்கண்ணுல் பார்த்துக்கொண்டனர்.

மௌனமாக மூவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். தாராவினுல் தன் மனதிலிருந்ததை அடக்க முடியவில்லை. "ஏண்டா சுதாகர், அந்தப்பெண்ணுடைய சகவாசம் எத்தனை நாளாக?" என்று கேட்டுவிட்டனள்.

சுதாகர் முகம் குபீரென்று சிவந்தது. "ஏனம்மா, பிறருக்கு வந்த கடிதத்தை எப்படி நீங்கள் பிரித்துப் படிக்கலாம். நான் அப்பொழுதே சந்தேகப்பட்டேன், கடிதம் முன்னுலேயே பிரிக்கப்பட்டதை அறிந்தேன். இது மிகவும் கெடுதலான காரியம். பிறருக்கு வந்தகடிதத்தை நீங்கள் எப்படிப் பிரிக்கலாம்?" என்று எரிந்து விழுந்தான்.

"நீ கெட்டுப்போவதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கவேண்டுமா சுதா? அந்தப் பெண் யாரோ, "அம்மா கொடுக்கச் சொன்னுங்க' என்று சொல்லிற்று. நான் தான் அப்பாவைக் கடிதத்தைப் பிரித்துப் படிக்கச் சொன்னேன். ஏதாவது கேடு கெட்டபெண்ணுடன் சகவாசம் வைத்துக் கொண்டால் நமக்குத் தானே அவமானம்" என்ருள்.

சுதாகர் சொன்னுன்; "பணமில்லாவிட் டால் மனிதர்களைக் குப்பையில் தள்ளிவிடு கிறதா என்ன? உண்மையை நான் மறைக்க விரும்பவில்லை. இச்சங்கதியை இன்னும் சின் ுள் கழித்து உங்களிடம் சொல்லலாமென் றிருந்தேன். இப்போது நேர்ந்துவிட்டது. அந்தப்பெண்ணை அகஸ்மாத்தாக ஒருநாள் ஆஸ்பத்திரியில் சந்தித்தேன். நான் மற்ற மாணவர்களுடன், ஆஸ்பத்திரியில் நோயாளிகளைப் பார்வையிட்டு வரும்போது: இவள் தன்தாயை அட்மிட் செய்திருந்தாள். ஏழையென்பதினுல், ஆஸ்பத்திரி டாக் டர்கள் அவளை உதாசீனம் செய்தனர். நான் அவளுடைய உதவிக்குச் சென்றேன். அன்றுமுதல் அவள் என்மனதில் உயர்ந்த

ஸ்தானம் பெற்றிருக்கிறாள். பணமில்லையே தவிர, பெண்மைக்குரிய மற்ற எல்லா அம்சங்களும் அவளிடம் நிறைந்து இருக்கின்றன. இப்படியிருக்கையில் என்னிடம் என்ன தவறு கண்டீர்கள்?''

''ஏண்டா சிறு பையனைப்போல் பேசுகிறாயே! பெண்கள் சிநேகம் கடைசியில் காதலில் போய் நிற்குமே. நீ போய் ஒரு பிச்சைக்காரப் பெண்ணுடன் நட்பு வைத்துக் கொண்டாயே?''

''அம்மா, அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். என் மனதிலிருப்பதை உன்னால் அறிய முடியுமா?, என்ன?'' என்று சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டான். சாப்பிட்டவுடன் மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டு மோட்டார் ஸைகிளில் போய்விட்டான்.

தாராவின் மனதில் புகைச்சல் கிளம்பி விட்டது. தன் மகன் தன் எண்ணத்திலிருந்து திரும்ப மாட்டான் என்பதை அவள் நன்கு அறிந்திருந்தாள். பணக்காரக் குடும்பத்திலேயே உழன்று வந்த அவளுக்கு ஒரு ஏழைப் பெண் மருமகளாக வருவது எள்ளளவேனும் பிடிக்கவில்லை. ராம் லாலுக்கு, இவ்விஷயத்தில் இஷ்டமில்லையேனும், தன் மகனைக் கண்டிக்கவில்லை. எதற்கும் அப்பெண்ணைப் பார்த்து விட்டுவர வேண்டுமென்று நினைத்தார்.

சுதாகர் அதற்கு உடனேயே ஒத்துக் கொண்டான். ஒருநாள் இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள் மனோரமா வீட்டிற்கு. கார் ஒரு சந்து அருகில் போய்நின்றது. காரை யோட்டி வந்த சுதாகர் தன் தந்தையின் முகமாறுதலை ஆவலுடன் கவனித்து வந்தான். இருவரும் இறங்கி, சந்தின் வழியே நடந்து ஒரு மாடி வீட்டில் நுழைந்தார்கள். ராம்லால் சுற்றிலுமுள்ள குப்பையையும் அழுக்கையும் கண்டு, கைக்குட்டையை மூக்கில் அடைத்துக் கொண்டு விட்டார். மாடிப்படி யேறியதும் சுதாகர் கதவைத் தட்டினான். ஒருயுவதி வந்து கதவைத் திறந்தாள். சுதாகரைக் கண்டு மலர்ந்த அவள் முகம், ராம்லாலைக் கண்டவுடன் ஆச்சர்யம் அடைந்தது.

சுதாகர் ''மனு! இவர்தான் என்தந்தை ராம்லால்'' என்று அறிமுகப் படுத்த, அவள் லாலை வணங்கினாள். லால் பதிலுக்கு மிகவும் அசட்டையாக ஒரு கும்பிடு போட்டார்.

கொஞ்சநேரம் அமைதி நிலவியது. லால் கூர்ந்த பார்வையுடன், மனோரமாவைப் பரிசீலனை செய்து கொண்டிருந்தார். அவள் மிகவும் லஜ்ஜையுடன், அடிக்கடி சுதாகரைப் பார்ப்பதும், தலை குனிவதுமாக இருந்தாள்.

''உன்னை இன்று கண்டது மிகவும் சந்தோஷம். நீ எதுவரைக்கும் படித்திருக்கிறாய்?'' என்று கேட்டார் லால்.

''பீ. ஏ.'' என்று அவள் பதில் சொன்னதும், அவருக்குத் தூக்கிவாரிப் போட்டதை முகம் காட்டியது. சுதாகர் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.

''ஓஹோ பீ.ஏயா, எனக் கென்னமோ பெண்கள் அதிகம் படிப்பதில் நம்பிக்கையில்லை'' என்று முகவாய்க் கட்டையைத் தடவிக் கொண்டார்.

''ஆமாம். நான் கூட ஒத்துக் கொள்கிறேன். ஆனால் என் தாயும் நானும் ஜீவனம் நடத்தவே பீ. ஏ. வரைக்கும் படித்தேன்.''

''உன் தந்தை இறந்து விட்டாரோ?'' என்று கேட்டார் லால்.

''இல்லை. உயிருடன் தான் இருக்கிறார். ஆனால் எங்கள் துரதிருஷ்டவசமாக, அவர் தியவழியில் இறங்கி, பணத்தைச் செலவழித்து, குடும்பத்தை நடத்தாமல் விட்டு விட்டார். ஏதோ கடவுளருளால், நானும் படிப்பை முடித்து விட்டேன், குடும்பம் நடத்தி வருகிறோம்'' என்று புன்சிரிப்புடன் பதிலுரைத்தாள்.

தந்தை முகத்தைக் கவனித்துக் கொண்டு வந்த சுதாகர் அவர் முகம் நிமிஷத்திற்கு நிமிஷம் விகாரமாகி வருவதைக் கண்டான். மனோரமாவின் தந்தை கெட்டுப் போனவன் என்று சொன்னவுடன், அதை அவர் நிச்சயமாய் ரஸிக்கவில்லை என்று தெரிந்தது.

''உன் தந்தை பெயரென்ன?'' என்று கேட்டார் லால்.

''துர்காலால் நந்தராம்''

''யாரது! துர்காலால் நந்தராமா? பெங்கால் பாங்கின் காஷியர் நந்தராமா?''

''ஆம் அவரேதான்'' என்று மனோரமா சொல்லி முடிப்பதற்கும் மனோரமாவின் தாய் இருவருக்கும் டீ கொண்டுவருவதற்கும் சரியாக இருந்தது. அப்பொழுது ஓர் ஆச்சர்யகரமான சம்பவம் நிகழ்ந்தது. மனோரமாவின், தாய் டீ கொண்டுவந்தவள், சட்டென்று ராம்லாலை உற்று நோக்கினாள். அவள் முகத்தில் பல எண்ண அலைகள் ஓடி

# எவ்விதமான வேலைக்கும் ஈடுகொடுக்கக் கூடியவை



கட்டிட வேலையிலோ, சுரங்கத்திலோ ரயில் பாதைகளைச் செப்பனிடவோ, எவ்வித வேலைக்கும் சுளகுப் பாரை ஈடு கொடுக்கவேண்டும்.

பிரத்தியேகமான முறையில் உயர்ந்த இரும்பிலிருந்து உண்டு பண்ணப்பட்ட எங்கள் சுளகுப் பாரைகள் எத்தகைய கடுமையான வேலையிலும் நன்கு உழைக்கக்கூடியவை.

வெஸ்டுகோஸ்டு, நார்த்தர்ன் சர்க்கார்நீங்கலாக சென்னை மாகாணத்திற்கு வினியோகஸ்தர்கள்:-

**மெஸர்ஸ் V. கனகய்ய செட்டி & கோ.**
195, நைனியப்பநாயக்கன் தெரு,
ஜி. டி. மதராஸ்.

**மெஸர்ஸ் D. B. மதன் & கோ.**
39, லிங்கின்லேன் பீச்சு,
ஜி. டி. மதராஸ்.

## டாடா அக்ரிகோ

கருவிகளையே வாங்குங்கள்

**தி டாடா அயர்ண் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்**

மறைந்தன. ஒரு கணத்தில் 'ஆ' வென் றலறிக் கீழே விழுந்துவிட்டாள். இதை எதிர்பார்த்தவர்போல் ராம்லாலும், சட்டென்று எழுந்து, "சுதாகர், வா போகலாம்" என்று கூறிக்கொண்டே மாடிப்படி இறங்கலானார். மனோரமா தன் தாயின் உதவிக்கு ஓடினாள். இவ்விதமான அசம்பாவித சம்பவங்களைக் கண்டு திகைத்து, சுதாகர் கைகளைப் பிசைந்துகொண்டு நின்றான். பிறகு மனோரமாவுடன் சேர்ந்து, அவள் தாய் நினைவிற்கு வருவதற்கு உதவி செய்தான். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு தான் அவன் தந்தை அவசரமாய் வெளியே போனது நினைவிற்கு வந்தது. "மனு! நான் போய்விட்டு அப்புறம் வருகிறேன்" என்று கிளம்பினான்.

வழி யெல்லாம் அவன் மனது பற்பல விதமாக எண்ணமிட்டுக் கொண்டு சென்றது. அவன் தந்தை அவ்வளவு அவசரமாய் எழுந்து சென்றது ஏதோ நல்லதற்கல்ல என்று அவன் மனம் கூறியது. அவர் அவ்வளவு திடுதிப்பென்று எழுந்து சென்றதிலிருந்து அவர் சம்மதம் பெறவில்லை யென்று நினைத்தான். அவன் வீட்டை யடைந்தபோது, அவன் தந்தை வராண்டாவில் உலாவிக்கொண்டிருந்தார். அருகில் அவன் தாய் அமர்ந்திருந்தாள். இருவர் முகத்திலும் ஒருவிதமான கவலை குடிகொண்டிருப்பது கண்டு, சுதாகர் திகிலடைந்தான். மௌனமாய் அருகில் ஒரு நாற்காலியில்போய் அமர்ந்தான். குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண்டிருந்தார் ராம்லால். அவர் பேசவில்லை.

தாரா பேச்சைத் தொடங்கினாள். "சுதா, உன் அப்பாவிற்கு அந்தப் பெண் சம்பந்தம் பிடிக்கவில்லையாம்; அதை விட்டுவிட்டால் நல்லது" என்று கூறிக்கொண்டே அவனருகில் வந்தாள்.

"ஏனம்மா! அவளிடம் பணமில்லையென்று ஒத்துக்கொள்ளவில்லையா?" என்று கேட்டான் ஆச்சர்யத்துடன்.

"பணம் மட்டுமில்லை. குலமும் கெட்ட குலமாம். அவள் தந்தை துர்காலால் நந்தராம் பெரிய குடியனாம். பெங்கால் பாங்கில் பத்தாயிரம் ரூபாய் களவாடிவிட்டு இப்போது அவன்மேல் கேஸ் நடக்கிறதாம். அந்தப் பெண்ணின் தாயாரும் ஒரு மோசமான குடும்பத்தில் பிறந்தவளாம், அவளுடைய தகப்பனும் ஒரு பெரிய குடியனாம். இப்படிப்பட்ட வரலாறுடைய அந்தப் பெண்ணின் குணம் எப்படியிருக்கும் நீதான் சொல்லேன். போதும் போதும் அப்பா. பிச்சைக்காரர்களுடைய சம்பந்தம் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். திருடர்களுடைய சம்பந்தம் என்னத்திற்கு? நீயே சொல்"

"என்னம்மா அவள் தந்தையின் நடத்தைக்கு அவள் என்ன செய்யமுடியும்? சேற்றில் தாமரை முளைக்கவில்லையா? ஈன குலத்தில் பிறப்பதும், பிறக்காததும் நம்கையில் இல்லை. அவள் அந்தத் திருடர்கள் வம்சத்தில் பிறந்தது பற்றி நீ சந்தேகமே படவேண்டாம். அவள் எண்ணத்திலும் குணத்திலும் எல்லோரையும் விட உயர்ந்தவள்." என்று வாதாடினான்.

"அடே சுதாகர், வேண்டாம் நான் சொல்வதைக் கேள். அவள் அம்மாவைக் கூட அவள் அப்பாவிற்குத் தெரியுமாம். அவள் மிகவும் மோசமான குடும்பத்தில் பிறந்தவளாம். இவர்களுடன் உறவு வைத்துக் கொண்டு நம் குடும்பத்திற்கு அவமானம் கொண்டுவரப் பார்க்கிறாயா?"

"அம்மா, திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறாயே. என் மனதில் அவள் உயர்ந்த ஸ்தானம் பெற்றுவிட்டாள். மணந்தால் அவளைத்தான் மணக்கப் போகிறேன்" என்று கூறும் போது என்றுமில்லாத தைரியமும் உறுதியும் அவன் குரலில் தொனித்தன.

ராம்லால் கோபத்துடன் திரும்பினார். "நீ இந்த வீட்டிலிருக்கும் வரை அவர்களைப் பற்றி நினைக்கக்கூடாது. என் மதிப்பிற்கும் அந்தஸ்திற்கும் அது மிகவும் குறைவு. நான் யாரைத் தண்டிக்கப் போகிறேனோ, அந்த நந்தராமின் மகளையே, என் வீட்டில் வரவேற்கச் சொல்கிறாய். அது முடியாத காரியம். யாருக்கும் மணக்கும் விஷயத்தில் சுதந்திரம் இருக்க வேண்டியதுதான். ஆனால் சமூகத்தின் கோடரிக் காம்பான திருடர்களின் வம்சத்தினரை, என் உறவினரென்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. நீ எனக்குப் பிள்ளையென்றிருந்தால் என் தீர்மானத்தை ஏற்றுக் கொள்" என்று மில்லாத படபடப்புடன் பேசி முடித்தார்.

அவரது கோபமான பயமுறுத்தல் சுதாகரின் மனதில் பயத்தைக் கிளப்புவதாகத் தோன்றவில்லை. அவன் மட்டில் சாந்தமாகக் கூரையைப் பார்த்துக் கொண்டே "நான் ஒரு தரம் செய்த தீர்மானத்தை மாற்ற மாட்டேன். மணந்தால் அவளையே தான் என் வாழ்க்கைத் துணைவியாய் ஏற்கப் போகிறேன். அப்படி அவ்விதமான காரியம் செய்தால் உங்களுக்கு ஒரு

விதமான மானபங்கமும் வராமல் செய்கிறேன். பெற்ற உங்களுக்குச் செய்ந்நன்றி மறக்கமாட்டேன். எப்படியிருந்தாலும், உங்கள் ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு, நான் அவளை மணந்தால் என்னைப் போல் பாக்கியசாலி யாரும் இருக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்து போய்விட்டான்.

நாட்கள் கழிந்தன. சுதாகர் மிகவும் மௌனமாக வீட்டில் நடமாடி வந்தான். நந்தராமின் கேஸ், ஸெஷன்ஸ் கேஸாகி ராம்லாலிடம் தீர்ப்பளிக்க வந்தது. சுதாகர் ஒரு சமயம் அவனை விடுவிக்க வேண்டுமென்று தந்தையைக் கேட்டுக் கொண்டான். அவர் அவனிடம் சரியாகவே முகம் கொடுத்துப் பேசவில்லை. இவ் விஷயங்களிலெல்லாம் அவன் தலையிடக் கூடாதென்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார். வீட்டின் கூடத்தில் மாட்டியிருந்த காலண்டரில் சுதாவின் பிறந்த நாள் அழுந்தத் திருத்தமாய், சிவப்புப் பென்ஸிலால் குறிக்கப் பட்டிருந்தது. ஆனால் அதை இப்போது யாரும் கவனிப்பதாகத் தோன்றவில்லை.

அவன் பிறந்த நாளைக்கு நான்கு நாளைக்கு முன்பு நந்தராமின் கேஸ் ஹைகோர்ட்டில் வந்தது. பாட்னாவிலேயே மிகவும் பிரசித்தமான கேஸானதால், கோர்ட்டில் கூட்டம் அதிகமாக இருந்தது. அன்று ராம்லால், தாம் பலநாளாக மனதில் தேக்கி வைத்திருந்த க்ஷாத்திரத்தையும், கோபத்தையும் காட்டி விட்டார். என்றைக்கும் கடுந்தண்டனை யளித்திராத ராம்லால் அன்றைக்கு நந்தராமுக்குப் பத்து வருஷ கடுங்காவல் விதித்தார். பாட்னாவே ஆச்சர்யத்தால் வாயைப் பிளந்தது.

மிகவும் சந்தோஷமாய் எதிர்பார்க்கப் பட்டஅந்தப் பிறந்த நாள் அவன் வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவங்களைப் போல், புயலுடனும், மழையுடனும் உதயமாயிற்று. பாட்னாவே சூறாவளியில் சிக்குண்டு அலறியது. இரண்டுநாளாக, சுதாகர் வீட்டிற்கு வரவில்லை. தாரா, பயந்துபோய் அழுது கொண்டிருந்தாள். ராம்லால் எவ்வளவு சமாதானம் செய்தும் அவள் அடங்குவதாயில்லை. சுதா பிறந்தநாளுக்காக அவள் செய்து வைத்திருந்த ஒவ்வொரு அலங்காரத்தைக் காணும் போதும், அவள் மனம் இன்னும் சங்கடப்பட்டது. நாளெல்லாம் அழுகையில் கழித்தாள். ராம்லால் தம் அறையைவிட்டு வெளியே வரவில்லை. அங்கேயே அடைபட்டுக் கிடந்தார்.

பொழுது சாய்ந்தும் புயல் அடங்கவில்லை. இன்னும் ஜாஸ்தியாயிற்று. மரங்களும், தோப்புக்களும், பேய் போல் ஆடிக் கொண்டு சூறாவளி அடித்துக் கொண்டிருந்தது. வானத்தில் குமுறிய மேகங்களைப் போல் தாராவின் மனமும் குமுறிக் கொண்டிருந்தது. மகனுடைய பிடிவாதத்திற்கும், கணவனின் பிடிவாதத்திற்கும் அவளால் ஈடுகொடுக்க முடியவில்லை. மகன் வருவான் வருவானென்று எதிர்பார்த்துக் கிடந்தாள், 'கேட்டை'த் திறக்கும் ஓசை கேட்டவுடன், வாசலுக்கு எழுந்து ஓடினாள். அவள் நினைத்தபடியே சுதாகர் உள்ளே வந்து கொண்டிருந்தான். அவன் பின்னால் மனோரமா வந்து கொண்டிருந்தாள். இரண்டு நாளில் அவன் முகம் எவ்வளவு மாறிப் போய்விட்டது? களைப்பும், கவலையும் குடிகொண்டு, அவனை வேறு ஆளாக மாற்றி விட்டது.

மௌனமாகக் கதவைத்திறந்தாள். சுதாகர் உள்ளே தலையை நீட்டி ''தந்தை எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டான். இதற்குள் சந்தடிகேட்டு ராம்லாலே, ஹாலுக்கு வந்தார். தாரா, இத்தனை கஷ்டத்திற்கும் காரணமாயிருந்த மனோரமாவை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். விவரிக்க இயலாத துக்கம் குடிகொண்டிருந்த அவள் முகத்தில், பெருந்தன்மையும் கம்பீரமும் குடி கொண்டிருப்பது நன்கு புலப்பட்டது. ''சே! இவளா திருட்டு வம்சத்தில் பிறந்தவள்?'' என்று எண்ணினாள் தாரா.

சுதாகர் தந்தையை நோக்கி ''தந்தையே உங்கள் கொடிய தண்டனையைக்கண்டு அவமானம் பொறுக்க முடியாமல், இவள் தாய் தற்கொலை புரிந்து கொண்டு விட்டாள். அவள் சாகும்போது என்னிடம் ஒரு அரிய உண்மையை ஒப்படைத்துச் சென்றிருக்கிறாள். அன்று நீங்கள் இவள் தாயை மணப்பதாகக் கூறிவிட்டு, சமூகத்திற்குப் பயந்து கொண்டு, வாக்குத்தவறிவிட்டீர்கள். உங்கள் தவறின் பலனெல்லாம் அப்பேதை தலையில் போய் விழுந்தது. அதை அவள் பொறுமையுடன் அனுபவித்திருக்கிறாள். அந்தப் பாபத்தை தீர்க்கும் பொருட்டாவது; இவள் வாழ்க்கையைக் கெடுக்க நான் துணியவில்லை. என்ன சொல்கிறீர்கள்........? எங்களை உங்கள் மகனாகவும், மருமகளாகவும் ஏற்றுக்கொள்ள முடியுமானால் ஏற்றுக் கொள்ளுங்கள். அது உங்கள் அந்தஸ்திற்குக் குறைவென்று பட்டால், எங்களுக்கு ஆசிகூறுங்கள். நாங்கள் உலகின் எம்மூலையிலாவது

எங்கள் வாழ்க்கையை நடத்துகிறோம்'' என்று கூறினான்.

தாரா 'ஹோ' வென்று அழுதுவிட்டாள். ராம்லால் வெகுவிறைப்பாய் ஹாலில் நின்றுகொண்டிருந்தார். சுதாகர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அவர் மனக்கண் முன் பல காட்சிகளைப் படம் பிடித்தன.

அவர் சிறுவயதில் புதிதாய் வக்கீல் தொழில் ஆரம்பிக்கும் போது, மனோரமாவின் தாத்தா அதாவது அவன் தாய் சுந்தரியின் தந்தை ஒரு கேஸில் அகப்பட்டுக் கொண்டார். அனாதையான சுந்தரியின் கதியைக்கண்டு மனதிரங்கி, இலவசமாக அவர் கேஸை வாதாடி ஜயித்துக் கொடுத்தார். அப்போது அவருக்கும், சுந்தரிக்கும் ஏற்பட்ட நட்பு மணத்தில் முடிய இருந்தது. அப்போதுதான் ராம்லால், அந்தஸ்திற்குப் பயந்து கொண்டு, அவளைக் கைவிட்டு விட்டுப் போய்விட்டார். அவள் வாழ்க்கையைக் குலைத்த குற்றம் அவர் நெஞ்சில் இருந்தது. இன்று சுதாகர் விடுத்த ஒவ்வொரு சொல்லும் கூறிய அம்பைப்போல் அதைக் கிளறியது.

அவர் அகக்கண் திறந்தது. ''உண்மையில் நீ பேடிதான். நம்பிக்கைத் துரோகம் செய்தவன்'' என்று அவர் உள்ளம் கூறியது. ஒருகணத்தில் தம் நிலைமையை உணர்ந்து கொண்டார். இச்சங்கதி மட்டும் தாராவிற்குத் தெரிந்தால்? ஐயோ! அந்த ஜன்மத்தில் அவளெதிரில் தலைதூக்கி நடக்க முடியாது. ராம்லாலின் பிடிவாதம் தளர்ந்து இடிந்து கீழே விழுந்தது.

'சுதாகர் இப்படிவா' என்று அழைத்தார். ரகசியமாய் அவர்கள் கொஞ்சம் பேசிக் கொண்டார்கள். தாரா ஆச்சரியத்துடன் அவர்கள் முகத்தை நோக்கிக் கொண்டிருந்தாள்.

தந்தையும் மகனும் வாயிலருகில் வந்தார்கள். குளிரில் ஒரு மூலையில் நடுங்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தாள் மனோரமா. அவள் மனதில் எழுந்த புயலை யாரும் அறிந்திலர். தன் ஏழ்மையையும் தன் தந்தையின் கெட்ட நடத்தையையும் கண்டு, சுதாவின் பெற்றோர்கள் மணத்திற் கிசையவில்லையென்பதை அவள் அறிவாள். அவள் மனதில் எவ்வளவு தூய எண்ணங்




Agent for Tanjore Dt.

K. ராகவேந்திர ராவ்,

சந்திர விலாஸ்,

கும்பகோணம்.

கள் இருந்தாலும் என்ன பிரயோஜனம்? அவள் பெற்றோர்கள் தவறி நடந்தால். அவளையும் அப்படி நினைப்பது தானே உலகத்தின் இயற்கை? சுதாகர் மட்டும், பெற்றோர்கள் கட்டளைக்குப் பணிந்து விட்டால்? ஐயோ அதை அவளால் நினைக்கமுடியவில்லை. வெட்ட வெளியில் புயலில் சிக்குண்டு பாதுகாப்பின்றி அலைந்தசையும் மரங்களைப் போல் உலகின் ஏசலுக்கும், இகழ்ச்சிக்கும் ஆளாகி, அவள் துடிக்க நேரிடும். அவள் அன்புக்கு ஆதரவாயிருந்த தாய் ஒருகணத்தில் மறைந்து போனது அவள் மனதில் ஒரு பேரிடியைத் தூக்கிவைத்து விட்டது.

ராம் லால் அவளருகில் வந்தார். ''அம்மா என் வீட்டிற்குள் வா. வீட்டின் மருமகள் ஸ்தானத்தை இன்னும் சிலதினங்களில் ஏற்றுக்கொள்வாய்'' என்று அன்புடன் தலையைத் தடவிக் கொடுத்தார். பிறகு மறைவாக அவளை அழைத்துக் கொண்டு போய், மண்டியிட்டு "அம்மா, உன் தாய்க்கு ஜன்மத்திலும் தீராத துரோகம் செய்து விட்டேன். என் கோழைத்தனம் உங்கள் வாழ்க்கையைக் கெடுத்து விட்டதை இன்று தான் உணர்ந்தேன். சென்றதை மறந்து என்னை மன்னித்துவிடு'' என்று கூறினார். மனோரமா ஒன்றும் தோன்றாது அழுது விட்டாள்.

சுதாவும் மனுவும், தாராவின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். பெற்ற உள்ளத்தில் உவகை புரண்டோடியது. "அப்பா, கண்மணி! இன்றுதான் எங்கள் அகக் கண்ணைத் திறந்து வைத்தாய். நீங்களிருவரும் நன்றாய் வாழ்ந்தால், அதுவே என் வாழ்க்கை சாபல்யமாகும்'' என்று ஆசீர்வாதம் செய்தாள்.

சுதாகர், ''அம்மா, மனுவின் தந்தை ஒரு குடிகாரன்தான். அவன் பாட்டனும் ஒரு கொலையாளிதான். ஆனால் இவள் மட்டும் குப்பையில் கிடைத்த மாணிக்கம். ஈன குலத்தில் பிறப்பதும், பிறக்காததும் நம் கையில் இல்லை. அவ்விதம் பிறந்தும் தங்கள், செய்கையிலும் நடத்தையிலும், உயர்ந்தவர்களாயிருப்பின், உலகம் அவர்களை வரவேற்கத் தவறினால், அதைப்போல் பெரிய பாபம் இந்த உலகில் ஒன்றுமில்லை. அவ்விதமான பாவத்திலிருந்து நாம் இப்பொழுது மீட்கப் பட்டிருக்கிறோம். இது நமக்கு ஒரு நன்னாள் என்றிருக்கட்டும்.'' என்று உணர்ச்சி பெருகக் கூறினான்.

இவன் சொல்வதை ஆமோதிப்பதைப் போல் வானத்தில் பெருத்த இடியொன்று இடித்தது. குழுமியிருந்த மேகங்களெல்லாம் விரைவில் விலகின. மறைந்துகிடந்த சந்திரன் திடீரென்று வெளியில் தோன்றி அந்தகாரத்தைப் போக்கினான். ராம்லால் வீட்டில் நிலவிய புயலும், அந்தகாரமும் கூடவே விலகின.

நன்னாள் என்றவுடன் தாரா சட்டென்று கூடத்தில் மாட்டப்பட்டிருந்த காலண்டரை நோக்கினாள். சிவப்புப் பென்ஸிலால் அழுத்திக் குறிக்கப்பட்டிருந்தது அந்தத் தினம்.

சுதாவின் பிறந்தநாள் வரும்போதெல்லாம், தாரா ராம்லாலை நோக்கி, "சுதாவின் பிறந்த நாளின்போது, அருமையான வெகுமதி ஒன்று கொடுக்கப் போவதாகச் சொன்னீர்களே! அது என்ன? இப்போதாவது சொல்லக் கூடாதா?'' என்று கேட்டார், ராம்லால்,

''ஆனால் இவை யெல்லாம் என்ன பிரயோசனம்? சுதாதான் வாழ்க்கைக்குப் பெரிதும் உதவியாயிருக்கும் ஓர் ஒப்பற்ற வெகுமதியைக் கொண்டுவந்து விட்டானே'' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே, விஷமமாக மனுவைப் பார்ப்பார். அவள் முகம் நாணத்தால் சிவக்கும்.

சுதாவின் பிறந்தநாள் அவர்கள் வாழ்க்கையிலேயே, ஒரு பெரிய திருநாளாகத் திகழ்ந்தது!

# அரண்மனைப் பாலம்

**எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்**

வானவில் போல் வளைந்திருந்த அந்தப் பாலத்தைச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பார்வை யிடுகின்றனர் என்று கேள்விப்பட்டு, கிராமத்து ஜனங்கள் கூடிவிட்டனர். வந்திருந்த சர்க்கார் என்ஜினியர்கள் பலவித பரீக்ஷைகள் செய்தனர். பிறகு அவர்களுக்குள் கீழ்க்கண்ட சம்பாஷணை நடந்தது:

"இந்தப் பாலத்தை இடித்துத் தள்ள வேண்டுமென்று ரிடையராகிவந்திருக்கும் பாலகிருஷ்ணநாயுடு ஏன் பிரயாசை எடுத்துக்கொள்ள வெண்டும்? அவர் சொல்லுவதுபோல் பாலம் ஆபத்தான நிலையில் தான் இருக்கிறது. எந்த நிமிஷமும் இடிந்து விழலாம். கிராமத்து ஜனங்கள் இதை "அரண்மனைப் பாலம்" என்று அழைக்கிறார்கள். இதைப் பற்றிய கதை ஒன்றும் இவர்கள் மத்தியில் நிலவி வருகிறது. இந்தப் பாலத்தை இடிப்பதை இவர்கள் எதிர்த்தாலும் எதிர்க்கலாம்"

வந்திருந்தவர்களில் மற்றொருவர் இதைக் கேட்டுவிட்டுப் புன்சிரிப்புச் சிரித்தார். சகாக்கள் இதன் அர்த்தம் புரியாமல் கேள்வி கேட்கும் பாவனையில் புருவத்தைத் தூக்கி முகத்தைச் சுளித்துக் கொண்டனர். பதில் சொல்லாமல் முதல்வர் சில தப்படிகள் பாலத்தை நோக்கி நடந்து, ஒரு கல்வெட்டைச் சுட்டிக் காட்டிவிட்டு "இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்" என்று கேட்டார்.

சில நிமிஷங்கள் எல்லோரும் அந்தக் கல்வெட்டைப் பரிசோதனை செய்வதிலேயே ஈடுபட்டனர். ஒரு பெரிய சர்ச்சைக்குப் பிறகு அந்தக் கல்வெட்டைப் பற்றி ஒன்றும் அறிந்து கொள்ள முடியாததை அவர்கள் முகம் காட்டியது. சிறிது நேரம் எல்லோரும் மௌனம் சாதித்தனர். எல்லோரும் முதலில் சர்ச்சையைக் கிளப்பிவிட்டவர் ஏதாவது சொல்லக்கூடும் என்று அவரையே கவனித்தனர்.

அவரும் மற்றவர்களை வெகுநேரம் இந்த நிலையில் வைக்கவில்லை. "இந்தப் பாலம் சரித்திர சம்பந்தமான ஒரு சின்னம். இதைப்போன்ற முக்கியமான பல சின்னங்கள் ஏற்கனவேயே ஜனங்களின் அறியாமையால் வீழ்த்தப்பட்டிருக்கின்றன. இதைப் பற்றிய வரலாறு அநேகம் இருக்கின்றன... இதைப்பற்றிப் பேசிப் பயன் என்ன? நாம் வந்த காரியத்தைச் செய்துவிட்டுப் போவோம். இதைப் பரிசோதனை செய்துவிட்டு, இடிக்க வேண்டியது அவசியமா என்று சர்க்கார் யாதாஸ்து சமர்ப்பிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மட்டில் நம்ம காரியத்தை முடித்துக்கொள்வோம்." என்று சொல்லிவிட்டு ஒரு பெருமூச்சு விட்டார்.

ஆனால் இந்தப் பாலத்தை இடிக்காமல் விட்டுவைக்க வேண்டியதற்குள்ள மற்றொரு காரணம் அங்கே கூடியிருந்த ஒருவருக்கும் தெரியாது.

* * *

சரித்திர ஆராய்ச்சி நிலையம்
புவனேச்வர்
6—5—'39

பிரியமுள்ள சேகர்,

ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி இந்தக் கடிதம் எழுதுவதால், எப்பொழுதும்போல் குசலோபரியுடன் ஆரம்பிக்கவில்லை. எப்பொழுதும் என்மனதில் ஊன்றிக்கிடக்கும் "அரண்மனைப் பாலத்தைப் பற்றி" சொல்வதற்கு முன் சீதாவைப் பற்றிய பூராவிவரமும் நீ கேட்டபடி எழுதிவிடுகிறேன். நான் முதன் முதலில் சீதாவைச் சந்தித்தது பாஸ்கரபுரத்தில் அந்தப் பாலத்தின் அடியில்தான். அந்தப் பாலத்தைப்பற்றிய சரித்திர பூர்வமான ஆராய்ச்சியில் நான் ஈடுபட்டிருப்பது உனக்குத் தெரியும். முக்கியமான சில விஷயங்களைச் சேகரிப்பதற்காக நான் அந்தத் தடவை போயிருந்தேன். பாலத்தில் இரண்டொரு கல் வெட்டுகள் பாசியால் மூடப்பட்டு மறைந்திருந்ததை முன் பல தடவைகள் நான் விஜயம் செய்திருந்த போது பார்க்கவில்லை. பாசியைச் சுரண்டிவிட்டு உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்தேன். பின்னால் ஒரு குரல் என்னைக் கூப்பிடுவதைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினேன்.

"இந்தக் கல்வெட்டில் இருக்கும் விஷயங்கள் அவ்வளவாக உபயோகமாக இருக்குமென்று நான் நினைக்கவில்லை" என்று நிதானமாகச் சொன்னார் என் பின்னால் நின்ற வயோதிகர். சற்றுப் பொறுத்து, "நான் இரண்டு முறை உங்களைக் கூப்பிட்டேன், காதில் விழவில்லை போல் இருக்கிறது. இந்தப் பாலத்தின்

உட்புறத்துவளேவில் விசித்ரமான சில சித்திரங்கள் வரையப் பட்டிருக்கின்றன. அவைகளே ஆராய்ந்து பார்த்தால் உப யோகமாக இருக்குமென்று சீதா அபிப் ராயப்படுகிருள். நீங்களும் பார்க்கலாமே'' என்று சொல்லிவிட்டுப் பக்கத்தில் இருந்த ஒரு இளம் நங்கையைப் பார்த்தார்.

அந்தப்பெண் சீதாவைப்பற்றி வர்ணித் தால் கட்டுக் கதையென்று நீ நம்பமாட் டாய். நான் எவ்வளவோ அழகான பெண்களேப் பார்த்திருக்கிறேன். சீதாவின் அழகுள்ள, குறுகுறுத்தமுகம் என் இருத யத்தில் ஒரு தனிக் கொந்தளிப்பை உண்டு பண்ணியது. அன்று பாஸ்கரபுரத்தில் இயற்கையன்னே தனிப் பெருமிதத்துடன் விளங்கினுள். காற்றில் அன்புக்கீதம் மிதந்து வந்து கொண்டிருந்தது. மனதில் சாந்தி யிருந்தது. இதன் மத்தியில் திடீரென்று இவ்வளவு மென்மையான உருவத்தைப் பார்த்ததும், என் இதயத்திலும் ஏதோ இரகசியமாக ஒளிந்து கிடந்த ஒருகம்பீர நாதம் கிளம்பி ரீங்காரம் செய்தது.

வயோதிகர் சைகை செய்ததும் சீதாமுன் நோக்கி நடந்தாள். நாங்கள் இருவரும் பின் தொடர்ந்தோம். அந்தச் சித்திரங்களே நன்ருகப் பரிசோதனே செய்த பிறகு, முக்கியமான பலவிபரங்கள் அதிலிருந்து கிடைக்கும் என்று எனக்கும் தோன்றியது. சீதாவுடனே அல்லது அந்த வயோதி கருடனே அன்று மறுபடியும் பேசுவதற் குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லே. அவர்கள் தங்கள் காரியத்தில் ஈடுபட்டனர். நானும் பல குறிப்புக்கள் எழுதிக்கொண்டு புறப் பட்டுவிட்டேன். என் இருதயத்தில் மீட் டப்பட்ட தந்திமாத்திரம் ஓயாமல் ஒரு இனிய நாதத்தால் என் உள்ளத்தை நிரப்பிக் கொண்டிருந்தது.

இந்த ஆராய்ச்சியில் வெகு தீவிரமாக நான் ஈடுபட்டேன். சரித்திர புஸ்த கங்கள், ஓலேச் சுவடிகள், தடயங்கள் இவைகளே எங்கெங்கெல்லாமோ சென்று படித்தேன்—சேகரித்தேன். பாலத்தைப் பற்றிய நாட்டுக் கதைகள், புராணக் கதைகள், சரித்திரக்கதைள் எல்லாவற்றை யும் ஒன்று சேர்த்து அவைகளிலிருந்து உண்மை விவரங்களேக்கடைந்து எடுத்து ஒரு பெரிய ஆராய்ச்சிக்கட்டுரை எழுதி னேன். இந்தக்கட்டுரையினுல் பேரும் புகழும் கிட்டும், நாட்டிற்கும் சேவை செய்ததுபோல் ஆகும் என்று எண்ணி னேன். பாலத்தைப்பற்றிய விவரங்களி லிருந்து பல அதிசயமான உண்மைகள் வெளிப்பட்டன. சிக்கலான பல பெரிய விஷயங்கள்—சரித்திரநிபுணர்களால் இது வரையில் தீர்க்கப்படாத விஷயங்கள்—இந்த ஆராய்ச்சிக்கட்டுரையால் தீர்க்கப்படு மென்று தீர்மானமாக நம்பினேன்.

ஆனல் என்னுடைய மனக்கோட்டை எல்லாம் ஒருநிமிஷத்தில் இடிந்து தரை யோடு தரையாகிவிட்டது. இந்திய விமர் சகர்களும், வேறு தேச சரித்திரநிபுணர் களும் என்னுடைய கட்டுரையைச் சின்ன பின்னப்படுத்தி "அபத்தம்" என்று சாதித்துவிட்டனர். என்மனதிற்கே அவர் களுடைய வாதத்திற்குமுன் என் சாதனே கள் ஊற்றுக்கு நிற்கா என்றுபட்டது. இதற்குமேல் என்னசெய்வது என்று மூளே தீவிரமாக வேலேசெய்தது. நான் நிரூபணம் செய்ய முயன்றிருக்கும் விஷயங்கள் என்னவோ உண்மைகள்என்று மனதிற்குக் கண்டிப்பாய்ப் பட்டது. பின் ஏன் இது நிபுணர்கள் குழாமில் அங்கீகாரம் பெற வில்லே? இதற்குப் பதில் கிடைக்காமல் போகவில்லே. முக்கியமான ஆதாரங்கள் சிலவற்றைத் நான் திரட்டவில்லே, அல்லது புறக்கணித்து விட்டேன் என்று பட்டது. இவைகள் என்னஎன்று கண்டுபிடித்து ஒரு வராலும் என்னுடைய ஆராய்ச்சியைப் பற்றி அப்பழுக்குச் சொல்ல முடியாத வகையில் ஸ்தாபிதம் செய்யவேண்டும். இந்தத் தீர்மானத்திற்கு வந்தபிறகு மறு படியும் வேலேயைத் துவக்கினேன்.

இதற்கு மத்தியில் எனக்கு ஒரு அநாம தேயக் கடிதம் வந்தது. அதில் கண்டிருந்த விஷயங்கள் எனக்கே ஆச்சர்யத்தை உண்டு பண்ணினது. டாக்டர் சீதா ஒரு சரித்திர ஆராய்ச்சியாளர் என்றும் அவர் இந்த "அரண்மனேப் பாலத்"தைப் பற்றிய ஆராய்ச்சியில் மிகவும் சிரத்தையுள்ளவர் என்றும், அவரிடம் பழகுவதில் நான் மிகவும் ஜாக்ரதையாக இருக்க வேண்டு மென்றும் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.

பாஸ்கரபுரத்திலேயே டாக்டர் சீதாவை நான் பல முறைகள் இந்த ஆராய்ச்சி விஷயமாகப் போயிருக்கும் பொழுது சந்தித்திருக்கிறேன். ஒவ்வொரு தடவை யும் அவரைச் சந்திக்கும் பொழுது அவர் பால் என் மனம் இழுத்துச் செல்லப் பட்டதே யொழிய, அவரிடம் சந்தேகப் படுவதற்கோ, வெறுப்பு ஏற்படுவதற்கோ காரணம் ஏற்பட்டதே யில்லே. இந்த மாதிரி சந்தித்த ஒவ்வொரு சமயங்களிலும் நான் அவரிடம் என்னுடைய ஆராய்ச்சி எவ்விதம் முன்னேறி வருகிறது என்று விரிவாகக் கூறியிருக்கிறேன். அவர் என் னுடைய வரலாற்றை ஆர்வத்துடன் கேட்ப தன்றி ஒரு விதமான திருத்தங்களும்

சொல்லுவதில்லை. இரண்டொரு சமயங்களில் அவர் எந்த விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறார் என்று அறிய ஆவல் கொண்டதுண்டு. ஆனால் அவர் சங்கோசப்படுவதாகத் தோன்றியதால் இந்த விஷயத்தை மேலும் தூண்டிக் கேட்கவில்லை. ஆகையால் அந்தக் கடிதத்தில் கண்ட விஷயங்களைப் பெரிய பொருட்டாக நான் எடுத்துக் கொள்ளவில்லை.

மறுபடியும் நான் என்னுடைய முயற்சியில் வெற்றிபெற வேண்டுமேயாகில், என் முழுக்கவனத்தையும் இந்த விஷயத்தில் திருப்பவேண்டும் என்று பட்டது. மேலும் பாஸ்கரபுரத்திலேயே ஒரு மாத காலம் தங்கி எஞ்சிய ஆதாரங்களையும் சேகரித்து வருவது என்று தீர்மானித்தேன். பாஸ்கரபுரத்தில் தங்கிய ஒரு மாதத்தில் வேலை நேரம் போகப் பாக்கி வேளைகளில் அதைச் சுற்றியுள்ள பரந்த வெளிகளில் உலாவுவதற்குப் போவது வழக்கம். இவ்விதம் ஒரு நாள் உலாவி விட்டு வரும் பொழுது அந்தி மறைந்து விட்டது. எங்கும் இருள்கவிய ஆரம்பித்து விட்டது. இருட்டிற்குமுன் வீடுபோய்ச் சேரவேண்டுமென்று அவசர, அவசரமாக நடக்க ஆரம்பித்தேன். மனதில் என்னவோ அன்று நிம்மதிக் குறைவாக இருந்தது. பல விஷயங்கள்—நடந்தவை, நடக்கப் போகின்றவை, இவைகளை எண்ணி மனதைக் குழப்பிக்கொண்டு நடந்தேன். சுற்றும் பரவிக்கொண்டிருந்த அந்தகாரம் என் மனதிலும் புகுந்துவிட்டது.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் உள்ள மணற்குன்றின் பின்னால் ஏதோ ஆடைகள் அசங்குவதுபோல் தென்பட்டது. ஊன்றிப் பார்த்தபோது டாக்டர் சீதா யாரோ ஒருவரிடம் என்னைச் சுட்டிக் காட்டுவது தெரிந்தது. நிர்மலமான மனதில் எப்பொழுதும் சந்தேகம் ஏற்படுவதில்லை. குழம்பி இருந்த என் மனதில் குப்பென்று ஏதோ சந்தேகம் தோன்றியது. பல எண்ணங்கள் அலைமோதிக்கொண்டு வந்தன. இந்த அலை வரிசையில் அநாமதேயக் கடிதமும் தோன்றி மறைந்தது.

காற்று ஓட்டமே நின்றிருந்தது அப்பொழுது. பக்ஷிகள் சிறகடித்துக்கொண்டு மரக் கிளைகளில் இருந்த தங்கள் கூடுகளில் அடையும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. இரவில் சஞ்சரிக்கும் பறவைகளும், மிருகங்களும் கிளம்புவதற்கு அறிகுறியாக அவைகளின் துர்நிமித்தமான சப்தங்களும் ஊளையும், கேட்க ஆரம்பித்தன.

சற்று உற்றுக்கேட்டதில் சுற்றியிருந்த மரங்களின் இலைகள் சப்தித்தன. காற்றோட்டமே இல்லாத சமயத்தில் இலைகள் சல சல வென்றுசப்தித்தது ஆச்சர்யமாக இருந்தது.

திடீரென்று அரண்மனைப் பாலத்தைப் பற்றி உலாவி வரும் கதை ஞாபகம் வந்தது. அதைப்பற்றிச் சிந்தனை செய்து கொண்டு சில தப்படிகள் நடந்திருப்பேன். நான்குதிக்கிலிருந்தும் பலர் ஓடி வருவது தெரிந்தது. பிறகு முதுகிலும் தலையிலும் பல அடிகள் விழுந்தன. பிரக்ஞை மாத்திரம் இழக்கவில்லை. அவர்கள் மலை ஜாதியினர் என்று அவர்கள் பேச்சிலிருந்து தெரிந்து கொண்டேன். அவர்கள் என்னைப் பலவிதமாகத் திட்டினார்கள் என்பதை அவர்கள் பல்லைக் கடிப்பதிலிருந்தும், கோபமாகப் பேசுவதிலிருந்தும் தெரிந்துகொண்டேன். பிறகு அவர்கள் என்னைக் காலையும், கையையும் கட்டித் தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தனர். எங்கே தூக்கிக்கொண்டு போகிறார்கள், என்ன செய்யப்போகிறார்கள்என்று திகில்பட்டு என் இருதயமே நின்று விடும் போல் ஆகிவிட்டது. கடைசியாக எனக்கு ஞாபகம் இருக்கும்பொழுது, ஒரு மரக் கிளையிலிருந்து என்னைத்தலைகீழாகத்தொங்க விடுகிறார்கள் என்பதை உணர்ந்தேன்.

பிறகு நடந்தவைகளை வெகு சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். என்னைக் கட்டித் தொங்கவிட்டிருந்த மரக்கிளை என் பளுவைத் தாங்காமல் முறிந்துவிட்டது. என் நல்ல காலம், இல்லையேல் அன்று என் உயிர் போனதுதான். என்னைத் தொங்க விட்டிருந்த இடம் அந்தப் பாலத்தின் சமீபம்தான். கிளையுடன்கூடச் செங்குத்தாக விழுந்ததால் என் தலையில் பலத்தகாயம் பட்டிருந்தது. அது ஆற வெகுநாட்கள் பிடித்தன. தழும்பு மாத்திரம் இன்னும் இருக்கிறது. இந்தத் தழும்புதான் என்னுடைய வருங்காலக் கீர்த்திக்குக் காரணம் என்று அப்பொழுது சொல்லியிருந்தால் சொல்லத் துணிந்தவன் கன்னத்தை அடமானம் விட்டுத்தான் வரவேண்டும். அரண்மனைப் பாலத்திற்கு என்னை அந்த மலை ஜாதியினர் பலி கொடுத்திருக்கின்றனர் என்று யூகித்தேன். இந்த யூகத்திலிருந்து ஒரு பெரிய சித்தாந்தத்தைச் சாதிப்பதற்குள்ள வாதங்களை மனதில் ஜோடித்தேன். மின்னல்போல் பாசிபிடித்திருந்த கல்வெட்டுகளுக்கும். மலை ஜாதியினர் என்னைப் பலி கொடுக்க விரும்பியதற்கும் ஒரு தொடர்பை என்மனது சித்திரித்தது. கல்வெட்டுகளை மறுநாள் பரிசீலனை செய்வதற்குள், என்மனதில் ஏற்பட்டிருக்கும்

பதினாயிரக் கணக்கான சிந்தனைகளைச் சொன்னால், இப்படியும் ஒரு பைத்தியக்காரன் உண்டா என்று சிரிப்பாய்.

அரண்மனைப் பாலத்தைப் பற்றிய கதைகள் ஒருபுறம் இருக்க, அதைப்பற்றி நான் ஆராய்ந்த உண்மைகளை, நான் இனி சொல்ல வேண்டியது அவசியம்.

சுமார் ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன் பாஸ்கரபுரம் ஆரியவம்சத்து அரசனான சர்வஜித்தின் கீழ் இருந்தது. பாஸ்கரபுரம் அப்பொழுது ஆரியவர்த்தனத்தில் நாகரிகத்திற்குப் பெயர் போனதாக இருந்தது. சுற்றியிருந்த அரசர்கள் இந்த ஜனங்களின் நாகரிகமுறையையே காப்பியடித்தனர். 19ஆம் நூற்றாண்டில் பிரான்ஸின் நாகரிகத்தைப் பிரிட்டிஷ்மக்கள் எவ்விதம் காப்பி அடித்தனரோ அதே மாதிரி பாஸ்கரபுரத்தின் நாகரிகத்தை ஆர்யவர்த்தனத்தில் காப்பியடிக்காதவர் கிடையாது.

ஆனால் சர்வஜித்தின் ஒரு குறுகிய நோக்கத்துடன் கூடிய ஆட்சி முறையால் பாஸ்கரபுரம் சுற்றியுள்ள தேசங்களுடன் தொடர்பை இழந்தது. சரியான ரஸ்தாக்கள் இல்லாததால் வியாபாரப் போக்குவரத்து குறுகியது. வீட்டிற்குள் நம்மையே நாம் பல வருஷங்கள் போட்டுப் பூட்டி வைத்து விட்டால் நம் நிலைமை எவ்விதம் இருக்கும்? ஒருநாட்டு மக்களையே அவ்விதம் பூட்டிவைத்தால் கேட்க வேண்டுமா? அந்த நாட்டின் நாகரிகம் ஒழிந்து போவதில் சந்தேகம் உண்டா? பாஸ்கரபுரம் ஒரு பெரிய நாடாக இருந்தது ஜனங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறிவிட்டதால் க்ஷீணித்தது. சிலநாட்களுக்குள் சுற்றியிருந்த அரசர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றனர். ஒருசமயத்தில் நாகரிகத்திற்குப் பெயர்போன அதன் ஜனங்கள் இப்பொழுது காட்டுமிராண்டிகளாகக் கருதப்பட்டார்கள். கொஞ்சம், கொஞ்சமாக அவர்கள் காட்டிற்குள் துரத்தப்பட்டனர். ஓண்ட வந்த மற்றத் தேசத்து அரசனுடைய ஜனங்கள் செழித்தனர். என்னை மரத்திலிருந்து தலை கீழாகத் தொங்கவிட்ட மலை ஜனங்கள் ஒரு காலத்தில் பிரசித்தியாக இருந்த சர்வஜித்தின் பிரஜைகளின் சந்ததிகள்.

சர்வஜித் உன்னத நிலையில் இருக்கும் பொழுது பக்கத்துத் தேசத்தைப் புருஷோத்தமன் ஆண்டு வந்தான். சர்வஜித்திற்கும் புருஷோத்தமனுடைய பெண் பிரதிமாவிற்கும் நட்பு ஏற்பட்டு, காதல் மணம் புரிந்து கொண்டனர். இந்த நட்பின் சின்னமாகப் புருஷோத்தமன் இரண்டு தேசங்களுக்கும் நடுவில் இருந்த பெரிய காட்டாற்றில் ஒரு பாலத்தைக் கட்டினான். அந்தப்பாலம் சர்வஜித்தின் அரண்மனைக்கு எதிரில் இருந்ததால் அதை ஜனங்கள் அந்த நாளிலிருந்து ''அரண்மனைப் பாலம்'' என்று அழைத்தனர். பாலத்தில் இருந்த சித்திரங்கள் சர்வஜித்தின் காதல் மணத்தைச் சித்திரிக்கின்றன. அந்தச் சித்திரங்களிலிருந்துதான் கி. மு. 400-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் நாகரிகத்தின் உன்னத நிலைமை நமக்கு இப்பொழுது தெரிகிறது. துர்க்கையைப் பாலத்தின் அதிதேவதையாக நிர்மாணித்திருப்பதாகவும், அதை ஹானிவராமல் காப்பாற்ற வேண்டியது ஜனங்கள் பொறுப்பு என்றும் அன்புதான் ஜனங்களின் வாழ்க்கைக்கு ஆதாரம் என்றும் அந்தப்பாலம் அவ்விதமான அன்பின் சின்னம்தான் என்றும் கல்வெட்டில் கண்டிருந்தது.

இதுதான் பாலத்தைப் பற்றிய கதை. ஆனால் அதிலிருந்து நமக்கு ஒரு பெரிய தலைமுறையின் கதையே தெரிய வில்லையா? நான் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையில் இந்திய நாகரிகம்தான் மிகப் புராதானமானது என்று சாதிக்க முயன்றிருந்தேன்.

பாலத்தை இடித்துத்தள்ளப் போகிறார்கள் என்ற பேச்சு பாஸ்கரபுரத்தில் கொஞ்ச நாளாக இருந்து வருகிறது. அதற்குக் காரணம் நான்தான் என்று மலை ஜாதியினர்களுக்கு யார் சொன்னார்களோ தெரியாது. அதனால்தான் என்னிடம் வஞ்சம் தீர்த்துக்கொள்ள அவர்கள் விரும்பினார்கள்.

இது ஒருபுறம் இருக்க, இந்தப் பாலத்தை இடித்துத் தள்ளப் போகிறார்கள் என்று கேட்க என் மனதிலேயே சொல்ல முடியாத ஒரு திகில் ஏற்பட்டிருக்கிறது. டாக்டர் சீதாவிடம் எனக்கு ஒரு சமயம் சந்தேகம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால் அந்தச் சந்தேகம் நீடித்து என் மனதில் வேரூன்றி நிற்கவில்லை. இன்னமும் இந்த அரண்மனைப் பாலத்தை நான் எங்களுக்குள் வளரவிருக்கும் காதல் விருக்ஷத்தின் சின்னமாகவே கருதுகிறேன். இந்தப் பாலத்தை இடித்துத் தள்ளினால் எங்கள் காதலும் இடிந்து விழுந்துவிட்டதாகத்தான் கொள்ள வேண்டுமோ என்னவோ? காதல் என்று என்னவெல்லாமோ எழுதுகிறாயே சீதாவிற்கும் உன்னிடம் காதல் உண்டா என்று கேட்கலாம். அதைப்பற்றி இதுவரையில் நான் சீதாவைக் கேட்டதில்லை. அவளுக்கு

என்னிடம் காதல் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நான் அவளை மனமார நேசிக்கிறேன்.

நண்பா, இப்பொழுது என்முன் உள்ள பிரச்னை இந்தப் பாலத்தை வீழ்த்தாமல் காப்பாற்ற வேண்டியது. இரண்டாவதாக என்னுடைய மனதிற்கும் சீதாவின் மனதிற்கும் மத்தியில் ஒரு அன்புப் பாலத்தை ஏற்படுத்த வேண்டியது. இதில்தான் உன்னுடைய உபகாரத்தை நான் நாடுகிறேன்.

இப்படிக்கு
உன் பிரியமுள்ள நண்பன்
சந்திரமௌளி

* * *

சிவநகரி
16—6—'39

அத்தான் சேகரனுக்கு,

அநேக நமஸ்காரம். வெகுநாட்களுக்குப் பிறகு உங்களுக்குக் கடிதம் எழுதுவதில் எனக்கு ஆநந்தம். அதுவும் என் பிற்கால வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய முக்கிய விஷயங்களைப் பற்றி உங்களுக்கு எழுதுவதைவிட வேறு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய விஷயம் எனக்குக் கிடையாது. நமக்குள் இருக்கும் உறவு ஒருபுறம் இருக்கட்டும். நமது சிறுவயதில் ஏற்பட்ட குழந்தைப்பிராய நட்பை மறக்க முடியுமா? ஆகையால் என்மனதில் இருக்கும் விஷயங்களை உங்களுக்குத் தெரியப்படுத்துவதில் தப்பு உண்டா? முக்கியமாக, சரித்திர நிபுணர் சந்திரமௌளியைப் பற்றிக் கேட்டு எழுதியிருந்தீர்கள்.

எடுத்த எடுப்பிலேயே சொல்லி விடுகிறேன். சந்திரமௌளி அவர்களை நான் மனமாரக் காதலிக்கிறேன் என்று சொன்னால் போதாது. அவரை என்னுடைய உயிரையும்விடப் பெரிய பொக்கிஷமாக மதிக்கிறேன்.

நான் "அரண்மனைப் பாலத்"தைப் பற்றிய சரித்திர ஆராய்ச்சியில் சிலகாலமாக ஈடுபட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். நான் அது விஷயமாக என் தகப்பனாருடன் பாஸ்கரபுரம் போய் வந்து கொண்டிருந்தேன். அங்கேதான் நான் முதன்முதலில் அவரைச்சந்தித்தது. அவரும் நான் செய்யப்புகுந்த ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருக்கிறார் என்பது தெரிந்ததும், அவருடன் போட்டியாக வேலை செய்யக் கூடாது என்று தீர்மானித்தேன். ஆனால் அவருக்கு ஆராய்ச்சியில் உபயோகமாக இருக்கக் கூடியவிஷயங்களைத் திரட்டிக் கொடுக்க எண்ணி அந்த வேலையில் ஈடுபட்டேன். சிலதினங்களுக்கு முன்தான் என்னுடைய குறிப்புக்களை அவருக்கு அனுப்பிவைத்தேன். ஆனால் என் மனதில் இருந்த இந்த எண்ணங்களை நான் அவருக்குச் சொன்னதேயில்லை. நான் அவ்விதம் செய்வதை விரும்பமாட்டார் என்று எண்ணி அவரிடம் சொல்லாமலே காரியத்தை முடித்தேன். என்னுடன் எங்கள் ஆராய்ச்சிச்சாலையில் வேலைசெய்யும் ஒருசகோதரி என்னிடம் கொஞ்சம் பொறாமையுள்ளவர். அவர்கூட என்னைப் பற்றி விபரீதமாக ஒருகடிதம் எழுதியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதிலிருந்து அவரைச் சந்தித்தபோதெல்லாம் அவர் அவ்வளவு சுமுகமாக என்னிடம் பேசவில்லையென்றே எனக்குப் பட்டது. ஆகையால் இந்த விஷயத்தில் உங்களுடைய உதவியை எதிர்பார்க்கிறேன்—வரவேற்கிறேன்.

இப்படிக்கு
சீதா

* * *

13—7—39-ல் வெளியான தினசரிகளில் கீழ்க்கண்ட செய்தித் துணுக்குகள் ஒன்றன் கீழ் ஒன்று பிரசுரமாகியிருந்தன.

"பிரசித்திபெற்ற சரித்திர நிபுணர்கள் சந்திரமௌளி அவர்களுக்கும், சீதாவுக்கும் 10-7-39-ல் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது"............

"அரண்மனைப்பாலம்' என்ற பாலத்தை இடிப்பதாக இருந்த எண்ணத்தைச் சர்க்கார் கைவிட்டனர். சரித்திரச் சின்னங்களைக் (Historical Monuments Act) காப்பதற்காக உள்ள சட்டத்தின்கீழ் அதையும் பிரகடனம் செய்திருக்கின்றனர்."

# வானவில்லின் வண்ணங்கள்

நா. கி. நாகராசன்

அந்தி நேரத்தில், வான் வெளியில் ஒரு எழில்மிகு பாதைபோல் கண்கவர் தோற்றத்துடன் விளங்கும் வானவில் மனித உள்ளத்தின் மேதை கவியுருவாய் வெளிவரப் பன்முறை உதவியுள்ளது. விளிம்பில் ஊதா நிறமும், உட்புறம் செந்நிறமும் கொண்டு விளங்கும் இது வானத்தில் நீர்த் துளிகள் உள்ள போதுதான் தோன்றுகிறது. சின்னஞ்சிறு நீர்த்துளிகளின் வழியே வெண்ணிறக் கதிரொளி பாயும் போது அது ஏழு நிறங்களாகப் பிரிந்து வில் போல் தோன்றுகிறது. ஏனெனில் நாம் வெண்மையாகக் காணும் ஒளி வான வில்லிலுள்ள ஏழு நிறங்களால் ஆனது. பல்வகை நிறங்கள் கலந்து தூய்மையான வெண்ணிறத்தைத் தோற்றுவிப்பதுபோல், பல முரண்பாடான சமயங்களும் கலந்து குறிப்பது ஒரே பரம்பொருளையேயாம்.

மிக்க, வெண்மையான ஒளி ஏழுவகை நிறங்களின் கலப்பு என்பதை முதன் முதற் காட்டியவர் சர். ஐசாக்கு நியூட்டன். இவர் செய்த சோதனையில் முப்பட்டை வடிவான ஒரு கண்ணாடியின் வழியே கதிரொளிக் கற்றை யொன்று செல்லுமாறு அமைத்தார். முப்படையின் வழியே வந்த ஒளிக் கற்றையைச் சுவரின்மேல் விழச் செய்தார். அப்போது அது வானவில்லின் ஏழு நிறங்களையும் கொண்ட ஒரு மாலையை யொத்திருந்தது கண்டார். இத்தகைய நிறத் தொடருக்கு நிறமாலை (Spectrum) எனப் பெயர். வெண்ணிற ஒளியிலுள்ள ஏழுவண்ணங்களும் முப்பட்டையின்வழியே செல்வதால் தனியாகப் பிரிந்து விடுவதால் தான் இது தோன்றியது என நியூட்டன் முடிவுகட்டினர். இம் முப்பட்டைக்கு எதிராக அமைக்கப்பட்ட இன்னொரு முப்பட்டையின் வழியே ஒளிக் கற்றையைச் செலுத்த, பிரிந்த ஒளி மீண்டும் கூடி வெண்மையாகவே காணப்பட்டது. இவ்வாறு முப்பட்டையின் வழியாகவோ, நீர்த்துளியின் வழியாகவோ கலப்பு ஒளி தனியே பிரிவதை ஒளிப் பிரிதல் எனப்படும்.

சூட்டினுலோ, வேறு காரணங்களாலோ ஒளிரும் ஒரு பொருளிலுள்ள அணுக்கள் வெகு விரைவாய் இயங்கி நம் கண்ணுக்குப் புலனாக ஒருவகை அலைகளைத் தோற்றுவிக்கின்றன. இவைமின்னியல்பு கொண்டிருத்தலால் மின்காந்த அலைகள் (Electro-Magnetic Waves) எனப்படும். இவ்வாறு தோன்றும் அலைகளின் நீளம் பலவேறு அளவுள்ளதாக விருக்கும். ஒளிரும் பொருளிலிருந்து தோன்றும் அலைகளின் நீளம் அதிகமானல் அது செந்நிறமாகவும், குறைவானல் நீலம் அல்லது ஊதா நிறமாகவுமிருக்கும். சிவப்புநிற ஒளியின் அலைகளைவிட நீண்ட அலைகளுமுண்டு. இவை அகச் சிவப்பு அலைகள் எனப்படும். சூட்டலைகள் இத்தகையனவே. ஊதாநிற ஒளியின் அலைகளைவிடக் குறுகியவை புறஊதா அலைகள் எனப்படும். இவை மருத்துவத்தில் பயன் படுகின்றன. உடலை ஊடுருவி நம் உறுப்புகளைக் காட்டும் X-கதிர்களும் (X-Rays), வானவெளியி லிருந்து நம்மை வந்தடையும் விசும்புக் கதிர்கள் (Cosmic Rays) எனப்படும் மர்ம அலைகளும் குறுகலான மின்காந்த அலைகளே. ஆகையால் ஒருவன் ஈட்டும் பொருளுக்குத் தகுந்தவாறு அவன் குணமும் மாறுபடுவது போல் அலை நீளத்திற்குத் தக்கவாறு ஒளியின் நிறமும் மாறுபடும். வெவ்வேறு நீளங்கொண்ட ஒளியலைகள் நீர், கண்ணுடி முதலிய பொருள்களின் வழியே செல்லுங்கால் வெவ்வேறு வேகத்துடன் செல்வதால் தனித்தனியே பிரிந்து நிறமாலையைத் தோற்றுவிக்கின்றன.

நியூட்டன் கதிரொளியைக் கொண்டு செய்த சோதனையில் சிவப்புமுதல் ஊதா வரை எழுநிறங்களும் ஒன்றை யொன்று அடுத்துத் தொடர்ந்து பட்டைகளாகக் காணப்பட்டன. பழுக்கக்காய்ச்சிய இரும்புத் துண்டையோ, தணலையோ முப்பட்டை வழியே நோக்கினும் காணப்படும் நிறமாலை இத்தகையதாகவே இருக்கும். ஒளிரும் கட்டிப் பொருள்கள் (Solids) இத்தகைய நிறமாலையையே தோற்றுவிக்கும். இது தொடர்நிறமாலை (Continuous Spectrum) எனப்படும்.

ஆனல் ஒரு வாயுப்பொருளை ஒரு குழலிலிட்டு அதன் வழியே மின்சாரத்தைப் பாய்ச்சி அதைச் சூடேற்றி ஒளிரச் செய்து அதன் நிறமாலையை ஆராய்ந்தால் அது முன் கூறியதைப் போன்ற தொடர்ச்சியான பட்டைகளாக இருப்பதில்லை. வெவ்வேறு நிறங்கொண்ட சில வரைகளே அதில்

காணப்படும். ஆகையால் இத்தகைய நிறமாலையை வரை நிறமாலை (Line Spectrum) என்பர். எடுத்துக்காட்டாக, சிறிதளவு உப்பைத் தீயிலிட்டால் அதிலுள்ள உவரம் (Sodium) என்னும் பொருள் ஆவியாகி, தீயை மஞ்சள் நிறமாக்குகிறது. இப்போது தீயை முப்பட்டை வழியே நோக்கின், அடுத்தடுத்து இரு மஞ்சள் வரைகள் மட்டும் காணப்படும், தொடர்நிற மாலையைவிட, வரைநிறமாலையே விஞ்ஞானிக்குப் பெரிதும் பயன்படுவதாகும். உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் 92 மூலப் பொருள்களாலானவை. இவை தனிமங்கள் (Elements) எனப்படும். ஒவ்வொரு தனிமத்திற்கும் தனிப்பட்டதொரு நிறமாலையுண்டு. இரு பொருள்களின் நிறமாலைகள் ஒரேவகையாய் இருப்பதில்லை. அகத்தினழகை நாம் முகத்திலிருந்து அறியக்கூடும். அதுபோலவே ஒரு பொருளிலுள்ள தனிமத்தையும் அதன் வரைநிறமாலையினால் அறியலாம். இக்காரணத்தினால் நிறமாலைகளின் ஆராய்ச்சி விஞ்ஞானத்தில் மிக முதன்மையானதெனக் கருதப்படுகிறது. ஒரு ஒரு பொருளில் ஒரு அவுன்சில் $\frac{1}{300,00,00,000}$ பகுதி ஒரு தனிமம் இருப்பினும் பொருள்களின் நிறமாலையில் அது தான் இருப்பதை அறிவித்து விடுகிறது. ஆகையால் நிறமாலைச் சோதனை வியத்தற்குரிய நுணுக்கமுடையது என்பது தெளிவு. ஆகையால் நிறமாலையியல் விஞ்ஞானியின் பயனுள்ள கையாளாக விளங்குவதன் காரணமும் இதுவே.

நிறமாலைச் சோதனை முதன் முதலில் வானநூலில் பயன் பட்டது. கதிரொளியின் நிறமாலையை விரிவாய் ஆராய்ந்ததில் அதில் காணப்படும் வரைகளிலிருந்து பரிதிப்பிழம்பிலுள்ள தனிமங்கள் எவை என்பது புலனாயிற்று. எட்டுக் கோடி




## போற்றத்தக்க சேவைதான்

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதற்கு தீயணைப்பாளரின் தீரமான சேவைதான் காரணம். அதோடு நல்லவேளை, உங்கள் இருப்பிடம் இன்ஷ்யூர் செய்யப்பட்டிருந்தது. இனி நஷ்டஈடு எங்கள் பொறுப்பாகும்.

பிருத்வி பரிபூரண பாதுகாப்பளிக்கிறது.

**பிருத்வி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிட்டெட்.**
12, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை.1.

CP/P/112

மைலுக்கப்பாலுள்ள கதிரவனது கோளத்தின் தன்மையை நிறமாலைகளை ஆராயும் சின்னஞ்சிறு கருவி ஆய்வுகளத்தில் அறிவித்தது விந்தையிலும் விந்தையே! இவ்வாராய்ச்சியின் போது நிகழ்ந்த இன்னொரு நிகழ்ச்சியும் ஈண்டுக் குறிக்கற்பாலது. சூரியனது நிறமாலையில் காணப்பட்ட சிலவரைகள் அப்பொழுது புவியில் அறியப்பட்டிருந்த எத்தனிமத்திற்கும் ஏற்றதாக இருக்கவில்லை. ஆகையால் அது புவியிலில்லாத ஒரு புதுத் தனிமத்தின் வரைகள் என லாக்கியர் (Lockeyer) என்னும் விஞ்ஞானி தீர்மானித்தார். பரிதியில் காணப்பட்ட இத் தனிமத்திற்குப் பரிதியம் (Helium) எனப் பெயரிடப்பட்டது. இதற்குச் சில ஆண்டுகளின்பின் இது அமெரிக்காவில் மண்ணெண்ணெய் ஊற்றுக்களினருகே இது இயற்கையாகவே வெளிவருவது தெரிந்தது. ஆகையால் இவ்வாயுப் பொருள் நாம் வாழும் புவியிலிருப்பதையறியுமுன், கோடிக்கணக்கான மைல் தூரத்திலுள்ள சூரிய பிம்பத்திலுள்ளதை நிறமாலைச் சோதனையினால் அறியமுடிந்தது.

பரிதியத்தைத்தவிர வேறு தனிமங்களும் நிறமாலை ஆராய்ச்சிகளால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இம்முறையில் முன்னரே தெரிந்துள்ள தனிமங்களின் இரசாயன உப்புக்களைச் சூடேற்றி, ஆவியாக்கி அவற்றின் நிறமாலைகளை வெகு கவனத்துடன் ஆராய்வர். அவற்றில் புது வரைகள் ஏதேனும் தோன்றினால், அவை புதுத்தனிமங்களின் வரைகளே என முடிவுகட்டி, அதை அந்த இரசாயனப் பொருளிலிருந்து பிரிக்க முயல்வர்.

தற்காலத்தில் மிக அதிகமாக வழங்கும் இரும்பு, செம்பு, அலுமினியம் போன்ற உலோகங்கள் தனியே பயன்படுவதில்லை, இவற்றை மற்ற உலோகங்களுடன் கலந்து தேவைக்குத் தகுந்தவாறு இவற்றின் தன்மையை மாற்றியே பயன்படுத்துகிறார்கள். ஒரு கலப்பில் மிகச்சிறிய அளவில் உள்ள உலோகங்களும் அதன் தன்மையைப் பெரிதும் மாற்றிவிடக் கூடும். வேறுமுறைகளில் கலப்பில் சிறு அளவில் உள்ள உலோகங்களை அறிய இயலாது. ஆனால் நிறமாலையோ, கலப்பிலுள்ள எல்லா உலோகங்களையும் கண்கூடாகக் காட்டிவிடும். ஆகையால் நிறமாலை முறை பொறி நூலிலும், தொழிலிலும் பெரிதும் பயன்படுகிறது.

இமயமலைச்சாரல் போன்ற மலை நாடுகளில் மிக அதிகமாக உள்ள ஒரு நோயின் காரணத்தையும் நிறமாலைச் சோதனையே தெளிவாக்கியது. அங்குவாழும் மக்களிடையே தொண்டைக்கட்டி (Goitre) மிகப் பொதுவாக உள்ளது. இதன் காரணம் வெகு நாட்கள் வரை விளங்கவில்லை. ஆனால் அப்பகுதிகளின் குடிதண்ணீரை ஆராய்ந்ததில், உடல் நலத்திற்கு இன்றியமையாத ஊதிதம் (Iodine) என்னும் தனிமம் அங்கு இல்லை என்பது தெளிவாயிற்று. இது தண்ணீரில் மிகக் குறைந்த அளவே உள்ளது. ஆகையால் நிறமாலை முறையைத் தவிர வேறு முறைகளில் இவ்வுண்மையை அறிந்திருக்க முடியாது. பல இடங்களிலும் குடிதண்ணீரின் தன்மையை ஆராய நிறமாலை முறை வழங்குகிறது.

உடல் நூலிலும் நிறமாலை முறை வழங்கத் துவங்கியுள்ளது. நம் உடல் நலத்திற்கு மாவுப் பொருள், கொழுப்பு, பிசிதம் போன்ற உணவு வகைகளைத் தவிர சிறு அளவுகளில் வேறு உலோகங்களும் தேவை என்பது அண்மையில் நடந்த சோதனைகளால் விளங்கியுள்ளது. இவை தேவைக்குச் சிறிது அதிகமானாலும் நோயை விளைவிக்கும். இவ்வுண்மைகளால் பல்வகைப் பிணிகளின் காரணமும், அதைத் தடுக்கும் வகைகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இச் சோதனைகள் நிறமாலை முறையின் உதவியின்றி வெற்றியடைந்திரா. இம்முறையின் நுணுக்கமே உடலியலாராய்ச்சியில் உதவியது.

தவிர, உதிரச் சோதனையிலும் இது பயன்படுகிறது. மிக இலேசான இரத்தக் கறையையும் இது அறிவித்து, அது மனித இரத்தமா என்பதையும் தெளிவாக்கிப் போலீஸாருக்கு இது பன்முறை உதவியுள்ளது. நியூட்டன் முதன் முதலில் ஒளிப்பிரிவுச் சோதனையை நடத்தியபோது அவர் தாம் கண்டுபிடித்த விஞ்ஞான உண்மை பிற்காலத்தில் இவ்வளவு தூரம் பலதுறைகளிலும் பயன்படுமென அவர் கனவிலும் கருதியிருக்கமாட்டார் என்பது திண்ணம். சமூகத்திற்கு உடனடியாகப் பயன்படாத அடிப்படையாராய்ச்சியின் முடிவுகள் பிற்காலத்தில் எவ்வளவு பயன் தரலாமென்னும் உண்மைக்கு நிறமாலை முறை மூதன்மையான எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
of the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

198084
சென்னை-600 008


AS 330
இன்றியமையாதது
Plan
அழகு, சவுகரியம், சிக்கனம் இவைகளை மனதில்
இருத்திக்கொண்டேதான் நாம் வீடு கட்டுகிறோம்.
ஆனால் எண்ணங்கள் மட்டும் பயன்படாது.
இதைக்கொண்டு நாம் வகுக்கும் திட்டம்,
பிளான்தான் இவ் அம்சங்களை நமக்கு அளிக்
கிறது. சிற்பி, கொத்தன், எஞ்சினியர், ஆகிய
அனைவரும் பிளானை ஒட்டியே நடந்து நாம்
கற்பனை செய்த இல்லத்தை எழுப்புகிறார்கள்.
அழகிய சருமத்தையுடைய
அணங்கின் முக்கிய சாதனம்
நல்ல மறுதளிக்க முடியாத
குணம் படைத்த ஸோப்—ஆம்,
அத்தகைய கட்டி மலபார்
லிம்டா ஸோப்தான்.
MALABAR
LIMDA
LIMDA
மலபார்
லிம்டா சோப்
வெஜிடபில் சோப் ஒர்க்ஸ்
கள்ளிக்கோட்டை
புரொப்ரைடர்ஸ்: சேட். N.P. & கோ. கள்ளிக்கோட்டை.. பம்பாய்.. சென்னை...

Regd. No. M 4405 CAUVERI



டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல் அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு அகமகிழ்கிறாள்

இம் மகிழ்ச்சியை நீங்களும்
- எளிதில் அடையலாம் -

டி. எஸ். ஆர்.

# கோகுல் கூந்தல் தைலம்

சந்தனாதித் தைலம், அரைக்கீரைவிதைத் தைலம்

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு திருவல்லிக்கேணி

**T. S. R. & CO.** PERFUMERS KUMBAKONAM

Cauveri Colour Press, Kumbakonam.